
KALKI 30-12-1973

50 காசு

கல்கி





அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்பூரில் நம் நாட்டின் முதல் எஃகுத் தொழிற்சாலை நிறுவப்பட்ட காலந்தொட்டு, தன்னம்பிக்கைக்கு ஒரு மாதிரியை உருவாக்கி வைத்துள்ளது டாடா ஸ்டீல்.

பல்லாண்டுகளாக நாட்டின் ஒரே எஃகுத் தொழிற்சாலையாக இருந்த டாடா ஸ்டீல், தனக்குத் தேவைப்பட்ட துணையுறுப்புகளைத் தயாரித்தளிக்க வேறு நிறுவனங்கள் எதுவும் இல்லாதிருந்த காரணத்தால், உபரி உறுப்புகளைத் தானே தயாரித்துக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது.

இன்றும் டாடா ஸ்டீல் லேடில் கார், புஷர் கார் முதல் பெல்லெட்டைஸிங் கில்ன், மட் கன் மற்றும் ராக்கிங் ஷியர் வரை பல திறப்பட்ட உறுப்புகளைத் தானே டிஸைன் செய்வதோடல்லாமல், தயாரிக்கவும் செய்கிறது.

இவ்வழியில், நம் நாட்டின் பொருளாதாரச் செழுமைக்கு உதவுவது என்று டாடா ஸ்டீல் அறுபத்தாறு ஆண்டுகளுக்கு முன் வகுத்துக் கொண்ட கோட்பாட்டை நிறைவேற்றும் பணியில் தொடர்ந்து செயலாற்றி வருகிறது.

டாடா ஸ்டீல்

AIYARS-TS 4 TM



பச்சிள மேனியைக் காப்பதற்கே
பாப்பா காட்டும் வழி உமக்கே

ஜான்ஸன்ஸ்* பேபி பவுடர்—



மேனியிலே அதி நுட்பமான பகுதி- உங்கள் முகத்தின் சருமம்: பச்சிளம் தளிர் போன்ற அதனைப் பாது- காக்கத்தக்க பவுடர் எது? பாப்பாவின் மேனையைக் காப்பாற்- றும் பூப்போன்ற மென்மையான பவுடரே தேவை. மழமழ மென்மை யோடு குளுமையாக வைத்திருப்ப- தற்கு — ஜான்ஸன்ஸ் பேபி பவுடர். எங்கெங்குமே, எழில்கொஞ்சும் இளம் செல்வியர் உபயோகிக்கும் பவுடர்.

பிறந்த நாளையப் பிஞ்சு மென்மையோடு உங்கள் மேனி மிளிரப் பேருதவி

Johnson & Johnson*

* Trade Mark

© Johnson & Johnson

லின்டாஸ்-J&J-2-140 TM




நீங்கள்
காத்திருந்தது
இதோ கிடைக்கிறது!
புதிய, அதிக பாதுகாப்பான
மில்லர்
திருட முடியாத அமைப்புடன் கிடைக்கிறது!
மில்லர் விளக்குக்கு அதிக பாதுகாப்பாக இப்போது சங்கிலி ஒன்று கிடைக்கிறது. வேண்டியவர் வாங்கிக்கொள்ளலாம். திருடர்களின் ஜம்பம் இனி பலிக்காது.
மில்லர் விளக்கில் உள்ள டயகான் லென்ஸ் மூலம் வெளிப்படும் நீண்ட, பிரகாசமான ஒளி உங்களைப் பாதுகாக்கிறது.
மில்லர் விளக்குக்கு இன்னொரு பாதுகாப்பு, உடைக்க முடியாத இரட்டை பிராக்கெட் அமைப்பாகும். இதற்கென நீங்கள் அதிகப்படியாகப் பணம் கொடுக்க வேண்டியதில்லை.
திருடர் பயம் இனி இல்லை. எண்ணெய்ச் செலவும், பாட்டரிச் செலவும் இல்லை. டயரைத் தேய்க்காமல் அதிக நாள் உழைக்கும் மில்லர் உண்மையிலேயே சிக்கனமானது. பளிச்சிடும் புதிய பெட்டிகளில் கிடைக்கிறது.
MILLER
டிஐ மில்லர் லிமிடெட்
சென்னை 600 001
திருடமுடியாத அமைப்பு கொண்ட மில்லர்



பருத்தியிலே விளைந்திடும் கற்பனைகள் அற்புதமோ அதி அற்புதம்
டிசைன்கள்
நேர்த்தியான மதிப்பு ....நறுவிசான பொலிவு ...
நல்லழகு ...
இயற்கைச் சிறப்பிலே இணையற்றது பருத்தி
செஞ்சுரி– 100% பருத்தித் துணி
தி செஞ்சுரி ஸ்பின். அண்டு. மான்பு. கம். லிமிடெட், பம்பாய்-400
CENTURY

சொல்லுங்கள் பார்க்கலாம்...



டிவிஎஸ் தொகுப்பைச் சேர்ந்த ஸதர்ன் ரோட்வேஸ் நிறுவனத்தைத் தவிர வேறு எந்த லாரி சர்வீஸில்

- லாரிகள் தினமும் 77,849 கி.மீ. ஓடுகின்றன? தென்னகமெங்கும் 575 கிளைகள் உள்ளன?
- பார்சல்கள் பழுதடையாமல் தாமதமின்றிப் போய்ச் சேர இரு இடங்களுக்கிடையே நேரிடையான பார்சல் சர்வீஸ் உள்ளது?
- லாரிகள் செல்லும் வழியெல்லாம் பழுது பார்க்கப் பட்டறைகள் உள்ளன?
- பார்சல்களின் அளவு எதுவாக இருந்தாலும், ஒரே மாதிரியான அக்கறை எடுத்துக் கொள்ளப்படுகிறது?
- பார்சல்கள் நடுவழியில் களவு போகாமல் இருக்கின்றன?
- குறித்த நேரத்திலும், பத்திரமாகவும், ஒழுங்காகவும், நம்பிக்கைக்குகந்த வகையிலும் பார்சல்களைக் கொண்டு சேர்க்கும் 60 ஆண்டின் புகழ் நிறைந்த சேவை உங்களுக்குக் கிடைக்கிறது?

ஈடு இணையற்றவர்களிடமே உங்கள் பார்சல்களை ஒப்படையுங்கள்.

உங்கள் நம்பிக்கைக்குரியது டிவிஎஸ்

TVS

ஸதர்ன் ரோட்வேஸ் பிரைவேட் லிமிடெட்
(டிவிஎஸ் தொகுப்பைச சேர்ந்த நிறுவனங்களில் ஒன்று)
மதுரை

FDS 18 1977 THA

பொருளடக்கம்

பிரமாதீச, மார்கழி, 15 - டிசம்பர் 30, '73

கல்கி - சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
இதர நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கைநாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



கல்கி

"கல்கி"யில் வெளி
வரும் கதைகளில்
உள்ள பெயர்கள்
எல்லாம் கற்பனைப்
பெயர்களே; சம்ப
வங்களும் கற்
பனையே.



காட்பரிஸ்
போர்ன்விடா
விசேஷச் சலுகை!
50 பைசா மதிப்புள்ள கூப்பன் (லேபல் ஒட்டப் பட்டுள்ள) ஒவ்வொரு 450 கிராம் போர்ன்விடா டின்னிலும்!
Cadbury's
Bournvita
ideal food drink
ngth and vigour
450g net
SPECIAL COUPON WORTH 50 PAISE INSIDE
OBM 2364 TM
SPECIAL COUPON
This coupon along with the aluminium seal from this tin entitles you to a 50 paise discount on your next purchase of a 450 g or Economy Pack of Bournvita.
Valid upto January 31, 1974.
50 PAISE
50 PAISE
இப்போது உங்களுக்காக ஒரு விசேஷச் சலுகை! லேபல் ஒட்டப்பட்டுள்ள ஒவ்வொரு 450 கிராம் போர்ன்விடா டின்னிலும் ஒரு விசேஷச் சலுகைக் கூப்பன் உள்ளது. டின்னிலுள்ள அலுமினியம் தகட்டுடன் அந்த கூப்பனை அடுத்த முறை போர்ன்விடா (450 கிராம் அல்லது எகானமி டின்) வாங்கும்போது உங்கள் கடைக்காரரிடம் தந்தால், 50 பைசா தள்ளுபடி கிடைக்கும். எனவே முந்துங்கள்—சரக்கு தீரும் முன்!
சலுகை ஜனவரி 31, 1974 வரையே
இந்த சலுகை தென்னிந்தியாவுக்கு மட்டுமே.
காட்பரிஸ் போர்ன்விடா — சக்திக்கும் வலிமைக்கும் மற்றும் நீடித்த சுவைக்கும்!

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா --பாரதியார்

மலர் 33 -- இதழ் 22

பொறுப்பற்ற வேலைநிறுத்தம்

ரயில்வே லோகோ ஊழியர்கள் — ரயில் ஓட்டுபவர்கள் — இப்போது செய்துள்ள வேலைநிறுத்தம் எட்டு மாத காலத்தில் மூன்றாவது தடவை. சென்ற ஆகஸ்ட் மாதத்தில் வேலைநிறுத்தம் செய்து, ரயில் போக்குவரத்திலும், சரக்குப் போக்குவரத்திலும் கடுமையான சீர்குலைவை ஏற்படுத்தி ரயில்வே இலாகாவுக்குப் பல கோடி ரூபாய் நஷ்டத்தையும், பொதுமக்களுக்குச் சொல்லொணா இன்னல்களையும் ஏற்படுத்தினர். நிலைமையைச் சமாளிக்க, ஊழியர்களின் பிரதிநிதிகளுடன் பேச்சு வார்த்தைகள் நடத்தி அரசாங்கம் சில உடன்பாடுகளைச் செய்து கொண்டது. சில அம்சங்களை அமுலுக்குக் கொண்டு வரவும் செய்தது. மற்றும் சில — முக்கியமாகப் பத்து மணி நேர வேலை—அமலாக்கப்படவில்லை. இதற்கு அவகாசம் தேவைப்படும் என்றும் இதை அமல் செய்வதனால் ஏற்படக்கூடிய இதர விளைவுகளையும் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது என்றும் அரசு கூறுகிறது. இதற்காக ஒரு கமிட்டியும் நியமிக்கப்பட்டிருக்கிறது. அரசு இவ்விஷயத்தில் அனாவசிய காலதாமதம் செய்கிறது என்று காரணம் காட்டி இப்போது வேலைநிறுத்தம் நிகழ்ந்துள்ளது.

இதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் விளைவுகள் மூன்று. வடக்கே மூன்று ரயில்வே மண்டலங்களில் மூன்று ரயில்கள் ரத்துச் செய்யப்பட்டு விட்டன. மேலும் பல ரயில்கள் ரத்து செய்யப்படக் கூடும் என்ற நிலைமை ஏற்பட்டுள்ளது. இரண்டாவது சுமார் 50 லட்சம் ரயில் பயணிகளுக்கு அனாவசியமான கஷ்டத்தை இவ்வேலைநிறுத்தம் உண்டாக்கியுள்ளது. சரக்கு வண்டிகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மக்களுக்குத் தேவைப்படும் உணவுப் பண்டங்களின் போக்குவரத்தும், தொழில்களுக்கு மிக அவசியமான நிலக்கரி சப்ளையும் பாதிக்கப் பட்டிருக்கின்றன. மூன்றாவது இப்போதைய வேலைநிறுத்தத்தினால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தையும், முன்பு வேலைநிறுத்தங்களினால் ஏற்பட்ட நஷ்டத்துடன் சேர்த்துப் பார்த்தால் அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ரயில்வே பட்ஜெட்டில் கணிசமான பற்றாக்குறை ஏற்படுவது நிச்சயம். இதை ஈடு கட்டப் பிரயாணக் கட்டண விகிதங்களும் சரக்குக் கட்டண விகிதங்களும் உயர்த்தப்படும் என்று இப்போதே எதிர்பார்க்கலாம்.

இந்த நஷ்டம் ஏதோ தனிப்பட்ட வர்க்கத்தினருக்கு ஏற்படுகிறது என்பதல்ல. நாட்டு மக்களுக்கு ஏற்படும் நஷ்டம். நமது தேசிய பொருளாதாரத்துக்கு ஏற்படும் நஷ்டம். ரயில் பிரயாணம் செய்யும் லட்சக் கணக்கான மக்களுக்குக் கஷ்டம், நஷ்டம். இதை லோகோ ஊழியர்களும் அவர்களுடைய தலைவர்களும் உணர வேண்டும். அவர்கள் கோரிக்கை நியாயமாக இருந்தாலும், அவற்றைத் தீர்த்துக் கொள்ளக் கையாள வேண்டிய முறைகள், பேச்சு வார்த்தைகளும் சமரச மனப்பான்மையும்தாம். இந்த முறைகள் பயனளிக்கவில்லை என்று கூறிவிட முடியாது. ஏற்கனவே லோகோ ஊழியர்களின் சில கோரிக்கைகள் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ளப் பட்டிருப்பதே இதற்குப் போதிய சான்றாகும்.

சில கோரிக்கைகள் உடனடியாக அங்கீகரிக்கக்கூடியவையாக இருக்கும். சிலவற்றை ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னரே ஏற்க வேண்டியிருக்கும். இதற்கு அவகாசம் தேவைப்படலாம். இதை லோகோ ஊழியர்கள் உணர வேண்டியது அவசியம். இரண்டு, மூன்று தொழிற் சங்கங்கள் இருப்பதால் அவற்றுக்குள்ளே நிலவும் சச்சரவுகளே இவ்வேலைநிறுத்தத்துக்கு உற்சாகம் அளித்துள்ளதோ என்று பலர் நினைக்கிறார்கள்.

விலைவாசி உயர்வினாலும் மற்றும் பல காரணங்களாலும் கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் பொதுமக்களுக்கு, மேலும் கஷ்டத்தை எந்தத் தொழிலாளர் பிரிவினர் ஏற்படுத்தினாலும், மக்களின் அனுதாபத்தை அவர்கள் பெற மாட்டார்கள்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

ராஜாஜி மாதம்

டிசம்பர் மாதத்தை ராஜாஜி மாதம் என்றே சொல்லி விடலாம். ராஜாஜி அவர்களின் பிறந்த தினம், அமரரான நினைவு தினம் இரண்டும் டிசம்பர் தொடக்கத்திலும் இறுதியிலுமாக வருகிறது. இந்த ஆண்டு நாடெங்கும் டிசம்பர் மாதம் முழுதுமே ராஜாஜி மாதமாகக் கொண்டாடப்படுகிறது. டிசம்பர் 25ந் தேதியன்று பாரத அரசாங்கம் ராஜாஜி அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அவருடைய தபால் தலையை வெளியிடுகிறது. சென்னையில் டிசம்பர் முதல் வாரத்திலிருந்தே ராஜாஜி ஜயந்தி தொடங்கி நினைவு தினம் வரை விமரிசையான கூட்டங்கள் சிறப்பாக நடைபெற்றன. ராஜாஜியின் 95வது ஆண்டை நினைவூட்டும் வகையில் 95 இடங்களில் கொடியேற்றினார்கள். டிசம்பர் 9ந் தேதி மாநில கவர்னர் திரு கே. கே. ஷா அவர்கள் தலைமையில் ராஜாஜி ஹாலில் நடைபெற்ற ராஜாஜி ஜெயந்தி விழாவில் சர்வ கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள். மாணவர்களுக்கான சொற்பொழிவுப்போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் நடந்திருக்கின்றன. ராஜாஜி நினைவு தினத்தன்று பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு உணவளிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நகரின் பல்வேறு பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்ட ராஜாஜி பற்றிய கருத்தரங்குகளில் எச். வி. ஆர். ஐயங்கார், கே. சந்தானம் ஆகியோர் நிகழ்த்திய பேருரைகள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. ராஜாஜி அமரரான தினத்தன்று அவர் பூத உடல் தகனம் செய்யப்பட்ட கிருஷ்ணாம்பேட்டைக்கு ராஜாஜி ஹாலிலிருந்து ஒரு மௌன ஊர்வலம் போவதற்கும் ஏற்பாடாகியிருந்தது. அன்று மாலையில் கோகலே ஹாலில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் திரு ஜி. கே. சுந்தரம் அவர்கள் தலைமையில் காங்கிரஸ் தலைவர் திரு கே. காமராஜ் அவர்களும், கல்வி அமைச்சர் திரு நெடுஞ்செழியனும் மற்ற முக்கியஸ்தர்களும் பேசுகிறார்கள். இப்படி இந்த ஆண்டு டிசம்பர் மாதம் ராஜாஜி மாதமாகவே நினைவு கூரப்பட்டது. மார்கழி மாதத்தின் புனிதத் தன்மை, கிறிஸ்துமஸ் பண்டிகையின் கோலாகலம் இவற்றோடு அமரர் ராஜாஜி அவர்களின் சிறப்பும் நினைவுகூரப்பட்டு டிசம்பர் மாதத்தின் பெருமையை அதிகமாக்கியது.



ஒருமைப்பாட்டுக்கு உதாரணம்


தமிழ்நாட்டில் உள்ள ராஜஸ்தானி அஸோஸியேஷன் ஒருமைப்பாட்டுக்கு முன்னுதாரணமான ஒரு காரியத்தைச் செய்து அனைவருடைய பாராட்டுக்களையும், நன்மதிப்பையும் பெற்றிருக்கிறது. வடலூர் அருள்ஜோதி ராமலிங்க மிஷன் திருப்பணிக் குழுவினருக்கு ரூபாய் ஐம்பதினாயிரத்தை நன்கொடையாக வழங்கியிருக்கிறார்கள். ராஜஸ்தானி சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த விழாவின்போது மேலவைத் துணைத் தலைவரும், 'வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு' நூலின் ஆசிரியரும் ஆகிய திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கியிருக்கிறார். ராமலிங்க மிஷன் திருப்பணிகளுக்கான குழுவின் தலைவரான திரு நா. மகாலிங்கம் அவர்கள் முன்னிலையில் இந்த ஒருமைப்பாட்டு நிதி உதவி நடைபெற்றிருக்கிறது. ராஜஸ்தானம் எங்கே வடலூர் எங்கே என்று நினைத்து இந்த உதவியையும் நினைத்தால்தான் இதன் அருமை—பெருமைகள் புரியும். இந்த உதவியைத் தவிரவும் வடலூருக்கு வரும் பக்தர்களுக்குப் பயன்படுகிற பல்வேறு பயனுள்ள திருப்பணிகளில் ராஜஸ்தானிகள் சங்கம் ஆர்வமும் அக்கறையும் எடுத்துக் கொண்டிருப்பதைப் பாராட்டுவதோடு முன்னுதாரணமாகவும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டிப் பெருமைப் படலாம்.


அமைச்சருக்கு அழகா?

டிசம்பர் மாதம் இரண்டாவது வாரம் மதுரையில் நடைபெற்ற அண்ணா அறிவாலய திறப்பு விழாவில் தி. மு. க. தலைவரும், தமிழக முதலமைச்சரும் ஆகிய திரு கருணாநிதியையும் அருகில் வைத்துக் கொண்டு, தொழில் அமைச்சர் திரு மாதவன் ஒரு விஷயத்தைப் பேசியிருக்கிறார். 'ஓர் அமைச்சர் பொதுமேடையில் முதலமைச்சரையும் அருகில் வைத்துக் கொண்டு இப்படிப் பொறுப்பில்லாமல் பேசலாமா?' என்று செய்தியைப் படிக்கிறவர்கள் துணுக்குறும் அளவு பேசியிருக்கிறார் அவர்.

''சமீபத்தில் தமிழக முதல்வர் கருணாநிதியுடன் நான் டெல்லிக்குப் போயிருந்தேன். அப்போது முதல்வர் கருணாநிதி பிரதமர் இந்திரா காந்தியை அந்தரங்கமாகச் சந்தித்துப் பேசினார். முதல்வருடன் பேசிய பிரதமர் இந்திரா காந்தி தாம் காமராஜருடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் பற்றி இரகசியமாக எல்லாம் தெரிவித்தார். அவர் தமிழக முதல்வரிடம் தெரிவித்திருக்கும் இரகசியங்களை இப்போது வெளியிடுவது முடியாத காரியம் என்றாலும் ஒன்றை மட்டும் எங்களால் உறுதியாகச் சொல்ல முடியும். தமிழ் நாட்டில் பழைய காங்கிரஸின் கதையை முடித்துவிட டெல்லி தயாராகி விட்டது.''

இதைக் கேட்டுக் கொண்டே அருகில் அமர்ந்திருந்த முதல்வர் கருணாநிதி இந்த விழாவில் மாதவனுக்குப் பின்பு பேசியும் கூட


குடுகுடு, குடுகுடு! நல்லகாலம் பொறக்குது! ஐயாவின் வாழ்க்கைத் தரம் உயருது! சாராயக் கடை மூடப் போவுது! ஐயா இனி மதுக் கடையில்தான் நுழைவாரு!
யின் கருணை யால் குடிப் பழக்கத்துக்கு ஆளானவர்


திட்டக்கமிஷன்
"பிரதமரின் அறிவிப்புக்-களைப் பார்க்க மாட்டேன்!"
"ப்ரத்யட்ச நோக்கில் பேச மாட்டேன்!"
"அறிஞர் யோசனைகளைக் கேட்க மாட்டேன்!"

இதைப் பற்றி 'இப்படித்தான் நடந்தது அல்லது இப்படி எதுவும் டெல்லியில் நடக்கவில்லை' — என்று எதையுமே கூறவில்லை. ஆனால் அடுத்த நாள் திருச்சியில் பத்திரிகை நிருபர்கள் முதலமைச்சரைச் சந்தித்து மதுரையில் மாதவன் வெளியிட்ட இந்த இரகசியம் பற்றி வினவியபோது, "பிரதம மந்திரி இந்திரா காந்தி இரகசியமாக என்னிடம் எதுவும் பேசவும் இல்லை. காமராஜருடன் தாம் நடத்திய பேச்சுப் பற்றித் தெரிவிக்கவும் இல்லை" என்று கூறி முதல் நாள் மதுரையில் மாதவன் சொல்லியதை மறுத்து விட்டார். அப்படியானால் திரு மாதவன் மதுரையில் பேசியது பொய்யா, புனைந்துரையா, அல்லது ஸ்தாபன காங்கிரஸ்காரர்களைப் பயமுறுத்த எண்ணினரா? இது ஒரு தந்திரமா? ஒரு மந்திரி இப்படி யெல்லாம் மட்டமாகப் பேசலாமா? திருச்சியில் வந்து இப்படி விளக்கம் கூறிய முதல்வர் மதுரையில் அதே மேடையில் ஏன் சும்மா இருந்தார்? இந்தப் பொறுப்பில்லாத பேச்சு அமைச்சருக்குச் சர்வ சாதாரணமாக இருக்கலாம். ஆனால் மக்கள் இப்படிப்பட்ட பேச்சுக்களைச் சுலபமாக மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள்.

எத்தனை சிலைகள் உடையும்?

சேலம் நகரில் காந்தி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவத்தால் சில மாதங்களுக்கு முன்பு தமிழ் நாடு முழுவதுமே துயரத்தில் ஆழ்ந்து கண்ணீர் வடித்தது. அந்தச் சிலைகளுக்குத் துரோகம் இழைத்தவர்கள் பற்றிய துப்பைத் துலக்கிக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்படுமுன் இப்போது வடார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த ஆம்பூரில் ஒரு காந்தி சிலை உடைக்கப்பட்டிருக்கிறது.

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் எனக் கருதப்படும் யாரோ மூவரைப் போலீஸார் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. அரசியல் நோக்கிலோ அல்லது அல்ப புத்தியினாலோ இது விஷயத்தில் ஒரு குழு திட்டமிட்டுச் செயல்படுகிறது என்பதை மேற்படி சம்பவங்கள் நிரூபிக்கின்றன. நாட்டுக்கே அவமானம் அளிக்கும் இது போன்ற நிகழ்ச்சி மீண்டுமொரு முறை நிகழ அரசும் போலீஸ் இலாக்காவும் விடக் கூடாது.

முதலமைச்சரை விசாரிக்கலாம்


'பாராளுமன்றக் கூட்டத்தொடரில் தமிழ் நாடு முதலமைச்சர் மீது ஏராளமான லஞ்ச ஊழல் புகார்கள் கூறப்பட்டிருந்தும் மத்திய அரசு இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?' என்று கேரள மாநிலத்தைச் சேர்ந்த காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்விக்கு மத்திய அமைச்சர் ராம் நிவாஸ் மிர்தா கூறிய பதிலில் இருந்து, ஒரு மாநில முதல் அமைச்சர் மீது கூறப்படும் ஊழல் புகார்கள் பற்றி விசாரிக்கவும், அவசியமானால் ஒரு விசாரணைக் கமிஷன் நியமிக்கவும் மத்திய அரசுக்கு உரிமை உண்டு என்று தெரிகிறது. தமிழக மக்களுக்கு ஆறுதலளிக்கும் செய்தி இது.

"இந்த விஷயத்தில் மத்திய அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. ஏற்கனவே கூறப்பட்ட ஊழல் புகார்களுக்கு முதல்வர் கூறிய பதில்களையொட்டி முதலில் ஊழல் புகார்களைச் சொல்லியவர்கள் அளித்த மறு புகார்கள் முதல்வருக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவற்றுக்குத் தமிழக முதலமைச்சர் அனுப்பும் பதிலுக்காகக் காத்திருக்கிறோம்" என்று ஸ்ரீ மிர்தா கூறியுள்ளார். விசாரணைக் கமிஷன் நியமிப்பது அரசியல் சட்டத்துக்கு விரோதமானது என்று தமிழக முதல்வர் எப்போதாவது சொல்லியிருக்கிறாரா என்றும், அப்படி நியமிப்பது மாநில அரசின் உரிமைகளை மீறியது ஆகாதா என்றும் கேட்கப்பட்டபோது, "ஒரு மாநில முதல் அமைச்சருக்கு எதிராக விசாரணைக் கமிஷன் நியமிக்கச் சட்டப்படி மத்திய அரசுக்கு உரிமை உண்டு. அப்படி விசாரணை செய்வது மாநில அரசின் உரிமைக்கு எதிரானது அல்ல" என்று மீண்டும் தம் பதிலை உறுதி செய்திருக்கிறார் மத்திய அமைச்சர்.

ராஜாஜி சிந்தனை

திருவள்ளுவர் காலத்தில் கள்ளும், சாராயமும் அரசனுக்கு வருமானம் தரும் பண்டங்களாக இருக்கவில்லை. அறிவில்லாதவர்கள் கள் குடித்தும் சாராயம் அருந்தியும் தம்மைத் தாம் கெடுத்துக் கொள்ளலாமே ஒழிய, மதுபானத்தை ஒரு வியாபாரமாகவும் பொருள் ஈட்டும் முறையாகவும் அரசாங்கத்துக்கு ஒரு வருமான வழியாகவும் ஏற்படுத்தவில்லை. குடிக்கும் பேதைக்கு 'உன் இஷ்டம்' என்று விடப்பட்டிருந்தது. அதனால் மற்றவர்களுக்கு லாபம் பெறும் வழிகள் உண்டாகவில்லை. வியாபாரத்தினால் உண்டாகும் லாபமானது அந்த லாபத்தைப் பெருக்கத் தூண்டும். அது மேன்மேலும் மக்களை மயக்கிக் குழியில் தள்ளும்.

குறளில் மதுபானத்தை வன்மையாகக் கண்டிக்கிறார் முனிவர். கள்ளுண்டு களித்து வழக்கப்பட்டவனைக் காரணங்கள் சொல்லி அந்தப் பழக்கத்தினின்று விடுவிப்பது, நீரில் மூழ்கிய ஒருவனை விளக்கேற்றித் தேடுவதுபோல் என்கிறார். நீருக்குள் விளக்கு நிற்காது. அணைந்து போகும். முடியாத காரியம். கள் குடித்தவன் மதி அந்த நீரைப் போல். அவனுக்கு விளக்கம் தருவது இயலாத காரியம்.



அதுவே எழில் பராமரிப்பு ரகசியம்.

டூபர்-இண்டர்ஃப்ரான் லிட்., தபால் பெட்டி எண் 6582, பம்பாய் 400 018



எஸ்ட்ரெலா சக்தி
ESTREL
132
இந்த சக்தி தரும் ஒலி உங்கள் காதுகளில் ரீங்காரம் செய்கிறது.
இந்த சக்தி தரும் ஒளியை நீங்கள் கண்ணெதிரே காணலாம்
உங்கள் டிரான்ஸிஸ்டர் மற்றும் டார்ச்சில் எஸ்ட்ரெலா சக்தி காட்டும் அதிசயம் பாரீர்!
எஸ்ட்ரெலா பாட்டரிகளின் சக்தி: குடத்தில் காவேரிபோல!
CMEB-2-203

காமாக்ஷியின் பெருமை 2

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

மனிதன் மாறுகிறான், ஜீவராசிகள் மாறுகின்றன. மரம் செடி கொடி எல்லாம் மாறுகின்றன. லோகங்கள், நட்சத்திரங்கள், கிரகங்கள் எல்லாம் மாறுகின்றன. இத்தனைக்கும் ஆதாரமான பிரம்மம்தான் மாறாமலே இருக்கிறது. எக்காலும் ஒரேபோல் உள்ள பிரம்மமாகிற சத்தியத்தையே 'ஸத்' என்கிறோம்.

ஒன்று இருந்தால் மட்டும் பிரயோஜனமில்லை. தான் இருக்கிறோம் என்று அது அறிந்தால்தான் பிரயோஜனமுண்டு. தான் உள்ளதாகவே உணராத ஒன்று இருந்தும் இல்லாதது மாதிரிதான். 'ஸத்'தாகிய பிரம்மத்துக்கு, தான் இருப்பதாக அறிவு இருப்பதால்தான் தன் சக்தியை இத்தனை தோற்றங்களாகக் காட்ட முடிகிறது. இப்படியாக 'ஸத்' தன்னைத் தானே அறிந்து கொள்வதைத்தான் 'சித்' என்கிறோம். ஞானம் என்றும் அறிவு என்றும் சொல்வது அதைத்தான். 'ஸத்' என்பது ஈசுவரன்; 'சித்' என்பதே அம்பிகை. தன்னையே அறிந்து கொள்ளும்போதுதான் ஆனந்தம் என்கிற உணர்வு உண்டாகிறது. ஈசுவரனும் அம்பாளும் — காமேசுவரனும் காமாக்ஷியும் — சேர்ந்து ஸத் — சித் — ஆனந்த பிரம்மமாக இருக்கிறார்கள்.

பிரம்மத்தையும் பிரம்ம சக்தியையும் பிரிக்க முடியாது. பாலும் வெண்மையும், புஷ்பமும் அதன் சுகந்தமும், தேனும் மாதுரியமும் போல் ஈசுவரனும் அம்பாளும் பிரிக்கவொண்ணாமல் அபின்னமாக இருப்பவர்கள். இதனால்தான் அர்த்தநாரீசுவரராகச் சொல்கிறோம். ஒரே ஸ்வரூபத்தில் ஈசுவரன் ஒரு பாதி, அம்பாள் மறு பாதி.

'ஆனால் இதுவும்கூட சரியில்லை போலிருக்கிறதே!' என்று ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்கள் 'ஸௌந்தரியலஹரி' சுலோகம் ஒன்றில் சொல்கிறார்:

''அம்பிகே! நிர்குணப் பிரம்மம் தனக்கென்று எந்த வர்ணமும் இல்லாத ஸ்படிக ஈசுவரனாக இருந்தது. அதில் இடப் பக்கத்தை நீ திருடிக் கொண்டாயாம். அப்படிப் பார்த்தாலும் உனக்கு ஒரு பாதி உடம்புதானே இருக்க வேண்டும்? ஆனால் பதியின் பாதி சரீரத்தைத் திருடிக் கொண்டதிலும் உனக்குத் திருப்தி உண்டாகவில்லை. பாக்கி பாதி தேகத்தையும் நீயே ஆக்கிரமித்துக் கொண்டு விட்டதாகக் காண்கிறது. அதனால்தான் பூரண ஸ்வரூபமாகச் செக்கச் செவேலென்று காமேசுவரியாக இருக்கிறாய். பரமேசுவரனுக்கு உரிய நெற்றிக் கண், சந்திர கலை எல்லாவற்றையும் நீயே ஸ்வீகாரம் செய்து கொண்டுவிட்டாய்!'' என்கிறார்.

செயலற்ற பிரம்மம் அநுக்கிரகம் செய்வதற்கென்றே பூரண ரூபமும் கொண்டுவிட்டது என்பதை இப்படிச் சொல்கிறார்.

'கதாஸ்தே மஞ்சத்வம்' என்று ஆரம்பமாகும் சுலோகத்தில், அம்பாள் ஐந்தொழிலும் செய்வதாகச் சொல்லும்போது, 'பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், (மாயைக்கு அதிபதியான) ஈசுவரன் இவர்களைக் கட்டில் கால்களாகக் கொண்ட மஞ்சத்தின் மீது, நீ பிரம்மஸ்வரூபமான காமேசுவரனோடு அநுக்கிரக ரூபிணியாக, காமேசுவரியாக விளங்குகிறாய். ஆனாலும் அந்தக் காமேசுவரன் ஒருத்தன் தனியாக இருப்பதே தெரியவில்லை. உன்னுடைய ஜோதிச் சிவப்பு அவனுடைய ஸ்படிக நிறத்திலும் பளீரென்று வீசி அவனையும் ஒரே சிவப்பாக்கி, சிருங்கார ரஸத்தின் வடிவமாக்கிவிட்டது'' என்கிறார். காமாக்ஷியின் அநுக்கிரக சக்தி அத்தனை வலுவானது!

முதலில் சொன்ன சுலோகப்படி அம்பாளுக்கும் முக்கண் உண்டு; சிரஸில் சந்திரகலை உண்டு. நெற்றிக் கண் அக்னி வடிவானது; வலக்கண் சூரிய வடிவம்; இடக்கண் சந்திர வடிவம். உலகத்தை வாழ்விக்கிற மூன்று ஜோதிகளும் பராசக்தியிடமிருந்தே வந்தவை. இதைக் கவித்துவ அழகோடு ஸௌந்தரியலஹரியின் இன்னொரு சுலோகம் சொல்கிறது. அது, 'உன் வலது கண் பகலைப் படைக்கிறது; இடது கண் இரவைப் படைக்கிறது. இரண்டுக்கும் நடுவே உள்ள கண் சந்தியா காலத்தைப் படைக்கிறது. அதனால்தான் அது சிவந்து விளங்குகிறது' என்கிறது.

கடந்த சில இதழ்களாகக் காமாக்ஷி எனும் கருணைக் கடலில் மூழ்குளித்து ஸ்ரீ காமகோடிப் பெரியவர்கள் நல்கிய நல்முத்துக்களான அருள்வாக்குகளைப் படித்து ஆனந்தித்து வருகிறீர்கள் அல்லவா? இந்த ஆனந்தத்துக்குச் செழுமையும் தந்து, ஸ்ரீ பெரியவர்களின் குளிர்ந்த உள்ளத்தை மேலும் குளிரச் செய்யவும், அன்னை காமாக்ஷியின் அருட் பெருக்கைப் பெறவும் அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது. ஈடிணையில்லாப் புகழ்கொண்ட ஸ்ரீ காஞ்சி காமாக்ஷி ஆலயத்துக்கு விரிவான முறையில் திருப்பணி தொடங்கப்பட்டுள்ளது. உங்களால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு பொருளை இதற்கு அனுப்பி வைத்து வாழ்க்கைப் பயனைப் பெற வேண்டுகிறோம். நிதி வசதி பெற்றவர்கள் அள்ளி அள்ளி அளிக்கச் சௌகரியமாக, இத்திருப்பணி நன்கொடைக்கு வருமான வரி விலக்கு பெறப்பட்டிருக்கிறது. பொருள் அனுப்ப வேண்டிய முகவரி: செயலர், திருப்பணிக் கமிட்டி, ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம், காஞ்சிபுரம், 631502.

பண்டிட் P.S. ராமசர்மாவின்

சக்தி சஞ்சீவி

குழந்தைகளின்

ஈரல், குலைக்கட்டிகளுக்கு.

எமது வைத்தியரின் மாதாந்திர சுற்றுப் பிரயாண விபரம் I

ஊர்	தேதி	நேரம்	தங்கும் இடம்
தாராபுரம்	1	காலை 9-00 -- 10-00	சாந்தா கிளினிக், சர்ச் ரோடு.
பழனி	1	காலை 11-00 -- 12-00	ஜெயா மெடிகல் மார்ட்
உடுமலைப்பேட்டை	1	மாலை 3-00 -- 4-00	ராஜேந்திரா அண்டு கோ., கடை வீதி
பொள்ளாச்சி	1	மாலை 5-00 -- 6-00	தி எம்பயர் பார்மஸி.
பாலக்காடு	2	காலை 9-11	K. H. பரசுராம், கல்தூண்பேட்டை.
,,	2	மாலை 3-5	Rainbow Quarters, Opp. Govt. Hospital.
கோயமுத்தூர்	3	காலை 9-11	சீதாராம் லாட்ஜ், ஸ்டேட் பாங்க் ரோடு,
,,	3	மாலை 2-4	ரெயில்வே ஸ்டேஷன் எதிர்புறம்
மேட்டுப்பாளையம்	3	மாலை 5-00 -- 6-00	தி மேட்டுப் பாளையம் மெடிகல் ஸ்டோர்ஸ்.
சத்தியமங்கலம்	4	காலை 8-00 -- 9-00	C. R. K. மெடிகல்ஸ், கடைவீதி
கோபி	4	காலை 10-00 -- 11-00	வாஸன் அண்டு கோ., கச்சேரி வீதி.
பவானி	4	மாலை 2-00 -- 3-00	M. L. செட்டியார் அண்டு சன்ஸ், கடை வீதி.
மேட்டூர் அணை	4	மாலை 4-30 -- 5-30	ஸ்ரீ ராமன் லாட்ஜ்.
ஈரோடு	5	காலை 9-00 -- 11-00	ஸ்ரீ கிருஷ்ணா டாக்கீஸ்.
திருப்பூர்	5	மாலை 4-00 -- 5-30	P. R. மணியம் ஸ்டோர்ஸ், பல்லடம் ரோடு.
திருச்சி	6	காலை 11-00 to மாலை 6-00	திருச்சி ஆயுர்வேதிக் யூனியன், சின்னக் கடைத் தெரு.
தஞ்சாவூர்	7	காலை 7-00 -- 9-00	Dr. S. வெங்கடராஜன் வைத்தியசாலை, சுகாநாயக்கன் தெரு.
கும்பகோணம்	7, 17, 27	காலை 10-00 to மாலை 5-00	ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை பிராஞ்சு, 94, டவுன் ஹைஸ்கூல் ரோடு.
சீர்காழி	8	காலை 7-00 -- 8-00	பிரம்ம வித்யா ஆயுர்வேத வைத்தியசாலை, ரயில்வே ஸ்டேஷன் ரோடு.
மாயூரம்	8	காலை 9-30 -- 12-00	ஸ்ரீ வெங்கடேசா மெடிகல் ஹால், பட்டமங்கலம் தெரு.
நாகப்பட்டிணம்	8	மாலை 5-00 -- 6-00	நாகை மெடிகல் ஸ்டோர்ஸ், கடை வீதி.
திருவாரூர்	9	காலை 7-30 -- 9-00	தன்வந்தரி மெடிகல் ஹால், 21, மடப்புரம் பாட்டை.
விஜயபுரம்	9	காலை 10-00 -- 11-00	சகுந்தலா பார்மஸி, நாகை ரோடு.
திருத்துறைப்பூண்டி	9	மாலை 2-00 -- 3-30	ஸ்ரீ T. V. சந்திரசேகரம் பிள்ளை, கடை வீதி.
பட்டுக்கோட்டை	9	மாலை 4-30 -- 6-30	கோபால் விலாஸ், பெரிய தெரு.
புதுக்கோட்டை	10	காலை 8-00 -- 10-00	நியூ லக்ஷ்மி டிஸ்பென்ஸரி, கீழ ராஜவீதி.
தேவகோட்டை	10	மாலை 2-30 -- 3-30	ஸ்ரீ சோமசுந்தரம் மெடிகல் ஸ்டோர்ஸ், ஆர்ச்சு ரோடு.
காரைக்குடி	10	மாலை 4-30 -- 6-00	நியூ கௌரி லாட்ஜ், மகர் நோம்பு அக்ரஹாரம்.
சிவகெங்கை	11	காலை 8-30 -- 10-00	கௌரி அண்டு கோ., கடை வீதி.
மதுரை	11	காலை 11-00-12-30	T. N. சொக்கலிங்கம்பிள்ளை சன்ஸ்,
,,	11	மாலை 3-00- 6-00	வடக்கு சித்திரை வீதி.

குறிப்பு: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 25 தேதிகளில் மாலை 3 முதல் 6 மணி வரை எமது வைத்தியர் மயூர வைத்தியசாலை, B-II, 1வது கிராஸ், தில்லைநகர், திருச்சி என்ற விலாசத்தில் முகாம் செய்கிறார்.

ஸ்ரீ சக்தி விலாஸ வைத்தியசாலை, கரூர் (போன்: 87)
திருச்சி ஜில்லா





சென்னையில் இசை விழாக்கள் கோலாகலமாய் ஆரம்பமாயின. இவ்வாண்டு சங்கீத கலாநிதியாக கௌரவிக்கப்படும் ஸ்ரீமதி பாலசரஸ்வதிக்கு ஸ்ரீமதி எம். எஸ். எஸ். மாலை அணிவித்து மகிழ்ந்தார். சங்கீத வித்வத் சபை நிகழ்ச்சிக்கு ஸ்ரீ பரத்ராம் தலைமை தாங்கினார். அவர் அருகில் சபையின் தலைவர் திரு டி. எஸ். ராஜம், காரியதரிசி திரு வே. ராகவன் ஆகியோர். ஸ்ரீமதி பாலசரஸ்வதி தமது உரையின் இறுதியில் அபிநயத்தின் மூலமே சில வார்த்தைகளைப் பேசி மகிழ்வித்தார்! அன்று குமாரி அலர்மேல் வள்ளியின் பரதநாட்டியம் சிறப்பாயிருந்தது.









தமிழிசை விழாவில் நீதிபதி கோகுலகிருஷ்ணன் தலைமையுரை நிகழ்த்தினார். அருகில் ஸ்ரீ சகவாரனும் ஸ்ரீமதி பட்டம்மாள் சகவாரனும். இசைப்பேரறிஞர் பதக்கத்தை ஸ்ரீமதி எம். எல். வி. ஸ்ரீமதி பட்டம்மாளுக்கு அணிவித்தார். அன்று நாட்டியமாடி மகிழ்வித்த குமாரி பத்மா சுப்பிரமணியத்தின் ஒரு தோற்றம்.

★



இந்தியன் ஃபைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியில் சங்கீத கலா சிகாமணி பட்டத்தை ஸ்ரீமதி பிருந்தா பெற்றார். அமைச்சர் நெடுஞ்செழியன் சிறப்புரை ஆற்றினார். ஸ்ரீ எம்பெருமானார் செட்டி, ஸ்ரீ என். ஏ. கே. ஆகியோரையும் காணலாம். இங்கு கலைநிகழ்ச்சிகள் ஸ்ரீமதி சித்ரா விஸ்வேஸ்வரனின் பரதநாட்டியத்துடன் தொடங்கின.

★




க்ளிக்
கிர்......
க்ளிக்

கார மசாலா

க்ளிக்
கிர்......
க்ளிக்

கடைந்த மோர்



உடைந்து போகாத
ஸான் பிளாஸ்டிக்
லிக்விடைஸர்
கொள்திறன்: 1 லிட்டர்.

ஸ்டெயின்லெஸ்
ஸ்டீலிலுலான
கிரைண்டர் பாத்திரம்,
பிளேடுகள்.

சக்தி வாய்ந்த
மோட்டார்.

அதிர்ச்சி
தாங்கும் அழகிய
பெட்டியில் பேக்
செய்யப்பட்டது.

தேர்ந்தெடுக்க
இருவேகத் திறன்.
அதோடு கையால்
இயக்க 'இன்ச்சர்'
உண்டு.

ராலி-மிக்ஸ்,
அந்நிய நாட்டு
மிக்ஸர்களுக்கு
இணையானது. ஏன்,
அவற்றை விடச் சிறந்தது.
காரமை—உபரி
உறுப்புகளுக்குப்
பஞ்சமே இல்லை.

ராலி-மிக்ஸ் '73

**எந்த அறவையையும் மூன்றே
நிமிடங்களில் முடித்து விடும்!**

ராலீஸ் இந்தியா லிட்., ராலி ஹவுஸ், 21, ராவலின் ஸ்ட்ரீட், பம்பாய்-400 001.

mcm/ri/5/Tam.

நாற்பத்துமூன்றாம் அத்தியாயம்

மர்ம ஓலை

இராஜாதிராஜனான புலிகேசி மன்னன் ஒல்லியாக உயர்ந்த ஆகிருதியும், வற்றி உலர்ந்து எலும்புகள் தெரிந்த தேகமும் உடையவனாக இருந்தான். அவனுடைய முகத் தோற்றம் இரும்பையொத்த நெஞ்சத்தையும், தயை தாட்சிண்யம் இல்லாத கடூர சுபாவத்தையும் பிரதிபலித்தது. கோவைப் பழம் போல் சிவந்து அனல் கக்கிய அவனுடைய கண்களைப் பார்க்கும்போது, கழுகின் கண்களைப் போன்ற தூர திருஷ்டியுடைய கண்கள் அவை என்று தோன்றியது.

புலிகேசியின் முகத்தைப் பார்த்ததும் நமக்கு ஒரு கணம் திகைப்பு ஏற்படுகிறது. 'ஆ! இந்த முகத்தை இதற்கு முன்னால் எங்கேயாவது பார்த்திருக்கிறோமா என்ன?' என்று வியப்புறுகிறோம். கம்பீரக் களையுடன் கடூரம் கலந்த இந்த முகத்தையும் அதி



வொளியுடன் கோபக் கனலைக் கலந்து வீசும் இந்தக் கண்களையும் வேறு எங்கேயும் பார்த்திருக்க முடியாது என்று தீர்மானிக்கிறோம். 'இத்தகைய முகம் வேறு யாருக்காவது இருப்பதென்றால், அது யமதர்ம ராஜனுக்குத்தான் இருக்க வேண்டும்!' என்ற முடிவுக்கு வருகிறோம்.

புலிகேசியின் முன்னிலையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட பரஞ்சோதியும் அதே முடிவுக்குத்தான் வந்தான்.

பரஞ்சோதியைப் பிடித்துக்கொண்டு வந்த வீரர்களின் தலைவன் சத்யாசிரய

புலிகே ்கு வணக்கம் செலுத்திவிட்டு வடபெண்ணை நதிக் கரையில் உள்ள பௌத்த மடத் தலைவர் இந்த வாலிபனைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போகச் சொன்னதிலிருந்து நடந்தவற்றை விவரமாகக் கூறி வந்தான்.

அவன் சொல்லி முடிப்பதற்குள்ளே புலிகேசி பொறுமை இழந்தவனாய், ''அதெல்லாம் இருக்கட்டும்; இவன் யார்? எதற்காக இவனைக் கொண்டு வந்தீர்கள்?'' என்று கோபக் குரலில் கர்ஜித்தான்.


வீர: தலைவன் நடுங்கிய குரலில், ''நாகநந்தி பிக்ஷுவிடமிருந்து சத்யாச்ரயருக்கு ஓலை கொண்டு வந்ததாக இந்த வாலிபன் சொல்லுகிறான். இதோ அந்த ஓலை!'' என்று கூறி, பரஞ்சோதியிடமிருந்து வழியில் கைப்பற்றிய ஓலையைப் புலிகேசியிடம் சமர்ப்பித்தான்.

புலிகேசி ஓலையைப் பிரித்து, கவனமாகப் படித்தான். அப்போது அவனுடைய முகத்தில் வியப்புக்கும் குழப்பத்துக்கும் அறிகுறிகள் ஏற்பட்டன. ஒரு தடவைக்கு இரண்டு தடவை படித்த பிறகும் தெளிவு ஏற்பட்டதாகத் தோன்றவில்லை.

அவன் ஓலையைப் படித்தபோது, அவனுக்கு எதிரிலிருந்த படைத் தலைவர்கள் அவனுடைய முகத்தையே பார்த்த வண்ணம் இருந்தனர்.

பரஞ்சோதியோ சொல்ல முடியாத மனக் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தான். அவன் நாகநந்தியின் ஓலையை எடுத்துக் கொண்டு கிளம்பிய போது இம்மாதிரி பகைவர்களிடம் சிறைப்பட்டு எதிரி அரசன் முன்னால் நிற்க நேரிடுமென்று நினைக்கவே இல்லை. அந்த எதிரியின் பாசறையில் வஜ்ரபாகுவைச் சந்தித்ததும், அவன்போகிற போக்கில், ''சத்





யாச்ரய புலிகேசியிடம் உண்மையை உள்ளபடி சொல்லு!" என்று கூறியதும் அவனுடைய மனக் குழப்பத்தை அதிகமாக்கின.

இன்னும் நாகநந்தி தன்னிடம் ஓலையைக் கொடுத்தபோது கூறிய வார்த்தைகள் நினைவு வந்தபோது அவன் தலையே கிறுகிறுக்கும் போல் ஆகி விட்டது. "இந்த ஓலையை நீ சத்யாச்ரயரிடமே கொடுக்க வேண்டும். வேறு யாரிடமும் கொடுக்கக் கூடாது. சத்யாச்ரயரை ஒருவேளை நீ வழியிலேயே சந்தித்தாலும் சந்திக்கலாம். எப்போது எந்தக் கோலத்தில் அவர் இருப்பார் என்று சொல்லமுடியாது. அவரை எந்தக் கோலத்தில் பார்த்தாலும் நீ அதிசயப் படாதே!"—இவ்விதம் நாகநந்தி பிக்ஷு கூறியது அவனுக்கு நினைவு வந்தது. 'நாகநந்தி கூறிய சத்யாச்ரயர் இந்த வாதாபி சக்ரவர்த்தி புலிகேசியா? நாம் கொண்டு வந்த ஓலையில் உள்ள விஷயம் அஜந்தா வர்ணக் கலையை சம்பந்தமானதுதானா? அல்லது, ஒரு பெரிய மர்மமான சூழ்ச்சியில் நாம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறோமா?' என்று பரஞ்சோதி எண்ணியபோது, அவன் அறிவு குழம்பியது.

புலிகேசி சட்டென்று தலையைத் தூக்கி எதிரே இருந்த படைத் தலைவர்களைப் பார்த்து, "இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா?" என்று கேட்டான். உடனே, "உங்களால் ஒருநாளும் ஊகம் செய்ய முடியாது" என்று தானே மறுமொழியும் கூறிவிட்டு, இடியிடியென்று சிரித்தான்.

இடிமுழக்கம் நிற்பது போலவே சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு, காவலர்களுக்கு நடுவில் கட்டுண்டு நின்ற பரஞ்சோதியை உற்று நோக்கினான். புலிகேசியினுடைய கழுகுக் கண்களின் கூரிய பார்வை பரஞ்சோதியின் நெஞ்சையே ஊடுருவுவது போலிருந்தது.

புலிகேசி அவனைப் பார்த்துக் கடுமையான குரலில், ''பிள்ளாய்! உண்மையைச் சொல். நீ யார்? எங்கு வந்தாய்? இந்த ஓலையைக் கொடுத்தது யார்? இதிலுள்ள விஷயம் இன்னதென்று உனக்குத் தெரியுமா?'' என்று சரமாரியாகக் கேள்விகளைப் போட்டான். அந்தக் கேள்விகளில் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியாதவனைப் பரஞ்சோதி மௌனம் சாதித்த வண்ணம் நின்றான்.

அதனால் புலிகேசியின் கோபம் கணத்துக்குக் கணம் பொங்கிப் பெருகிற்று. அதைப் பார்த்த படைத் தலைவர்களில் ஒருவன், ''பிள்ளையாண்டான் செவிடு போலிருக்கிறது!'' என்றான்.

இன்னொருவன், ''ஊமை!'' என்றான்.

மற்றொருவன் ''அதெல்லாம் இல்லை. பையனுக்கு நம்முடைய பாஷை புரியவில்லை. அதனால்தான் விழிக்கிறான்!'' என்றான்.



அப்போது புலிகேசி, ''ஆமாம்; அப்படித்தான் இருக்க வேண்டும். ஜைன முனிவர்கள் கோபித்துக்கொண்டு போனதில் அதுதான் ஒரு சங்கடம். அவர்கள் இருந்தால் எந்த பாஷையாக இருந்தாலும் மொழிபெயர்த்துச் சொல்லி விடுவார்கள். போகட்டும்; இவனைக் கொண்டு போய்ச் சிறைப்படுத்தி வையுங்கள்! பிறகு பார்த்துக் கொள்வோம்!'' என்று கூறியவன் திடீரென்று ''வேண்டாம்! இவன் இங்கேயே இருக்கட்டும். சற்று முன் வந்திருந்த வீரன் வஜ்ரபாஹுவை உடனே போய் அழைத்து வாருங்கள்!'' என்றான்.

வஜ்ரபாஹுவை அழைக்க ஆள் போன பிறகு புலிகேசி படைத் தலைவர்களைப் பார்த்துக் கூறினான்:

'' இந்த ஓலையில் என்ன எழுதியிருக்கிறது, தெரியுமா ? கேளுங்கள் அதிசயத்தை! இந்த ஓலை கொண்டு வருகிற பையனிடம் அஜந்தா வர்ண இரகசியத்தைச் சொல்லி அனுப்ப வேண்டுமாம்! இரண்டு வருஷங்கள் நான் அஜந்தாக் குகைகளிலேயே வசித்திருந்தும் அந்தப் புத்த பிக்ஷுக்களிடமிருந்து வர்ண இரகசியத்தை என்னால் அறிய முடியவில்லை. பிக்ஷுக்கள் அவ்வளவு பத்திரமாக அஜந்தா வர்ண இரகசியத்தைப் பாதுகாக்கிறார்கள். அப்படியிருக்க, இந்தப் பிள்ளையிடம் அதைச் சொல்லி அனுப்பும்படி இந்த ஓலையில் எழுதியிருக்கிறது. எழுத்தோ நம் பிக்ஷு எழுதியதாகவே தோன்றுகிறது. இதைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர், மைத்ரேயரே !'' என்று சொல்லிக் கொண்டே, புலிகேசி மன்னன் அந்த ஓலையை ஒற்றர் படைத் தலைவனிடம் நீட்டினான்.

மைத்ரேயன் ஓலையை வாங்கிக் கவனமாகப் படித்தான். பின்னர், சக்கரவர்த்தியைப் பார்த்து, ''சத்யாச்ரயா! இதில் ஏதோ மர்மமான செய்தி இருப்பதாகத் தெரிகிறது. பையனை விசாரிக்கிறபடி விசாரித்தால் தெரிகிறது!'' என்றான்.

'' அழகுதான், மைத்ரேயரே ! பையனை எப்படி விசாரித்தாலும் அவன் சொல்கிறது நமக்கு விளங்கினால்தானே உபயோகம் ? அதற்காகத்தான் வஜ்ரபாஹுவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றான் புலிகேசி.

இப்படி அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வஜ்ரபாஹு கூடாரத்துக்குள் நுழைந்தான். புலிகேசியின் அருகில் வந்து, வணங்கி, '' இராஜாதி ராஜனே! மறுபடியும் ஏதாவது ஆக்ஞை உண்டா?'' என்று கேட்டான்.

''வஜ்ரபாஹு! உம்மைப் போலவே இந்தப் பையனும் எனக்கு ஓர் ஓலை கொண்டு வந்திருக்கிறான். ஆனால், அதிலுள்ள விஷயம் மர்மமாக இருக்கிறது. ஓலையை யார் கொடுத்தார்கள், யாரிடம் கொடுக்கச் சொன்னார்கள் என்பதை விவரமாக விசாரித்துச் சொல்லும்; அதற்காகத்தான் உம்மை மீண்டும் தருவித்தேன்'' என்றான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியின் பக்கம் திரும்பி உற்றுப் பார்த்து, ''ஆகா ! இந்தப் பையனா? இவனை நான் முந்தாநாள் இரவு மகேந்திர மண்டபத்தில் பார்த்தேனே! இவனைப் பார்த்ததுமே





... ள் வர
...ற்பறைக்கு
உயிரூட்ட
உங்களுக்குத்
தேவை
தோண்ணூறே
ரூபாய்!

எழில்மிகு, சின்னஞ்சிறு காயர் கம்பளங்கள், மெத்தென்று சுகம் தரும் கோல நவீன காயர் கம்பளங்கள். கண்ணைப் பறிக்கும் வண்ணங்கள், கருத்திலிடம் பெறும் டிசைன்கள். புதிய கலையழகு மிளிரும் நெசவு! வரவேற்பறைத் தரைக்கு வடிவழகு சேர்த்திடுவீர்... விருந்தினர் அறையிலே கோல எழில் கூட்டிடுவீர். காயரின் கண்பறிக்கும் கம்பள வகையிலே எதை வேண்டுமாயினும் வாங்கிடுவீர். கலையழகும் நவீன நாகரீக எழிலும் இணைத்து, எளிய அறையைக்கூட ஏற்றமுறச் செய்திடுவீர். விலை? கவலை வேண்டாம். மிகமிக நயமானது. சொல்லப் போனால் நம்பமுடியாத அளவு நயமானது.

காயர் கம்பளங்கள் நீடித்து உழைப்பவை, 100% பூச்சியரிக்காது, எளிதில் சுத்தம் செய்யத் தக்கவை.

காயர்
பெரிய & சிறு கம்பளங்கள்
நயமான விலையிலே
நவீனக் கோலம்!

காயர் போர்டு, கொச்சி-682016

இன்றே காயர் வாங்குங்கள், ஷோரூம்கள்: பம்பாய், புது டில்லி, கல்கத்தா, சென்னை, பெங்களூர், கொச்சி, மதுரை, சந்திகர், புவனேஷ்வர் மற்றும் அனேக வியாபாரிகள்.

மோதி

இன்பக் குளியலுக்கு இந்தியாவின் இணையற்ற சோப்



இப்போது இரண்டு சைஸ்களில் உங்களை நாடி வருகிறது. இந்த சோப் தரும் வளம் பொருந்திய பட்டுப்போன்ற நுரை உங்கள் மேனியில் பட்டுக் கொஞ்சும் போது உடல் புல்லரிக்கும். அந்த இன்பத்தில் குளித்து எழுகையில் உலகமே இன்பமயமாகத் தோன்றும். மோதி உங்களுக்கெனவே உருவாக்கப் பட்டது. மல்லிகை, ரோஜா, வெட்டிவேர் ஆகிய மூன்று நறுமணங்கள். இன்றே ஒன்றைத் தேர்ந்தெடுப்பீர். நாளை முதலே இன்பவாரிதியில் குளிப்பீர்!

மோதி

இன்பக் குளியலுக்கான
இணையற்ற சோப்
இப்போது இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது.



டாடா தயாரிப்பு.

OBM-2384 TM

எனக்குச் சந்தேகம் உண்டாயிற்று. விசாரித்தேன். ஆனால், பையன் அழுக்கன்; மறுமொழியே சொல்லவில்லை!'' என்றான்.

''இப்போது விசாரியும்; மறுமொழி சொல்லாவிட்டால், நாம் சொல்லச் செய்கிறோம்'' என்றான் வாதாபி அரசன்.

''மன்னர் மன்னா! இவன் சுத்த வீரனாகக் காண்கிறான். இவனைப் பயமுறுத்தித் தகவல் ஒன்றும் அறிய முடியாது. நானே விசாரித்துப் பார்க்கிறேன்'' என்று வஜ்ரபாஹு கூறிவிட்டு, பரஞ்சோதியை நோக்கி, ''தம்பி! நான் அப்போதே சொன்னேன் அல்லவா? அதன்படி சத்யாச்ரயரிடம் உள்ளது உள்ளபடி சொல்லு. பயப்பட வேண்டாம். நான் உன்னைத் தப்புவிக்கிறேன்'' என்றான்.

அதற்குப் பரஞ்சோதி, ''ஐயா! எனக்குப் பயமே கிடையாது. எதற்காகப் பயப்பட வேண்டும்? உயிருக்கு மேலே நஷ்டமாகக் கூடியது ஒன்றுமில்லை அல்லவா? இந்த ஓலையை நாகார்ஜுன பர்வதத்துக்குக் கொண்டு போய்ச் சத்யாச்ரயரிடம் கொடுக்கும்படி நாகநந்தி பிக்ஷு கூறினார். நீங்கள் சொல்லுகிறபடி இவருக்குத்தான் இந்த ஓலை என்றால், பெற்றுக் கொண்டு விடை எழுதிக் கொடுக்கட்டும். வேறு என்ன நான் சொல்லக்கூடும்'' என்றான்.

வஜ்ரபாஹு புலிகேசியைப் பார்த்து, ''அரசர்க்கரசே! ஓலையை நாகநந்தி பிக்ஷுதான் கொடுத்ததாகவும், அதில் ஏதோ அஜந்தா வர்ணச் சேர்க்கையைப் பற்றி எழுதியிருப்பதாகவும் பிள்ளையாண்டான் சொல்கிறான். அந்த ஓலையை நான் சற்றுப் பார்வையிடலாமா?'' என்று கேட்டான்.

புலிகேசி ஓலையை வஜ்ரபாஹுவிடம் கொடுத்து, ''இதிலிருந்து தெரியக் கூடியது ஒன்றுமில்லை. நீர் வேண்டுமானாலும் பாரும்'' என்றான்.

வஜ்ரபாஹு ஓலையில் சிறிது நேரம் கவனம் செலுத்திவிட்டு, ''பிரபு! நாகார்ஜுன பர்வதத்திலுள்ள புத்த சங்கராமத்தின் தலைவரின் திருநாமம் சத்யாச்ரய பிக்ஷுதானே?'' என்று கேட்டான்.

''ஆமாம்; அதனால் என்ன?''

''இந்த ஓலை அவருக்கே இருக்கலாம் அல்லவா?''

''இருக்கலாம்; ஆனால், நாகநந்தி அவருக்கு இம்மாதிரி விஷயத்தைப் பற்றி எழுத நியாயமே இல்லையே?''

''பிரபு! இந்த ஓலையைப் படித்ததும் நாகநந்தி பிக்ஷு கூறிய ஒரு விஷயம் எனக்கு ஞாபகம் வருகிறது. கிருஷ்ணா நதிக் கரையோடு வேங்கி ராஜ்யத்தின் மேல் படையெடுத்துச் செல்லும் தங்கள் சகோதரருக்கும் செய்தி அனுப்ப வேண்டும் என்று அவர் சொன்னார். ஒருவேளை தங்கள் சகோதரர் விஷ்ணுவர்த்தன மகாராஜாவுக்கு இதில் ஏதாவது செய்தி இருக்கலாம் அல்லவா?''

இதைக் கேட்டதும் புலிகேசியின் முகம் பிரகாசம் அடைந்தது. ''வஜ்ரபாஹு! நீர் மகா புத்திசாலி. நம்முடனேயே நீர் இருந்து விடலாமே? பல காரியங்களுக்கு அநுகூலமாயிருக்கும்'' என்றான்.

பிறகு, தன் படைத் தலைவர்களிடம் சிறிது கலந்து யோசித்துவிட்டு, ''எப்படியும் விஷ்ணுவர்த்தனனுக்கு நான் ஓலை அனுப்ப வேண்டியிருக்கிறது. ஓலையுடன் ஒன்பது வீரர்கள் போகட்டும். அவர்களுடன் இந்தப் பையனையும் அனுப்புங்கள். இவனுடைய ஓலையின் விஷயம் என் தம்பிக்கும் விளங்காவிட்டால், இவனை உடனே சிரச்சேதம் செய்யக் கட்டளையிட்டு அனுப்புங்கள்'' என்றான். பிறகு, வஜ்ரபாஹுவை நோக்கி, ''இந்த விஷயத்தைப் பையனிடம் சொல்லும்'' என்று ஆக்ஞாபித்தான்.

வஜ்ரபாஹு பரஞ்சோதியிடம், ''தம்பி! நாகார்ஜுன மலைக்கு இங்கிருந்து சக்கரவர்த்தியின் ஓலையுடன் ஒன்பது வீரர்கள் நாளைக் காலையில் போகிறார்கள். அவர்கள் உன்னையும் அழைத்துப் போவார்கள். நீ கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். நாளை இராத்திரி உன்னை அநேகமாக நான் வழியில் சந்திப்பேன்'' என்றான்.

பரஞ்சோதி அகமும் முகமும் மலர்ந்தவனாய், ''ஐயா! தங்களுடன் பிரயாணம் செய்வதாயிருந்தால் நரகத்துக்கு வேணுமானாலும் நான் வரச் சித்தம். தங்களிடம் கதை கேட்க அவ்வளவு ஆவலாக இருக்கிறது!'' என்றான்.

''பையன் என்ன சொல்கிறான்?'' என்று புலிகேசி கேட்டதற்கு, ''பிள்ளையாண்டான் பலே கைகாரன்; தான் கொண்டு வந்த ஓலை தங்களுக்கு இல்லையென்றால் தன்னிடமே திருப்பிக் கொடுத்துவிடும்படி கேட்கிறான். இளங்கன்று பயமறியாது என்று தமிழிலே ஒரு பழமொழி உண்டு!'' என்றான் வஜ்ரபாஹு.

புலிகேசி சிரித்துவிட்டு, ''அப்படியா? நல்லது; ஓலையைப் பையனிடமே கொடுத்து வைக்கலாம். இப்போதைக்கு

அவனுடைய கட்டையும் அவிழ்த்து விடுங்கள்!'' என்றான்.

ஓலையைப் பரஞ்சோதியிடம் கொடுத்ததோடு, அவனுடைய கட்டுக்களையும் உடனே அவிழ்த்துவிட்டார்கள். பிறகு, அவனைச் சக்கரவர்த்தியின் சமூகத்திலிருந்து அழைத்துச் சென்றார்கள்.

* * *

மறு நாள் அந்தி மயங்கும் சமயத்தில் பரஞ்சோதியும் அவனுக்கு முன்னும் பின்னுமாகச் சென்ற ஒன்பது வீரர்களும் காட்டு மலைப் பாதையில் ஒரு குறுகிய கணவாயைத் தாண்டி, அப்பால் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு பழைய பாழடைந்த வீட்டை அடைந்தார்கள். அந்த வீட்டின் வாசல் திண்ணையில் ஒரு முதிய கிழவன் உட்கார்ந்திருந்தான். தலையும் தாடியும் நரைத்த அந்தக் கிழவன் உலகப் பிரக்ஞையே அற்றவனாய்க் கையிலிருந்த ஜப மாலையை உருட்டிக் கொண்டிருந்தான். பத்துக் குதிரைகள் சேர்ந்தாற்போல் வந்து அவ்வீட்டின் வாசலில் நின்றதைக் கூட அவன் பொருட்படுத்தவில்லை.

வந்த வீரர்களில் ஒருவன் கிழவனை என்னவோ கேட்க, அவன் இரண்டொரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு மறுபடியும் ஜப மாலையை உருட்டலானான்.

அன்றிரவு அந்தப் பாழ் வீட்டிலேயே தங்குவதென்று அவ்வீரர்கள் முடிவு செய்தார்கள். தங்களில் நாலு பேரை நாலு ஜாமத்துக்குக் காவல் செய்யவும் ஏற்படுத்திக்கொண்டார்கள்.

எல்லாரையும்விட அதிகக் களைப்புற்றிருந்த பரஞ்சோதிக்குப் படுத்தவுடனே கண்ணைச் சுற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. தூக்கத்தில் ஆழ்வதற்கு முன்னால் அவன் மனத்தில் கடைசியாக, 'வஜ்ரபாஹு இன்றிரவு சந்திப்பதாகச் சொன்னாரே? இனி எங்கே சந்திக்கப் போகிறார்!' என்ற எண்ணம் தோன்றியது.

பரஞ்சோதி அன்றைக்கும் தூக்கத்தில் கனவு கண்டான். புலிகேசியின் கூரிய கழுகுப் பார்வை ஒரு கணம் அவன் நெஞ்சை ஊடுருவிற்று. ''இவனை யானையின் காலால் இடறச் செய்யுங்கள்!'' என்று புலிகேசி கட்டளையிடுகிறான். பரஞ்சோதி தன்னை இடற வந்த யானையின் மீது வேலை எறிந்துவிட்டு ஓடுகிறான். யானை அவனை விடாமல் துரத்தி வருகிறது. கடைசியில், அது கிட்ட நெருங்கி விட்டது. யானையின் தும்பிக்கை தன் தோளில் பட்டதும், பரஞ்சோதி திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கிறான். பார்த்தால் யானையின் முகம் அந்த வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து ஜபமாலை உருட்டிக் கொண்டிருந்த கிழவனின் முகமாகவும், துதிக்கை அக்கிழவனின் கையாகவும் மாறியிருக்கின்றன.

இது கனவில்லை; உண்மையாகவே அந்தக் கிழவன் தன்னைத் தொட்டு எழுப்புகிறான் என்பதைப் பரஞ்சோதி உணர்ந்ததும் சட்டென்று எழுந்து உட்கார்ந்தான்.

நாற்பத்துநான்காம் அத்தியாயம்

மாயக் கிழவன்

கிழவனுடைய கையில் வேல் ஒன்று இருப்பதையும், அதைப் பெற்றுக் கொண்டு தன்னுடன் கிளம்பி வரும்படி கிழவன் சமிக்ஞை செய்வதையும், பல கணி வழியாக வந்த நிலவின் மங்கிய ஒளியில் பரஞ்சோதி உற்றுப் பார்த்துத் தெரிந்து கொண்டான். பரஞ்சோதி சிறிது தயங்கியபோது, கிழவன் அவனுடைய ஒரு கையைத் தன்னுடைய இடது கையினால் அழுத்திப் பிடித்தான். உடனே பரஞ்சோதிக்குப் பழைய ஞாபகம் ஒன்று வரவே, அந்த மாயக் கிழவன் கொடுத்த வேலை வாங்கிக் கொண்டு துள்ளி எழுந்தான்.

இருவரும் வீட்டின் கொல்லைப் புறம் வழியாக வெளியே வந்தார்கள். பரஞ்சோதி தன்னுடைய குதிரையும் இன்னொரு குதிரையும் அங்கே சேணம் பூட்டி ஆயத்தமாக நிற்பதைக் கண்டான். இருவரும் குதிரைகள் மேல் பாய்ந்து ஏறிக் கொண்டார்கள்.

பரஞ்சோதி எதிர்பார்த்தது போல் கிழவனுடைய குதிரை உடனே பாய்ச்சலில் கிளம்பவில்லை. பரஞ்சோதிக்கு முதுகுப்புறத்தைக் காட்டிய வண்ணம் அவன் ஏதோ செய்து கொண்டிருந்தான். எனவே பரஞ்சோதியும் தன்னுடைய குதிரையை இழுத்துப் பிடிக்க வேண்டியதாயிற்று.

தாமதம் செய்து கொண்டிருந்த கிழவன் நடுவில், ''தம்பி! என்னை யார் என்று தெரிகிறதா?'' என்று கேட்டான்.

''தாடியைப் பார்த்து முதலில் ஏமாந்துதான் போனேன். கையைப் பிடித்து அழுத்தியதும்தான் தெரிந்தது. பிசாசுக்குப் பயப்படாத சூரர் வஜ்ரபாஹு தாங்கள்தானே?'' என்றான் பரஞ்சோதி.

உரத்த சத்தத்துடன் சிரித்துக்கொண்டு கிழவன் திரும்பியபோது அவன் முகத்திலிருந்த நரைத்த தாடியைக் காணவில்லை. தாடி நீங்கிய முகம் வீரன் வஜ்ரபாஹுவின் முகமாகக் காட்சி யளித்தது.

''யோசித்துச் சொல்லு அப்பனே! என்னோடு வருவதற்கு உனக்குச் சம்மதமா?'' என்று வஜ்ரபாஹு கேட்க, பரஞ்சோதி, ''எனக்கு வரச் சம்மதம் தான். உங்களுக்குத்தான் இங்கிருந்து போகும் உத்தேசம் இல்லை போலிருக்கிறது!'' என்றான்.

''ஏன் அப்படிச் சொல்லுகிறாய்?''

''பின்னே, இப்படிச் சத்தம் போட்டுப் பேசுகிறீர்களே? அவர்கள் விழித்துக்கொள்ள மாட்டார்களா?''

''அவர்களை எழுப்புவதற்காகவே தான் இரைந்து பேசுகிறேன். தூங்குகிறவர்களை ஏமாற்றிவிட்டு ஓடித் தப்பித்துக் கொண்டான் என்ற அவப்பெயர் அச்சுத விக்கிராந்தனுடைய வம்சத்தில் உதித்த வீரன் வஜ்ரபாஹுவுக்கு வரப்படுமா?'' என்று கூறி எதையோ நினைத்துக் கொண்டவன் போல் இடி இடி என்று சிரித்தான்.

இதற்குள் . வீட்டு வாசலில் காவலிருந்த வீரன் குதிரைகளின் காலடிச் சத்தத்தையும் பேச்சுக் குரலையும் கேட்டு, வீட்டைச் சுற்றிக் கொல்லைப் புறம் வந்து பார்த்தான். இரண்டுபேர் குதிரைமேல் ஏறிக் கிளம்பிக் கொண்டிருப்பதை அவன் கண்டு, ''ஓ!'' என்ற கூச்சலுடன் வீட்டுக்குள் ஓடினான். உடனே அந்த வீட்டுக்குள் வீரர்கள் ஒருவரை யொருவர் எழுப்பும் சத்தமும், ''என்ன? என்ன?'' என்று கேட்கும் சத்தமும், ''மோசம்!'' ''மோசம்!'' ''தப்பி ஓடுகிறார்கள்'' என்ற கூக்குரலும் ஒரே குழப்பமாக எழுந்தன.

வஜ்ரபாஹுவும் பரஞ்சோதியும் ஏறியிருந்த குதிரைகள் முதல் நாள் வந்த பாதையில் திரும்பிச் செல்லத் தொடங்கின. ஆனால் வஜ்ரபாஹு குதிரையை வேண்டுமென்றே இழுத்துப் பிடித்து அதன் வேகத்தைக் குறைத்ததுடன், ஆங்காங்கே நின்று நின்று சென்றான். பரஞ்சோதி இந்தத் தாமதத்தைப் பற்றிக் கேட்டபோது, ''சளுக்கர்கள் நம்மை வந்து பிடிப்பதற்கு அவகாசம் கொடுக்க வேண்டாமா? அவர்கள் வழி தப்பி வேறு எங்காவது தொலைந்து போய் விட்டால்?...'' என்றான்.

''போய்விட்டால் என்ன?'' என்று பரஞ்சோதி கேட்டான்.

''இவ்விடத்துக்குக் கொஞ்ச தூரத்தில் ஒரு மலைக் கணவாய் இருக்கிறதல்லவா? அந்தக் கணவாயில் துர்க்கா தேவி கோயில் ஒன்று இருக்கிறது. நேற்று வரும்போது நீ கவனித்தாயா?''

''இல்லை.''

''நீ எங்கே கவனிக்கப் போகிறாய்? உன்னுடைய கவனமெல்லாம் ஒரு வேளை திருவெண்காட்டுக் கிராமத்தில் இருந்திருக்கும்...''

''என்ன சொன்னீர்கள்?''

''அந்தத் துர்க்கையம்மன் கோயில் வழியாக நான் நேற்றைக்கு வந்தபோது இன்று சூரியோதய சமயத்தில் அம்மனுக்கு ஒன்பது உயிர்களைப் பலிகொடுப்பதாக வேண்டிக் கொண்டு வந்திருக்கிறேன். இவர்கள் வேறு வழியாகப் போய்விட்டால், என்னுடைய வேண்டுதலை நிறைவேற்ற முடியாதல்லவா?''



ஆனால், மேற்கூறிய கிழவரின் வார்த்தைகள் பரஞ்சோதியின் செவிகளில் விழுந்தனவாயினும், அவன் மனத்தில் பதியவில்லை.

பெரியதொரு வியப்பு அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. திருச்செங்காட்டாங்குடியிலிருந்து அவன் கிளம்பியதிலிருந்து எத்தனை எத்தனையோ தூரம் பிரயாணம் செய்திருக்கிறான், எவ்வளவோ அதிசய சம்பவங்களைப் பார்த்திருக்கிறான். இவ்வளவிலும் இடையிடையே அவனுடைய மனமானது திருவெண்காட்

டுக்குப் போய் வந்து கொண்டிருந்தது. 'ஆனால் அந்த விஷயம் இந்த வேஷதாரி வஜ்ரபாஹுவுக்கு எப்படித் தெரிந்தது?' என்று நினைத்துப் பரஞ்சோதி ஆச்சரியக் கடலில் மூழ்கினான்.

* • *

பலபலவென்று பொழுது விடியும் தருணத்தில் வஜ்ரபாஹுவும், பரஞ்சோதியும் ஒரு மலைக் கணவாயை அடைந்தார்கள். அவர்கள் இதுகாறும் வந்த பாதையானது அங்கே குறுகி இருபுறமும் செங்குத்தாக ஓங்கி வளர்ந்த பாறைச் சுவர்களின் வழியாகச் சென்றது. கணவாயைத் தாண்டியதும், ஒரு பக்கம் மட்டும் பாறைச் சுவர் உயர்ந்து, இன்னொரு பக்கம்



அதல பாதாளமான பள்ளத்தாக்காகத் தென்பட்டது.

இந்த இடத்துக்கு வந்ததும் வஜ்ரபாஹு தன் குதிரையை நிறுத்தினான். பரஞ்சோதியையும் நிறுத்தும்படி செய்தான்.

காலை நேரத்தில் குளிர்ந்த இளங் காற்று மலைக் கணவாயின் வழியாக ஜிலுஜிலுவென்று வந்தது. பட்சிகளின் மனோகரமான குரல் ஒலிகளுடன் தூரத்திலே குதிரைகள் வரும் காலடிச் சத்தம் டக், டக், டக், டக் என்று கேட்டது.

''தம்பி! உன்னை மறுபடியும் கேட்கிறேன்: அந்தச் சளுக்க வீரர்கள் வருவதற்குள்ளே தீர்மானமாகச் சொல்! உனக்கு என்னோடு வருவதற்கு இஷ்டமா?'' என்று வஜ்ரபாஹு கேட்டான்.

'' உங்களோடுதான் வந்து விட்டேனே? இனிமேல் திரும்பிப் போக முடியுமா?''

''உனக்கு இஷ்டமில்லா விட்டால் இப்போது கூட நீ திரும்பிப் போய் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.''

''சேர்ந்து கொண்டு...?''

''அவர்கள் போகும் இடத்துக்கு நீயும் போகலாம்.''

''அவர்கள் எங்கே போகிறார்கள்?''

''நாகார்ஜுன மலைக்குப் போவதாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் அவர்கள் போகப் போவது யமலோகத்துக்கு.''

''அங்கே அவர்களை அனுப்பப் போவது யார்?''

''உனக்கு இஷ்டமானால் நீயும் நானுமாக; இல்லாவிட்டால், நான் தனியாக.''

பரஞ்சோதி சிறிது யோசித்துவிட்டு, '' தாங்கள் எங்கே போகிறீர்கள் ?'' என்று கேட்டான்.

'' பல்லவ சைனியத்தின் பாசறைக்கு!''

''ஆஹா ! நான் நினைத்தபடிதான்!'' என்றான் பரஞ்சோதி.

''உனக்கு எப்படித் தெரிந்தது?''

'' நேற்றெல்லாம் யோசனை செய்ததில் தெரிந்தது.''

''இன்னும் என்ன தெரிந்தது?''

''தாங்கள் காஞ்சிச் சக்கரவர்த்தியின் ஒற்றர் என்றும் தெரிந்தது.''

''தம்பி! உன்னை என்னவோ என்று நினைத்தேன். வெகு புத்திசாலியாக இருக்கிறாயே?''

''ஐயா! நான் உங்களோடு வந்தால் பல்லவ சைனியத்தில் என்னைச் சேர்த்துக்கொள்வார்களா ?'' என்று கேட்டான் பரஞ்சோதி.

''கட்டாயம் சேர்த்துக் கொள்ளுவார்கள்! கரும்பு தின்னக் கூலியா? உன்னைப் போன்ற வீரனைப் பெறப் பல்லவ சைனியம் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே?'' என்றான் வஜ்ரபாஹு.

பரஞ்சோதி இதற்கு மறுமொழி சொல்லவில்லை. சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு, ''அப்பனே! என்ன யோசிக்கிறாய்?'' என்று வஜ்ரபாஹு கேட்டான்.

''என்னிடமுள்ள ஓலையை என்ன செய்வது என்றுதான்...!''

''அதோ தெரிகிற பள்ளத்தாக்கிலே ஓடுகிற தண்ணீரிலே போடு. அதனால் இனிமேல் பிரயோஜனம் ஒன்றுமில்லை.''

''நாகநந்தியும் ஆயனரும் எவ்வளவு ஏமாற்றம் அடைவார்கள்?''

''ஆம்: நாகநந்தி பெரிய ஏமாற்றம் தான் அடைவார்!'' என்று கூறிவிட்டு, வஜ்ரபாஹு கலகலவென்று சிரித்தான்.

''ஏன் சிரிக்கிறீர்கள்?''

''இப்படிப்பட்ட கும்பகர்ணனுகைப் பார்த்து. அந்தப் புத்த பிக்ஷு ஓலை யைக் கொடுத்தாரே என்றுதான்.''

''ஐயா! தயவுசெய்து என்னை மன்னி யுங்கள். நான் இப்படியே நாகார் ஜுன மலைக்குப் போய் நாகநந்தியின் ஓலையைக் கொடுத்துவிட்டுப் பின்னர் பல்லவ சைனியத்தின் பாசறைக்கு வரு கிறேன்.''

வளரும் விஞ்ஞானம்



எக்ஸ்-24பி சோதனை விமானம் பி52 தாய்க் கப்பலி லிருந்து 12000 மீட்டர் உயரத்தில் விடுபட்டு (கீழ் படம்) கலிஃபோர்னியாவிலே எட்வார்ட்ஸ் ஃபீல்ட் நிலையத்தில் இறங்கும் தளம் நோக்கிச் செல்கிறது (மேல் படம்). வருங்காலத்தில் வாயுமண்டலத்தின் விளிம்பில் பறக்கப்போகும் விண்வெளி விமானங் களின் முன்னோடி எக்ஸ்-24பி விமானம். இதில் ராக்கெட் இன்ஜின் ஒன்றுள்ளது. விமானத்தின் வேகத்தை மணிக்கு 1600 கிலோ மீட்டருக்குக் கூட்ட வல்லது இந்த இன்ஜின்.



''வீண் வேலை அப்பனே! நாகநந்தி உன்னிடம் கொடுத்த ஓலை அக்கினிக்கு அர்ப்பணமாகி விட்டது!''

''என்ன சொன்னீர்கள்?''

''நாகநந்தியின் ஓலை தீயில் எரிந்து போய்விட்டது என்றேன்.''

''இதோ என்னிடம் இருக்கிறதே!''

''அது நான் எழுதி வைத்த ஓலை தம்பி!''

''என்னுடைய சந்தேகம் சரிதான்'' என்று பரஞ்சோதி கூறி ஓலைச் சுருளை எடுத்து வீசிப் பள்ளத்தாக்கில் எறிந் தான்.

''அன்றிரவு தீபத்தில் மயக்க மருந்து சேர்த்து என்னைத் தூங்க வைத்துவிட் டுத்தானே ஓலையை எடுத்தீர்கள்?'' என்று கேட்டான்.

''உன்னுடைய வேலின் முனையைப் போலவே உன்னுடைய அறிவும் கூர் மையாகத்தான் இருக்கிறது!'' என்றான் வஜ்ரபாஹு.

வஜ்ரபாஹுவை ஆச்சரியமும் பக்தி யும் ததும்பும் கண்களால் பரஞ்சோதி பார்த்து, ''ஐயா! நாகநந்தி என்னிடம் அனுப்பிய ஓலையில் என்ன எழுதி யிருந் தது?'' என்று கேட்டான்.

''புலிகேசியைக் காஞ்சிமாநகருக்கு உடனே வந்து தென்னாட்டின் ஏக சக்ராதிபதியாக முடி சூட்டிக்கொள் ளும்படி எழுதியிருந்தது!''

''அடடா! அப்படிப்பட்ட துரோக மான ஓலையையா நான் எடுத்துக் கொண்டு வந்தேன்? ஐயோ! என்ன மூடத்தனம்!'' என்று புலம்பினான் பரஞ்சோதி.

''போனதைப் பற்றி அப்புறம் வருத் தப்படலாம். இதோ சளுக்க வீரர்கள் யமனுலகம் போக அதிவேகமாக வரு கின்றனர். நீ என்ன செய்யப் போகி றாய்?'' என்று வஜ்ரபாஹு கேட்டான்.

''தங்கள் விருப்பம் எப்படியோ அப்படி!''

''சரி, இந்தக் கணவாயின் இரு பக்கமும் நாம் இருவரும் நிற்கலாம். முதலில் வருகிறவன் மார்பில் உன் னிடமுள்ள ஈட்டியைப் பிரயோகம் செய். அப்புறம் இந்த வாளை வைத்துக் கொண்டு உன்னால் முடிந்த வரையில் பார்!'' என்று வஜ்ரபாஹு கூறி, தான் வைத்திருந்த இரண்டு வாட்களில் ஒன்றைக் கொடுத்தான்.

பரஞ்சோதி ஆர்வத்துடன் அந்த வாளை வாங்கிக் கொண்டு தன்னுடைய 'கன்னி'ப் போருக்கு ஆயத்தமாக நின்றான். (தொடரும்)



வருகுது ஒரு
புதிய மென்மை
உங்கள் துணிகளுக்கு:
புதிய லக்ஸ் பவுடர்
NEW!
LUX
POWDER
சென்னையிலும் பெங்களூரிலும்
மட்டுமே கிட்டும்.
நேர்த்தியான துணிகளைப் புதுக் கருக்கான
மென்மையோடு வைத்திருப்பது புதிய லக்ஸ் பவுடர்

அலைகடல் ஓரம் ஓர் ஆன்மிகப் பண்ணை

'நித்தம் தவம்செய்யும் குமரி'யின் திருவடியிலே, அலைகடலிடையே, சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னே ஒரு மார்கழி மாதத்திலே சுவாமி விவேகாநந்தர் மூன்று நாட்கள் மோனத் தவமிருந்தார். அது ஒரு தனித் தவம். தமக்காக அல்லாது மானிட இனத்துக்காகவே நோற்ற தவம் அது. ஒரு புதிய பாரத எழுச்சியை அகக் கண்ணிலே கண்டு, அதன் பின் அந்த லட்சியம் நிறைவேற அறை கூவல் விட்டபடி இருந்தார் சுவாமிகள்.

மனிதனின் மிக உயர்ந்த பண்புகளை மிக உயர்ந்த சாதனைகளால் பலர் எட்ட முடிந்த இந்தத் தவத் திரு நாட்டிலே, ஏழைகளாய், பாமரர்களாய், நிலைகெட்ட மாந்தர் கூட்டம் எந்த வகையிலும் உய்ய வழி தெரியாமல் அறியாமையிலும், ஆற்றாமையிலும் வாடக் கண்டு மனம் மிக நொந்தார் விவேகாநந்தர். இவர்கள் உய்ய ஒரே வழி இவர்களிடையே ஒளிந்து உறங்கும் ஆன்ம சக்தியை எழுப்புவதே என்றும் உணர்ந்தார். ''எழுமின், விழிமின்'' என்று முழங்கியதோடு, நாட்டிலுள்ள கோடி கோடி எளிய மாந்தரை உயர்த்த ஒருநூறு இளைஞர்களாவது பிறருக்காக வாழ வாருங்கள் என்று அறைகூவல் விட்டார்.

அந்த ஆவல் இன்று நிறைவேறி வருகிறது'

சில ஆண்டுகளுக்கு முன்பு சுவாமி விவேகாநந்தர் நினைவாக, குமரி முனை அலைகடல் பாறையிலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பும் முயற்சி தொடங்கியபோதே இந்த முயற்சியும் தொடங்கியது எனலாம். விவேகாநந்தருக்கும் கன்னியாகுமரி தல மாட்சிக்கும் பொருத்தமான அந்தப் பெரிய மண்டபத்தை ஒரு கோடி முப்பத்தைந்து லட்ச ரூபாயில் அமைப்பதோடு நிறுத்திக்கொள்வதாக இல்லை, மண்டபக் குழுவினர். உறங்கிய மானுடத்தை உலுக்கி எழுப்பி இயங்கச் செய்த விவேகாநந்தருக்கு ஏற்ற நினைவுச் சின்னம் வெறும் மண்டபம் ஆகாது; அது ஒரு முதற் படியே. தொடர்ந்து நடைபெறும் ஒரு பெரும் பணியே அவருக்கு ஏற்ற நினைவுச் சின்னமாகும் என்ற கருத்தில் குமரி முனையில் ''விவேகாநந்தபுரம்'' தொடங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி நகரத்தின் வட கிழக்கே எழுபத்தைந்து ஏக்கர் விரிந்த நிலப்பரப்பில் உயர்ந்த கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. சுவாமி விவேகாநந்தரால் ஈர்க்கப்படுவோருக்கு இது ஒரு யாத்திரை ஸ்தலம். 1972 ஜனவரியில், விவேகாநந்தரின் ஜன்ம தினத்தில் இங்கே பிறந்துள்ளது ''விவேகாநந்த கேந்திரம்.''

பகீரதன் கங்கையைக் கொண்டு வந்த முயற்சி எப்படி இருக்கும்? நாட்டிலுள்ள ஒவ்வொரு ராஜ்யத்தையும் அணுகி உதவிபெற்று லட்சக் கணக்கான மக்களிடையே ஒவ்வொரு ரூபாயாக நிதி சேர்த்து, மண்டபம் எழுப்பும் போது நேர்ந்த இடர்களை யெல்லாம் அமைதியாக ஏற்று முடித்த ஸ்ரீ ஏகநாத் ரானடேயின் முயற்சியை அறிந்தால் பகீரதப் பிரயத்தனத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம். இவர் ஒரு சுவாமிஜி அல்ல. கிருகஸ்தரும் அல்ல; சந்நியாசியாகாத ஊழியர். இப்படிப்பட்ட ஊழியர்கள்தான் நூறு நூறாக வேண்டும் என்று விவேகாநந்தர் விரும்பினார். ஸ்ரீ ரானடேயும் அதற்கே முயல்கிறார்.

''ஜனதா ஜனார்த்தனம்'' (மக்கள் பணியே மகாதேவன் பணி) என்பதே கொள்கையாக, விவேகாநந்த கேந்திரம் தொடங்கப்பட்டுள்ளது. முப்பது வயதுக்குள் உள்ளவர்கள், கல்லூரிப் படிப்புப் பெற்றவர்கள், குடும்ப பாரம் அற்றவர்கள், மணமாகாதவர்கள், நாட்டில் எந்த மூலைக்கும் செல்லத் தயாரானவர்கள், தம் வாழ்நாள் எல்லாம் பொதுப் பணிக்கே அர்ப்பணிக்கத் துணிந்தவர்கள் — இந்தத் தகுதி யெல்லாம் பெற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்க விரும்பினார் ரானடே. எழுநூறு பேரிடமிருந்து மனுக்கள் வந்தன. அவர்களில் நூறு பேர் தகுதியானவர் என அவர்கள் இருக்கும் மாநிலங்களுக்கே சென்று சந்தித்தார் ரானடே. இறுதியில் பதினாறு பேர் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். என்றும் பதினாறான கன்னி தவமிருக்கும் தலத்தில் பதினாறு பேருடன் தொடங்குவது பொருத்தம்தான்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களில் பல மாநிலத்தவர்களும் உள்ளனர். நான்கு தென் மாநிலத்தினர் தவிர, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், டெல்லி, ஒரிஸ்ஸாவிலிருந்தும் சேர்ந்துள்ளனர். பதினாறு பேரில் இருவர் பெண்கள்.

பயிற்சியாளருக்குப் பதினொன்று பொருள்கள் போதிக்கப்படுகின்றன. உடலையும்உள்ளத்தையும் அறிவையும் உயர்ந்த நிலையில் தொடர்ந்து






அமைத்துக் கொள்ள ஏற்ற பயிற்சிகள் அவை. யோகாசனப் பயிற்சியும் தியானப் பயிற்சியும் தவிர, நமது ஆன்மிக இலக்கியச் செல்வங்கள் புகட்டப்படுகின்றன. இந்திய சரித்திரம், உலக சமயத் தலைவர்களின் போதனைகள், பல்வேறு சமூக — பொருளாதார — வேதாந்த தத்துவங்கள், நாட்டின் இன்றையத் தேவைகள், பிற்பட்ட சமூகம் பற்றிய விவரங்கள், பல இந்திய மொழிகளின் இலக்கிய ஒற்றுமை, பழங்குடிமக்களின் இயல், சமுதாயத் திட்டங்கள், மன இயல்—என்று ஒரு தொண்டனுக்கு முழுமையாகத் தேவையான எல்லாப் பயிற்சிகளும் பல மாதங்கள் அளிக்கப்படுகின்றன. பேராசிரியர் ஸ்ரீ பி. மகாதேவன் தலைமையில் இதற்கென ஓர் ஆசிரியக்குழு உள்ளது. தவிர, சுவாமி ரங்கநாதாநந்தா, சுவாமி சித்தானந்தா, சுவாமி சித்பவானந்தா போன்ற பல்வேறு ஆன்மிக இயக்கத்தில் ஈடுபட்டவர்கள் இங்கே இந்தப் பதினறு பேருக்கும் அவ்வப்போது தனி உரை நிகழ்த்த வருகிறார்கள். மற்றும் தத்தம் துறையில் புகழ் பெற்ற டாக்டர் வர்னேகர், பேராசிரியர் தேவேந்திர ஸ்வரூப், பண்டித ராமாயண சாஸ்திரி, யோகாசார்ய ஜனார்த்தன் ஸ்வாமி போன்றோரும் அவ்வப்போது இங்கு வந்து தங்கிப் பயிற்சியாளருக்குப் போதித்து வருகின்றனர். ஆயுர்வேதம், ஹோமியோபதி பற்றியும் ஓரளவு தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சிக் காலம் முடிந்ததும் சுமார் மூன்று ஆண்டுகள் இத்தொண்டர்கள் நாட்டின் பல பகுதிகளுக்கு — முக்கியமாக மலை நாட்டு மக்களிடையே அனுப்பப் படுவார்கள். சிறிதும் பெரிதுமாக ஆயிரக் கணக்கில் அங்கே பணி காத்திருக்கிறது என்கிறார் சுவாமி ரங்கநாதாநந்தா. 'அரசுக்கு ஆயிரம் வேலை. விடுதலை பெற்று இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் சமூக, பொருளாதார ஆரோக்கியங்கள் முன்னேற மக்களிடையிருந்து தான் முயற்சி தொடங்க வேண்டும்' என்கிறார். இந்த முயற்சிகளைத் திரட்டுவதும் அவற்றைக் கல்வி, மருத்துவம், பலருக்கு வேலை, ஆன்மிக நம்பிக்கை என்று ஆக்க பூர்வமாக வளர்ப்பதுமே இந்தத் தொண்டர்களின் பணியாக இருக்கும்.

பிறகு அடுத்த தொண்டர் முகாம் தொடங்கும். இப்படி அடுத்தடுத்துப் பல ஆண்டுகளில் விவேகாநந்தர் எதிர்பார்த்த பல நூறு தொண்டர்கள் தோன்று

படங்கள்: விவேகானந்தபுரம்; பயிற்சியாளர்களுடன் சுவாமி ரங்கநாதானந்தா, ஏகநாத்ரானடே, பேராசிரியர் மகாதேவன்; விவேகானந்தர் பாறை நினைவுச் சின்னம்.





வார்கள். இந்த இயக்கம் ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்துக்குப் போட்டியுமன்று. அதற்குப் பதிலாகவும் அன்று. ஸ்ரீ ராம கிருஷ்ண மடத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுவதேயாகும்.

இந்தத் தொண்டர்கள் சந்நியாசிகளல்லர். முதல் மூன்று ஆண்டுகள்தான் மணமாகாமல் இருக்க வேண்டுமே தவிர, அதன் பின்னர் அதே சேவா மனப்பான்மையுள்ள ஒருவரைத் திருமணம் புரிந்து இருவருமாகப் பொதுத் தொண்டில் ஈடுபடலாம். இவர்களது வாழ்க்கைச் செலவையும், இவர்களது குழந்தைகளின் கல்வி மருத்துவம் போன்ற எல்லாச் செலவையும் விவேகாநந்த கேந்திரமே ஏற்று நடத்தும்.


இவற்றை நன்கு நிறைவேற்றுவதோடு, கன்னியாகுமரியில் யோகநிலையம் அமைப்பது, மருத்துவ மனை எழுப்புவது, பெரிய ஆராய்ச்சி நூலகம் ஏற்படுத்துவது, அச்சகம் உள்பட ஒரு பதிப்பகம் அமைப்பது, நாடெங்கும் ஐந்து இடங்களில் இந்தக் கேந்திரத்துக்குக் கிளைகள் ஏற்படுத்துவது என்று பெரும் திட்டங்கள் இருக்கின்றனவாம். இவற்றுக்கு மூன்று கோடி ரூபாய் பிடிக்குமாம்.

''பணமா? அது தேவையானதுதானே? வரும். பணிக்கு நல்ல ஆள் வேண்டும். எங்கே அவர்கள்?'' என்றார் விவேகாநந்தர். தேவையான தொண்டர்களை விவேகாநந்த கேந்திரம் கண்டுபிடித்துப் பயில்விக்கிறது. தேவையான நிதியைப் பொதுமக்கள் வழங்க வேண்டும். ''பெரும் பணக்காரர்கள் சிலரிடமிருந்து ஒரு கோடி திரட்டுவதை விட, விவேகிகளான சாதாரண மக்கள் மாதம் ஒரு ரூபாயாகத் தரும் லட்சங்களே பெருநிதி'' என்கிறார் செயலாளர் ஏகநாத ரானடே. அதுவே விவேகாநந்தருக்கு உவப்பானது.

லட்சியம் பெரிதுதான். செயலாளர் ரானடே சொல்கிறார்: ''இது மனித இனத்துக்கான பணி. பாரத மக்களிடையே முதலில் தொடங்குகிறது. மண்டபம் எழுப்பிய போது கட்சி வேறுபாடின்றித் தி. மு. க. சுதந்திரா, கம்யூனிஸ்ட் அரசுகள் எல்லாம் உதவின. இந்த இரண்டாவது சேவைப் பணியிலும் எல்லோரது ஒத்துழைப்பையும் நாடிப் பெறுவோம். கஷ்டங்கள் பல வரலாம். வந்தால் என்ன? கஷ்டம் வரும்போதுதானே நம் உள்ளே உள்ள முழுப் பிரயாசையும் வெளிப்படுகிறது? கடவுள் தன்மையும் வெளிப்படுகிறது!''

—தம்பி சீனிவாசன்

கல்கத்தா பழக்கம்!



கல்கத்தா பஸ்களில் ஸ்டாப் வந்ததும் கண்டக்டர் ''பெண்கள் இறங்க வேண்டுமா?'' என்று கேட்பார். பெண்கள் இருந்தால் பஸ் நிற்கும். ஆண்கள் இறங்க வேண்டுமானால் பஸ் நிற்காது. கொஞ்சம் மெதுவாகப் போகும். குதித்துவிட வேண்டும்!

ஹிம்மத் - பாபு

'அடல்ட்' ஆனான்!



ஒரு பையன் எப்பொழுது பெரியவனாகிறான்? பாதையில் கிடக்கிற தண்ணீர் நிரம்பிய பள்ளத்தில் குறுக்கே இறங்கி நடக்காமல் அதைச் சுற்றி நடக்க ஆரம்பிக்கிறபோது!

-'அவதா'

பிரச்னைகளைப் பற்றிய பிரச்னை!



''வா, ஒரு கப் காப்பி சாப்பிட்டுக் கொண்டே இந்தப் பிரச்னையைப் பற்றிப் பேசலாம்'' என்று முன்பெல்லாம் கூறுவார்கள். இப்பொழுது காப்பியே ஒரு பிரச்னையாகி விட்டது—விலையாகி ஏற்றத்தால்!

கத்தோலிக் டைம்ஸ்

- பாலி.



கிரிக்கட்டு! சரிக்கட்டு!

அடாது மழை பெய்து கொண்டிருந்தது. சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் ரஞ்சி கோப்பை கிரிக்கெட் பந்தயம் ஆட வந்த ஹைதராபாத் கோஷ்டியினரும் தமிழகக் கோஷ்டியினரும் சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்! அவர்கள் முதல் நாள் மழையில் இரண்டரை மணி ஆட்டத்துக்கு 'ரைடர் ஆன் தி ரெயின்' சினிமா சென்று பார்த்தனர். இரண்டாம் நாள் 'ஃப்ளோஸ்ட் ஸ்லேவ்' 'ஹவுஸ் ஃபுல்'. இடம் கிடைக்கவில்லை. சீட்டாட்டத்திலேயே மும்முரமாக ஈடுபட்டனர். ஜி. எஸ். எஸ்.

எல்லோர் கண்களிலும் நன்கு பதியட்டும் 'டெரீன்' புடவைகள் மனம் கவரட்டும்!



மக்கள் அனைவரின் கண்ணின் மணியாக விளங்க யார்தான் விரும்பமாட்டார்கள். ஆனால் விளங்குவது எப்படி? வாழ்க்கையில் வண்ண ஜாலத்தில் வண்ணத் துணிகள் அணிந்து; மனதுக் கிசைந்த துணிகள் அணிந்து! ஆம்: அத்தகைய துணிகள் உங்கள் மனதில் அழகு தோய்ந்த ஓர் அனுபவத்தைத் தூண்டிவிட வேண்டும். இந்த அழகு தோய்ந்த அனுபவத்தின் மறுபெயர்தான்: எஸ். குமார் நாடெங்குமுள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளுடன் நாங்கள் கொண்டுள்ள பரவலான நெருங்கிய தொடர்புகளின் மூலம் கிடைத்துள்ள தகவல்கள், உங்கள் விருப்பத்தை அறிந்து கொள்ள உதவியிருக்கின்றன. இதனால் உங்கள் விருப்பமே எங்கள் விருப்பம். நவீன காலத்துக்கேற்ற மேன்மையான நெசவுள்ள மனம் கவரும் கைஃபி, மதுரா மற்றும் லக்ஷ்மி விஷ்ணு போன்ற பிரபல நிறுவனங்களின்மூலம் உருவான அழகிய 'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளை வழங்குகின்றனர்: எஸ். குமார்.


எஸ்.குமார்

® ரெஜிஸ்டர்ட் ட்ரேட்மார்க்

'டெரீன்' சூட்டிங்குகள், ஷர்ட்டிங்குகள் மற்றும் புடவைகளுக்கு ஒரு நம்பகமான பெயர்.

எஸ். குமார், நிரஞ்சன், 99, மெரீன் ட்ரைவ், பம்பாய்-400 002

SISTA'S-SK-3026-TAM



திருமலை.

லோகநாயகனான பரம்பொருள் கலியுகவரதனாக நின்று அருள் பாலிக்கும் திருக்கோவில். ஏகாந்த சேவையை முடித்துக்கொண்டு, ஆலய நிர்வாகிகள் புறப்பட்டுப் போய்விட்டார்கள். மீண்டும் விடியற்காலை மூன்று மணிக்கு 'கௌஸல்யா சுப்ரஜா ராமா' என்று அவர்கள் திருப்பள்ளி எழுச்சி பாடிக்கொண்டு திரும்பும்வரை அங்கே நிம்மதி.

வைகுண்டநாதனான அந்தத் தாமரைக் கண்ணன் சயனித்திருக்க அன்னை, அவனுடைய திருப் பாதங்களை வருடிக் கொண்டிருந்தாள். நித்தமும் 'நின்றபடியே அருள் பாலிக்கும் பெருமானின் திருவடிகள் அயர்ந்திருக்கும் என எண்ணமோ?

ஆண்டவனின் பாதங்களில் இரு சொட்டுக் கண்ணீர் விழுந்தன. கண்களை மூடித் துயில்பவன் போலச் சயனித்திருந்த அந்த மாதவன் தன் விழித் தாமரைகளை மெதுவாகத் திறந்தான்.

''தேவி! லோகநாயகியாகிய உனக்குக் கூட வாட்டமா? ஆதி சக்தியின் நெஞ்சத்தில் கூட ஆதங்கமா?'' என்று அன்புடன் வினவினான் பரமன்.

தன் விழிக்கடைகளில் துளித்திருந்த நீரைத் தன் விரல் நுனியால் துடைத்தெறிந்தாள் திருமகள். ''என்னையும் மீறிய சிந்தனைகள் ஐயனே! தங்கள் துயிலுக்கும் ஊறாக.....''

முழங்கால் வரை நீண்டிருந்த தன் வலக் கரத்தை உயர்த்தித் தேவியின் முகத்தை நிமிர்த்தினான் ஸ்ரீநிவாசன். ''உன் எண்ண ஓட்டத்தைத் தயங்காமல் கூறு. அதைச் சீராக்குவது என் கடமை அல்லவா?..... நான் பரிபாலிக்க வேண்டியவர்களில் முதல் பிரஜை நீதானே?'' என்று கேட்டான் புன்னகையுடன்.

தன் துயரத்துக்குக் காரணமான அந்தச் சம்பவங்களைத் தேவி தன் தேனினுமினிய குரலில் ஐயனுக்கு உணர்த்தினாள்.

மதுரைக்கும் திருச்சிக்கும் ஊடே ஓடிய நெடுஞ்சாலை.

''சோ'' என்று பெரு மழை. இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பெய்கிறது. இருபது கெஜ தூரம் கூடத் தெளிவாகப் பார்க்க முடியாதபடி அப்படி ஒரு பேய் மழை.

ஒரு கார் திருச்சியை நோக்கிச் சீறிக் கொண்டு போகிறது. அதில் ஒரு குடும்பமே பிரயாணம் செய்தது. குடும்பத் தலைவன் பெயர் சுந்தரம் — மதுரையில் பெரும் புள்ளி. டிரைவருக்குப் பக்கத்தில் அவன் அமர்ந்



ஆதங்கம்

அன்னம்

இருந்தான். பின் இருக்கையில் அவன் தாயார், அவன் மனைவி, மற்றும் இரு குழந்தைகள் இருந்தனர்.

அவனுக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கிறது. எதிர்பாராத விதமாக லட்சத்துக்கும் மேலாக லாபம் அவன் வியாபாரத்தில் கிட்டி இருந்தது. அந்தப் பணத்தில் ஒரு பங்கு திருப்பதிக்குச் சேர வேண்டியது. தன் காணிக்கையைச் செலுத்த அவன் திருப்பதிக்குப் போய்க் கொண்டிருந்தான்.

திருப்பதித் தெய்வம் பொல்லாததாச்சே. நேர்த்திக் கடனைச் செலுத்தா விட்டால் வட்டியுடன் வசூலித்து விடுமாமே! திருப்பதியில் 'காட்டேஜ்' ரிசர்வ் செய்திருப்பார்களா? மணிக் கணக்காக அவனால் 'க்யூ' வரிசையில் நின்று தரிசிக்கப் போக முடியாது. குறுக்கு வழியில் உள்ளே போக வேண்டியதுதான். திரும்பி வரும்போது சித்தூரில் ஒருவரைப் பார்க்க வேண்டும். அவரால் அவனுக்கு ஒரு காரியம் ஆக வேண்டி யிருந்தது.

தன் பார்வையைச் சாலையிலிருந்து காரின் பின் பக்கம் திருப்பினான். அவன் மனைவியும் குடும்பமும் உறங்கி வழிந்து கொண்டிருந்தது. கடைசிப் பெண்ணுக்கு மொட்டை யிட வேண்டும். அவள் முடிதான் எத்தனை கருட்டையாக இருக்கிறது. திரும்பி அப்படி வளர ஒரு வருஷம்கூட ஆகலாம்.

கார் போகும் வேகம் சுந்தரத்துக்குப் போத வில்லை.

''நீ நகர்ந்து கொள். நான் ஓட்டுகிறேன்!'' என்றான் டிரைவரிடம்.

''வேண்டாம். ஸார்! மழை ரொம்பப் பலமாக இருக்கிறது!'' என்றான் டிரைவர்.

''எல்லாம் எனக்குத் தெரியும். நீ இப்படி வா!'' என்று அவனைக் கட்டாயப்படுத்தினான் சுந்தரம். டிரைவர் வண்டியை நிறுத்திக் கொட்டும் மழையில் இறங்கி மறு பக்கமாகச் சுற்றி ஓடி வந்து ஏறிக்கொள்வதற்குள் சுந்தரம் டிரைவர் ஆசனத்துக்கு நகர்ந்து விட்டான்.

கார் சீறிக்கொண்டு பாய்ந்தது. சாலையின் இரு பக்கமும் தண்ணீர்க் காடு. சாலையின் நடுவிலும் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

''நிறுத்துங்கள் ஸார்!... வண்டி போகுமா என்று பார்த்து வருகிறேன்!'' என்றான் டிரைவர்.

''எல்லாம் போகும்! எடுத்ததற்கெல்லாம் பயம் உனக்கு!'' எனப் பரிகசித்தபடி வண்டியைச் செலுத்தினான். தண்ணீர் வெள்ளத்துக்குள் போன கார் சட்டென்று நின்றது. சாலையைப் பறித்துக் கொண்டு ஓடிய காட்டாறு அது. இன்ஜினுக்குள் தண்ணீர் புகுந்து விட்டது.

''முன்புறமாக நின்று தள்ளு. பின்னால் போய்விடலாம்!'' என்று பதறினான் சுந்தரம்.

காரின் கதவைத் திறந்து கொண்டு மிக்கச் சிரமத்துடன் இறங்கினான் டிரைவர். அவன் எதிர்பார்த்ததை விட ஆழம் அதிகமாக இருந்ததால் அப்படியே கீழே விழுந்தான். அவனை எழுந்திருக்க விடாமல் தண்ணீரின் வேகம் அழுத்தியது. எப்படியோ சமாளித்து அவன் நின்றபோது காரே தெரியவில்லை. தண்ணீர் காரை முழுதும் மூழ்கடித்து விட்டது.

எப்படியோ நீந்திச் சாலையைத் தொட்ட டிரைவர் உதவிக்கு ஜனங்களுடன் திரும்பி வந்தபோது மழை நின்று வெள்ளம் வடிந்து விட்டிருந்தது. இரண்டு பர்லாங் தள்ளி வயற்காட்டில் குப்புறக் கவிழ்ந்த காரி லிருந்து அவர்களின் உடல்களைத்தான் அவனால் மீட்க முடிந்தது.

தான் குடும்பத்துடன் அன்று மாலை திருப்பதிக்குப் புறப்படத் திட்டமிட்டிருந்தான் வாக. ஜானகி அதற்கான எல்லா ஏற்பாடு களையும் செய்து முடித்து விட்டாள். காலையில் வந்திருந்த செய்தித் தாளைப் படித்துக் கொண்டிருந்த வாக அவளை அவசரம் அவசரமாகக் கூப்பிட்டான்.

''இந்த மூட்டைகளை யெல்லாம் அவிழ்த்து வை. நாம் இப்போது திருப்பதிக்குப் போகப் போவதில்லை.''

''இத்தனை ஏற்பாடுகள் செய்துவிட்டுத் திடீரென்று பிரார்த்தனையை நிறுத்தினால்...''

''என்ன பெரிய ஏற்பாடு?... ரயில்வே ஸ்டேஷன் போய் டிக்கெட்டை கான்ஸல் செய்தால் ஆயிற்று. இருபது ரூபாய் போகும். போகட்டும். திருப்பதி போகும் உத்தேசமே எனக்கு இல்லே'' என்றான் வாசு தீர்மானமாக. அவன் கண்களில் நீர் திரண்டு குரல் கம்மியது.

''நம் சுந்தரம் இல்லே, சுந்தரம்...மதுரையிலிருந்து நேற்று திருப்பதிக்குப் புறப்பட்டிருக்கிறான்...''

''ஆமாம்... போன வாரம் வந்தபோது போகப் போவதாகச் சொன்னார்...''

''இப்போது அவனும் இல்லே, அவன் குடும்பமும் இல்லே!''

''என்ன சொல்கிறீர்கள்?'' என்று பதறிப் போனாள் ஜானகி.

''எல்லாக் கண்ணராவியும் பேப்பரில் போட்டிருக்கிறான். வாழ வரம் கேட்க உன் ஆண்டவனைப் பார்க்கக் குடும்பத்துடன் காரில் புறப்பட்டுப் போயிருக்கிறான். வழியில் ஒரு காட்டாற்று வெள்ளத்தில் கார் மாட்டிக் கொண்டு அத்தனை பேரும் காலி...''

''அடப் பாவமே!'' என்று அங்கலாய்த்தாள் ஜானகி.

''புண்ணியம் தேடப் போனான் பார்... வழியிலே எமனையே ஏவிவிட்டான் உன் பெருமான்...'' என்று மிகுந்த எரிச்சலுடன் சொன்னான் வாசு.

''பாவம்.... அது அவர்கள் தலைவிதி'' என்றாள் ஜானகி சுருக்கமாக.

''தலைவிதி இல்லே. அவன் மூட நம்பிக்கை. அப்படி என்ன திருப்பதி பிரார்த்தனை? அவன் மட்டும் நேற்றுத் திருப்பதி போகாமலிருந்திருந்தால் இன்று உயிருடன் ஜாம் ஜாம் என்று இருப்பான்...என்ன உலகமடா இது?'' என்று அலுத்துக் கொண்டான் அவன்.

''அதற்கு என்ன செய்வது? எங்கேயோ ஒரு வீட்டில் நெருப்புப் பிடித்துக்கொண்டது என்றால் நம் வீட்டில் அடுப்பு எரியக் கூடாதா? நிச்சயித்தபடி பேசாமல் புறப்படுங்கள்!'' என்றாள் ஜானகி கண்டிப்பாக.

''என்னை வற்புறுத்தாதே ஜானகி!... நான் நிச்சயம் செய்துவிட்டேன். என்ன விபரீதம் நேர்ந்தாலும் 'தலைவிதி' என்று சமாதானப் படுத்திக் கொள்ள உனக்குத் தெரியும்... எனக்கே ஏதாவது நேர்ந்தால் கூட....''

ஜானகி வேகமாகவும் கோபமாகவும் இடைமறித்தாள்: ''ரொம்பவும் புத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைக்க வேண்டாம். இப்போது திருப்பதி 'ட்ரிப்' இல்லை என்றால் சரி. அவன் எப்போது கூப்பிடுகிறானோ, அப்போது போகலாம்'' என்றாள்.

''சரி, சரி!... உன் ஆண்டவன் கடுதாசு போட்டுக் கூப்பிடட்டும், தந்தி வேண்டுமானாலும் அடிக்கட்டும்!'' என்று கேலியாகக் கூறினான் வாசு.

பாஸ்கரன் தன் தலையைப் பிய்த்துக் கொண்டான்.

மறுநாள் காலை அவன் சென்னையில் இருக்க வேண்டும். பெரிய இடத்துச் சிபாரிசு பேரில் ஒரு 'கண் துடைப்பு' இன்டர்வியூவுக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். அவனை வேலைக்கு எடுப்பதாகத் தீர்மானம் ஆகிவிட்டது. ஆனால் அவன் கண்டிப்பாகக் காலை பத்து மணிக்குச் சென்னையில் இருந்தாக வேண்டும். பேட்டியின் தேதி குறித்த தந்தி அவனுக்குக் காலையில் தான் கிடைத்தது.

பஸ்ஸில் இடம் இல்லை; ரயிலில் இடம் இல்லை. தொத்திக் கொண்டு தூங்காமல் போனாலும் காலையில் பேட்டிக்கு மலர்ந்த முகத்துடன் போக முடியாது.

பாஸ்கரன் பிறந்தது முதல் அவன் நினைவும் எண்ணமும் அலாதி. தெய்வங்களின் மேல்

நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்



C. வாசுதேவ ரெட்டியார் B. Sc.
தோற்றம்: 10-10-1910 மறைவு: 28-12-72

முதலாண்டு நினைவு அஞ்சலி

சென்ற ஆண்டு இதே நாளில் எங்களை விட்டு மறைந்த எங்கள் அன்புத் தெய்வத்திற்கு எங்கள் முதலாண்டு அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்.

என்றும் அவர் நினைவால் வாடும்
அன்பு மனைவி
C. ஆண்டாள்
மற்றும் உறவினர்கள்
ரெங்கராஜபுரம், சென்னை-24

அவனுக்கு நம்பிக்கை கிடையாது. கோவிலில் நடக்கும் திருவிழாக்கள் அவனுக்குக் குழந்தைகள் விளையாட்டாகத்தெரியும். நிர்ப்பந்தத்தின் காரணமாக அவன் தெய்வ சந்நிதியில் நிற்க நேர்ந்தாலும் கூட அந்த விக்கிரகத்தில் ஆண்டவனை அவனால் பார்க்க முடிவதில்லை. அது ஒரு பெரிய பொம்மையாகத் தெரிந்தது. ஆண்டவனுக்கு அபிஷேகம் செய்யும்போது அவன் சிரிப்பான். ''தெரிந்தே பாலையும் சந்தனத்தையும் ஒரு கல்லின் மேல் கொட்டுகிறார்களே! தெரியாமல் ஒரு துளி பால் கீழே சிந்திவிட்டால் என்ன தவிப்புத் தவிக்கிறார்கள்!''

திருநீறு இட்டுக் கொள்வதும் விழுந்து கும்பிடுவதும் அவனுக்குச் சிறுபிள்ளைத்தனமாகத் தெரிகிறது. இயற்கையாகவே நல்ல சூடிகை. படிப்பில் முதல். விளையாட்டிலும் அப்படியே. பட்டம் பெற்று உத்தியோக வேட்டையில் இறங்கி இரண்டு வருஷங்களுக்குப் பி கு முதல் முறையாக ஒரு வாய்ப்புக் கிட்டி இருக்கிறது. ஆனால் இதுவும் நழுவிப் போய் விடுமோ!

அவன் தந்தை சர்விஸிலிருந்து ரிடையராகி விட்டார். வருமானம் பாதிக்குக் கீழ் குறைந்த சமயம் அவன் தங்கைகள் இருவர் தாவணி போடும் அளவுக்கு உயர்ந்துவிட்டனர். இந்தச் சிரமத்திலும் அவன் ஆண்டவனை வேண்டியதில்லை. ஆண்டவன் என்று ஒன்று இருப்பதாக அவன் நம்பத் தயாராக இல்லை.

ரயில்வே நிலையத்துக்குப் புறப்பட்டபோது அவன் பாட்டி சொன்னாள். பழங்காலத்துக் கிழவி அவள். ''வேலை கிடைத்ததும் திருப்பதிக்கு வரதா வேண்டிக்கப்பா! எல்லாம் நல்லபடியாக முடியும்!'' என்றாள்.

பாஸ்கரன் அலட்சியமாகச் சிரித்தான். ரயிலுக்கு இடம் இல்லை என்று கைவிரித்து விட்டார்கள். பாட்டி சொன்னது போல் திருப்பதிக்கு நேர்ந்து கொண்டால் அந்த ஆண்டவன் இவனுக்காகத் தனி ரயில் விடப் போகிறானா? இல்லை, போகும் வண்டியில் ஒரு காரேஜ் சேர்க்கப் போகிறானா?

ஏமாற்றத்துடன், துவண்டு போன உள்ளத்துடன் ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான். பிள்ளையார் கோயிலில் கூட்டம். தேங்காய் உடைத்தார்கள். 'தேங்காய் இரண்டு ரூபாய் விற்றாலும் உடைப்பார்கள். ஓர் ஏழைக்கு இருபது காசுகூடப் போடமாட்டார்கள்' என எண்ணினான் பாஸ்கரன்.

சிவப்பு உடை அணிந்த போர்ட்டர் அவனை அழைத்தான்.

''ஸார்! ஸார்! உங்களைப் புக்கிங் கிளார்க் கூப்பிடுகிறார்......'' என்று சேதி சொன்னான்.

பாஸ்கரன் திரும்பவும் ஓடினான். ரயில் ரிசர்வேஷன் குமாஸ்தா சொன்னார்: ''உங்களுக்கு அதிர்ஷ்டம் ஸார்! அந்த ஆண்டவன் புண்ணியம்.... திருப்பதிக்குப் போக ஒரு குடும்பம் ரிசர்வேஷன் செய்திருந்தது..... 'கான்ஸல்' செய்துவிட்டார்கள்....''


பாஸ்கரன் டிக்கெட் வாங்கிக் கொண்டான். அவன் உடல் சிலிர்த்தது. நரம்புகளில் மின்சாரம் போல் ஓர் உணர்ச்சி பாய்ந்தது. மனித யத்தனத்துக்கு அப்பாற்பட்ட சக்தி ஒன்று இந்த உதவியைச் செய்திருக்கிறது. அது திருப்பதியில் இருப்பதாக நினைத்தால் என்ன தப்பு? வேலை ஏற்றுக் கொண்ட மறு நாள் திருப்பதி வருவதாக அவன் தீர்மானித்தான். வெளியில் மீண்டும் வந்தவன் தன்னை அறியாமல் பிள்ளையார் கோயில் அருகில் நின்றான். தன் கன்னங்களில் போட்டுக் கொண்டான்.

* * *

''தங்களைச் சந்திக்க — தங்களுக்குக் காணிக்கை செலுத்த — நன்றியுணர்வு பொங்க — ஒரு குடும்பமே வந்தது. அந்தக் குடும்பத்தை நடு வழியில் விபத்துக்குள்ளாக்கி அப்படியே எமனுலகு அனுப்பினீர்கள். வாழ்நாளெல்லாம் உங்களை வாயார — மனமாரத் துதித்துக் கொண்டிருந்த ஒரு குடும்பத் தலைவனின் உள்ளத்தில் சஞ்சலத்தை ஏற்படுத்தித் தங்கள் தரிசனம் அவனுக்குக் கிடைக்காமல் செய்துவிட்டீர்கள்..... கடைசியில் — பிறந்தது முதல் தங்களை நம்பாமல் — தங்களைப் பரிகசித்த — ஒரு நாத்திகனுக்கு இங்கே வர வழி காட்டியிருக்கிறீர்கள். எல்லோரும் நம் குழந்தைகள் என்றால் ஏன் இந்தப் பாரபட்சம்!.... என்னால் தாங்க முடியவில்லை, ஐயனே!'' என்று மனம் உருகிச் சொன்னாள் அலர்மேல் அமர்ந்த நாச்சியார்.

கருணா தேவியின் பாலன் நெஞ்சை அள்ளும் புன்னகை புரிந்தார். ''உண்மை தான் தேவி. எல்லோரும் நம் குழந்தைகள் தான். முதலில் குடும்பம் இங்கு வர இருந்தது சரிதான். என்னை அவர்கள் தெய்வமாக நினைத்து வரவில்லை. கடன் வாங்கிய இடத்தில் திருப்பிக் கொடுத்துப் பத்திரத்தைக் கிழித்துப் போடும் கடனாளியாகத்தான் வர நினைத்தார்கள். கணவனுக்குச் சித்தூரில் ஒரு வியாபாரத் தொடர்பு. மனைவிக்குத் திரும்பும் போது காஞ்சீபுரத்தில் பட்டுச் சேலை. தாயாருக்குத் தன் மகனின் காரில் போகும் பெருமை..... அவர்கள் விதி முடிந்துவிட்டது. நான் தடுக்க முடியவில்லை. இரண்டாவது குழந்தைக்குக் கோபம் தாற்காலிகமானது தான். இரண்டு நாட்கள் சென்ற பிறகு தான் நினைத்தது தப்பு என்று அவனுக்குத் தோன்றும். திரும்பி விடுவான். அம்மாவிடம் கோபித்துக் கொண்ட குழந்தை அடுத்த நிமிஷம் தன்னை மறந்து தாயிடம் ஓடிவிடுவது போல் வந்து நிற்பான். மூன்றாவது பிள்ளை முரட்டுப் பிள்ளை. நம்மிடம் அதற்குப் பாசம் கிடையாது. பரிவு கிடையாது. நாமும் அதனிடம் பாராமுகமாக இருந்தால் என்றுமே அது திருந்த வழியில்லை. ஆதரவு இல்லாமல் தவிக்கும் சமயத்தில் முடவனுக்குக் கோல் கொடுப்பது போல், அவன் செய்வதறியாது நின்ற சமயம் நாம் அரவணைத்தோம்.... சரி தானே?'' என்று கேட்டார்.

அன்னை பிரமித்தாள். அவள் திருவதனத்தில் மந்தஹாஸம் மிளிர்ந்தது. உலகநாயகி தானிருக்கத் தானே தாயும் தந்தையுமாக நின்ற அந்தப் பிரபுவின் மாபெரும் கருணையில் லயித்துப் போனாள்!


அன்றும் இன்றும் சிலருக்கு அதே இளந்தளிர் மேனி!
Pears
பியர்ஸ் சருமக் களை...
கன்னிப் பருவக் களை
பியர்ஸ்—
அசல்
கிளிசரின் சோப்



ஐந்தாம் அத்தியாயம்

“ஏவனேயும் நான் வளர்க்கவில்லே. யாரைப் பற்றியும் எனக்குத் தெரியாது'' என்ருள் காத்யாயினி.

பரமேசுவரன் சிரித்தார். '' இதை என்னே நம்பச் சொல்கிருயா? முதன் முதலில் பார்க்கிலிருந்து தப்பித்துக் கொண்டு போய்விட்டாய். அப்புறம் ஒரு முறை வீட்டுக்குள் வந்து மதுராம்பிகை இல்லாத போது — அப்பொழுது அவளுக்கு ஆறு வயது இருக்குமா—எப்படியும் குழந்தையைக் கொண்டு போய் விட வேண்டுமென்று நினைத்தேன். முடியவில்லே. வேட்டை நாய் மாதிரி விரட்டி அனுப்பினே. விரட்டி மட்டுமா அனுப்பினே..... இதோ பாரு. வடுகூடப் போகலே. சரியான அடி...'' என்று தம் நடுத்தலேயைக் காட்டினர் பரமேசுவரன்.

காத்யாயினி சினம் கொதிக்க நின்ருள்.

'' உங்களுடைய அக்கிரமங்களே — ஒரே நொடியில் எங்களால் அடக்கியிருக்க முடியும். ஒரு பொதுவான தார்மிக எண்ணத்தின் அடிப்படையில் தான் நாங்கள் அப்படிச் செய்யவில்லே. ஏன் தெரியுமா ? உங்க தாலியைக் கட்டிக் கொண்டு உங்கள் மனேவியாகச் சில காலம் வாழ்ந்த அந்தப் பந்தத்தினுல் மதுரம் சும்மா இருந்தாள். அதே காரணத்துக்காகத்தான் நானும்.... என்னதான் மதுரம் எனக்குப் பின்னுல் உங்க மனேவியாகச் சில காலம் இருந்து நீங்களாக அவளேக் கோர்ட்டு வரையில் போகத் தூண்டிப் பிறகு பிரிச்சாலும், அவ மேலே எனக்கு என்னிக்குமே கோபம் கிடையாது. அவள் நல்லவள். நீங்கள் அவளே நன்ருக ஏமாற்றி யிருக்கிறீர்கள். உங்களுக்கு விவாகமே ஆகவில்லே என்று.''

''பழைய கதை. அதைப் பேச நான் வரவில்லே.''

''நீங்கள் போகலாம்.''

'' மதுராம்பிகை பக்கபலமாக இருக்கிருள் என்ற நெஞ்சு ஸ்தரியம் உனக்கு இல்லேயா ?''

''இருக்காதா, பின்னே ! அன்று... என்னே ஈவிரக்கமில்லாமல் வீட்டை விட்டு விரட்டினீர்கள் ! உங்களே யாராலும் கேட்க முடிந்ததா ? அப்ப உங்களுக்கு மதுராம்பிகை மேலே உண்டாகியிருக்கிற புது மோகம். கெஞ்சினேன். மன்ருடினேன். என்னே உங்கள் வீட்டுப் படியேற விடவில்லேயே! நான் அப்பொழுதும் ஏழை. இப்பொழுதும் ஏழை. ஏழை அண்ணன்கிட்டேதான் போனேன். அவனுல் என்ன செய்ய முடியும்? அவன் சாதாரணக் குமாஸ்தா. உங்களுடைய அசுரச் செயலே எதிர்த்து ஒன்றுமே செய்ய முடியாமல் தவித்தான். சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழுவதே நல்லதென்று எண்ணி நானே நேராகக் கும்பகோணத்திலிருந்து

சென்னை வந்து மதுராவின் காலில் விழுந்தேன். அன்று அவள் புகலிடம் தரவில்லையென்றால் நான் எவ்வளவோ சிரமப்பட்டிருப்பேன்.

''பாவம், அவளுக்கு நான் ஒருத்தி இருக்கிற விஷயமே தெரியாது என்பது அப்பொழுதுதான் தெரியும். எவ்வளவு வேதனைப்பட்டாள்? எவ்வளவு நொந்து போனாள். ஆனால், இதற்குள் எல்லாம் முடிந்து போய் விட்டதே.

'' அவள் உங்கள் குழந்தைக்குத் தாயாகப் போகிற காலமாக அது இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் சுய சொரூபம் தெரிய வந்த போது என்னைப் போலவே அவளும் வேதனைப்படத் தொடங்கினாள். அந்த நல்ல மனுஷி யாவது வாழ்க்கையில் நிம்மதியைப் பெற வைத்தீர்களா? அதுவும்தான் இல்லையே!''

''காத்யாயினி...! உன்னிடம் இவைகளை மீண்டும் கேட்டு நான் நினைவு படுத்திக் கொள்ள வரவில்லை. எனக்கு வேண்டியது, அந்தப் பெண். அவள் எங்கே? அவளை நீதானே வளர்த்து ஆளாக்கினாய்..... இரண்டு முறை என் குறியிலிருந்து நீயும் தப்பி அந்தப்பெண்ணையும் தப்ப வைத்து விட்டாய். அநேகமாக இதுதான் கடைசிமுறையாகஇருக்கும்.''

காத்யாயினி சில கணங்கள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தாள்.

''பெங்களூரில் சாந்தா என்று ஒரு பெண் மதுராவின் பங்களாவில் இருக்கிறாள். ஒரு வேளை அவளாகக்கூட இருக்கலாம் என நான் சந்தேகித்தேன். பாஸ்கரனை விட்டு விஷயத்தை நாசூக்காக ஆராயச் சொன்னேன். அவள் இல்லை என்கிற அளவுக்குத் தெரிகிறது. ஒரு வேளை என் கவனத்தைத் திசை திருப்ப நீயும் மதுராவும் செய்யும் சூழ்ச்சியாகக்கூட இருக்கலாம். இதற்காகவே சாந்தா என்கிற பெண், புதிதாக உங்களால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கலாம் என்பது என்சந்தேகம்.''

காத்யாயினியின் குழப்பம் நீங்கி விட்டது. அவள் கொஞ்சம் நிம்மதியடைந்தாள்.


பரமேசுவரன் சுவாதீனத்துடன், அந்தச் சிறிய வீட்டில் தமக்கு வேண்டிய விஷயங்கள் ஏதேனும் கிடைக்கிறதா என்று ஆராயத் தொடங்கினார்.

''இங்கே நீங்கள் எதையும் தேட வேண்டாம். இதை நான் அனுமதிக்கவும் மாட்டேன்.''

'' நீ என்ன என்னை அனுமதிப்பது? நானே தேடுவேன். தைரியம் இருந்தால் தடுத்துப் பார். யாரையேனும் கூப்பிட்டுக் கொண்டு வா, உனக்கு உதவியாக.

ஏன், அடுத்த தெருவில்தானே அட்வொகேட் சந்தானம் இருக்கிறார். போய்ச் சொல்லி அழைத்துக் கொண்டு வா. அவருக்கு அவர் உயிர் மேல் ஆசையில்லை என்றால் இங்கே வரட்டும்.''

பூட்டுப் போட்டுப் பூட்டியிருந்த பெட்டியொன்றை மூர்க்கத்தனமாக அவர் நெம்பித் திறந்தார்.



''உனக்கு அந்தப் பெண்ணை வளர்க்கத் தொடர்ச்சியாக அவள் பணம் அனுப்புகிறாள். பெண்ணுக்காக நீ செய்யும் செலவுகளெல்லாம் அவளுடையது. இவையெல்லாம் எனக்குத் தெரியும்.''

''நீங்கள் அந்தப் பெண்ணைத் தேடும் நோக்கம் எனக்குத் தெரியும். அது நிறைவேறப் போவதில்லை. என் உயிர் போனாலும், அதை மட்டும் நான் சொல்ல மாட்டேன். உங்களுடைய மிரட்டலுக்கெல்லாம் நான் பயப்படப் போவதுமில்லை. என்னை நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இரண்டு முறை அப்பெண்ணை உங்களிடமிருந்து காப்பாற்றினேன். அதன் பின்தான் மதுராம்பிகைக்கு என் மேல் நம்பிக்கையே பிறந்தது.

''வாழ்க்கையில் என் உரிமையை அபகரித்துக் கொண்டவள் அவள். எனவே, நியாயப்படி நான் அவளுக்கு எதிரியாக வேண்டியவள். ஆனால், அவளுக்கு நல்ல குணம். அவளுக்கு உண்மையிலேயே உங்களிடம் பயம் உண்டு. ஆனால் நான் அப்படியல்ல. உங்களுக்குப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. இதனால்தான் மதுராம்பிகைக்குத் தைரியம் சொல்லி உங்களுடைய பயமுறுத்தல்களை ஒரு சவாலாக ஏற்று, இந்தப்

பெரிய பொறுப்பைத் தைரியத்துடன் ஏற்றேன். அநேகமாக உங்களை எதிர்த்து நான் மேற்கொண்ட சவாலை வெற்றியுடன் முடித்துக் கொண்டு விட்டேன். என் கடமை முடிந்து விட்டது. இனி நான் சாவதைப் பற்றிக் கவலையே படவில்லை. என்னைத் தேடி வந்த உங்கள் நோக்கத்தில் நீங்கள் நிச்சயம் தோல்வி கண்டுதான் திரும்பப் போகிறீர்கள். உங்களுக்கு உண்டாகும் தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் மன வலிமைதான் என்றுமே உங்களிடம் இருந்ததில்லையே!

''கல்யாணம் ஆன நான்கு ஆண்டுகள் நாம் குடித்தனம் நடத்திக் குப்பை கொட்டினோம். அந்த நான்கு ஆண்டுகளில் நான் அளவற்ற 'சுக'ங்களை அநுபவித்து விட்டேன். போதும் போதும்! மதுராம்பிகை பின்னால் சொன்னாள், 'அவருடன் எந்தப் பெண்ணும் வாழ்க்கை நடத்த முடியாதம்மா. அவர் உண்மையில் மனிதரே அல்ல. கோட்டும் சூட்டும் அணிந்த மிருகம்' என்று. அவள் உங்களை ரொம்ப நன்றாக எடை போட்டிருக்கிறாள். உங்களைச் சட்டத்தின் பிடிக்குள் சிக்க வைக்க எங்களுக்கு எல்லா வழிகளிலும் இடமிருந்தது. அவளுக்கும், எனக்கும் பல சந்தர்ப்பங்கள் தனித்தனியே வந்தன. அவளுடைய சகோதரன் ஒரு போலீஸ் அதிகாரி. அவளை எவ்வளவோ வற்புறுத்தினான். 'ஒரு சாதாரண ரிப்போர்ட் கொடு. போதும். அவனை என்ன செய்கிறேன் பார்' என்று கடைசி வரையில் கேட்டுப்பார்த்தான். நான்கூடச் சில சமயம் தயாராயிருந்தேன். அவள் அதற்கு ஒரு சந்தர்ப்பத்திலும் சம்மதம் தரவில்லை.''

இரண்டு மூன்று பெட்டிகளைக் குடைந்து பார்த்துவிட்டு எல்லாவற்றை



யும் அலங்கோலமாக உதறி விட்டுத் தோல்வியுடன் திரும்பினார் பரமேசுவரன்.

அவள் சிரிப்பும், சீற்றமும், ஏமாற்றமும் ஏக்கமும் தொனிக்கப் பேசிக் கொண்டிருந்தாள். அவள் பேசிய எதையும் அவர் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

''ரொம்பவும் முன்ஜாக்கிரதையுடன் தான் இருக்கிறாய்.''

''இந்த ஜாக்கிரதை இல்லையென்றால், எடுத்துக் கொண்ட காரியத்தை நான் வெற்றிகரமாக முடித்திருக்க முடியாதே !''

''அதற்குள் அவசரப்பட்டு வெற்றியைப் பற்றிப் பேசுகிறாயே?'' என்று கூறிக் கொண்டே கூடத்தில் மாட்டியிருந்த ஒரு போட்டோவின் பின்புறம் நீட்டிக் கொண்டிருந்த கடிதம் அவர் கண்களில் பட்டுவிடவே, புன்னகையுடன் அதை எடுக்கப் போனார்.

இதைக் காத்யாயினி எதிர்பார்க்கவில்லை. இரண்டு நாட்கள் முன்புதான் அது மதுராம்பிகையிடமிருந்து வந்தது. அவளிடமிருந்த கடைசிக் கடிதமும், ஒரே கடிதமும் அதுதான். மற்றவற்றையெல்லாம் அவள் எரித்துவிட்டிருந்தாள்.

அந்தக் கடிதம் பரமேசுவரன் கண்களில் பட்டுவிட்டது என்பதைக் கண்டவுடன் அவள் உடம்பு பதறியது.

"உன்னாலே அவர்களுக்குத் தொல்லைகள் தர முடியுமே தவிர வேறு எதையும் சாதிக்க முடியாது.''

கண்ணாடி முன்னால் நின்று தலைவாரிக் கொண்டிருந்த பாஸ்கரன் கண்ணாடியில் தெரியும் அப்பாவின் பிம்பத்தைப் பார்த்துக் கொண்டே பேசினான்.

'' உனக்குத் தெரியுமா, அப்பா அம்மாவின் தம்பியை? இன்ஸ்பெக்டர் ஆஃப் போலீஸ்.... அவர்கூட இங்கே மாற்றலாகி வரப் போகிறாராம்.''

''வந்தால் எனக்கென்னடா ?''

'' உனக்கென்ன..... நான் ஒரு இன்ஃபர்மேஷனுக்குச் சொன்னேன்.''

அவன் பின்னால் நெருங்கி வந்து நின்றவர், அவன் சட்டையின் கழுத்துப் பட்டையைப் பிடித்து இழுத்தார். தலைமயிரை முன்புறமாக வழித்து விட்டுக் கொண்டவன் பரமேசுவரனை நேருக்கு நேர் பார்த்தான். சினத்துடன் நின்ற பரமேசுவரன், ''நீ சுத்த உதவாக்கரைக் கழுதை. உன்னை நம்பி எதையுமே என்னால் செய்ய முடியவில்லை. நான்கு நாட்களாகச் சொல்லுகிறேன், அவளை எலிஃபென்ட் ராக் பக்கம் அழைத்துக் கொண்டு வா என்று. உன்னால் முடிகிறதா?'' அவனது கன்னத்தில் வேகமாக அறைந்தார். பின்புறம் தெட்டித் தள்ளினார். பின்புற மண்டையில் பலத்த அடியுடன் அவன் தடுமாறிச் சாய்ந்து விழுந்தான். அப்பொழுதும் அவன் வாய்விட்டு ஏதும் முணுமுணுக்கவில்லை. பற்களைக் கெட்டியாகக் கடித்துக் கொண்டு நகைத்தவன், கீழே விழுந்த நிலையில் பாண்ட் பாக்கெட்டில் கையைவிட்டு ஒரு தந்தியை எடுத்து அவரிடம் காட்டினான். ''படித்துப் பார்..... யார் உதவாக்கரை என்று தெரியும்.''

''ஒருவித வேகத்துடன் அவன் கையிலிருந்த தந்தியை வாங்கிப் படித்தார். 'டு நாட் செண்ட் ஹர் அவுட்' (''அவளை வெளியே அனுப்பாதே '') ''அவளை இனிமேல் உன்னால் 'டச்' பண்ண முடியாது. இந்தத் தந்தி எங்கேயிருந்து யார் கொடுத்தது என்று தெரியவில்லை. நான்கைந்து நாட்களுக்கு முன்னால் ஒரு நாள் நடு இரவில் இந்தத் தந்தி வந்தது. அம்மாதான் இதை வாங்கினது. காலையில் சாந்தா ஆபீஸ் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். 'நான் சொல்லும் வரையில் நீ ஆபீஸ் போக வேண்டாம். உனக்கு காஷுவல் லீவோ, மெடிக்கல் லீவோ ஏதோ ஒன்றுக்கு நான் ஏற்பாடு செய்கிறேன்' என்றாள்.

''சாந்தா காரணம் தெரியாமல் குழம்பிப் போய்க் கேட்டாள். 'ஏன், எதற்காக' என்று.

''கேள்வி எல்லாம் இப்பொழுது கேட்க வேண்டாம். நீ என் அருகிலேயே இருக்க வேண்டும் போல் தோன்றுகிறது. உன் வேலைக்குக் குந்தகம் வராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். சரிதானே!''

''சாந்தா பதில் ஏதும் கூறவில்லை. ரொம்பச் சுலபமாக அதற்குச் சம்மதித்து விட்டாள்.''

பாஸ்கரனைக் காலால் உதைக்க வந்தபோது அவன் நகர்ந்து கொண்டான். அவர் முகம் குரூரமாக இருந்ததைப் பார்த்தான். எந்த நேரத்திலும் தப்பித்துக் கொண்டு வெளியே ஓடிவிடச் சௌகரியமாக நகர்ந்து கொண்டான்.

"அவள் இன்னிக்குப் பல லட்சம் ரூபாய்க்கு அதிபதி. அன்று இருந்த ஆத்திரத்தில் அவளிடமிருந்து உன்னைப் பிரிச்சேன். அப்படியும் அவள் நிமிர்ந்து நின்றுவிட்டாள். அந்த வழக்கில் நான் ஜயித்துவிட்டேன். அவள் தோற்றுவிட்டாள் என்பதெல்லாம் உண்மை. ஆனால் வாழ்க்கையிலே இது அப்படியே தலைகீழாக மாறிப் போச்சு. உன்னைச் சட்டரீதியா அன்னிக்குப் பிரிச்சேன். இன்


நாளும் நவீனமாய் விளங்கும்
உத்தரவாதமான 22 காரட்
தங்க, வைர நகைகள்.
வெள்ளிச் சாமான்கள்.
விஜயம் செய்யுங்கள் :
ஜீதன் பிரதர்ஸ்
(பிள்ளையார் கோவில் கடை)
204, நேதாஜி போஸ் ரோடு, சென்னை-1
போன் : 36167
chari


புகழ்வாய்ந்த நோவா பிரிலியண்டைன்
உபயோகித்து கூட்டத்தில்
தனித்தன்மையோடு விளங்குவீர்!
நாள் முழுதும் நேர்த்தியான தோற்றமுடன்
உங்கள் ஆண்மை மிளிரும் அழகைக் காத்திடுக
இதயங் கவர் இனிய மணம் மற்றும் அதிகப்
போஷாக்கும் நிறைந்த நோவா பிரிலியண்டைன்
உடலின் மேலும் வெகுவாகப் பயன்படுத்தப்படுகிறது.
அது சொற சொறப்புக்கு மென்மையூட்டி சருமத்திற்கு
ஜீவனூட்டி உங்களை நறுமணம் கமழ வைக்கிறது.
NOVA
தயாரிப்பவர்கள்:
தி நோவா கம்பெனி
எல். பி. எஸ். மார்க்
பாண்டுப்,
பம்பாய் - 400078


வலிமிகுந்த தலைவலிக்கு
மிக விரைந்த விடுதலை!
ஒரே ஒரு
அவேதன்®
ப்ளஸ்
TTT®
SQUIBB®
SARABHAI CHEMICALS PVT. LTD.
சக்தி வாய்ந்தது,
விரைந்து
செயல்படுவது
அவேதன் ப்ளஸ்
Shilpi HPMA 36a/73 Tam

னிக்குப் பாசத்தினால் உன்னை என்னிட மிருந்து பிரிக்க அவள் முயற்சி செய்கிறாள். நான் உன்னை அவளுக்கு எதிரியாக ஒரு கருவி மாதிரிப் பயன்படுத்த எண்ணி னேன். இன்னிக்கு நீ என் மீது அவள் ஏவி விடற கருவியாக உருமாறி நிக்கறே. இதிலேயும் அவள்தான் வெற்றி காண ஆசைப்படறா. அதுக்கு நான் இடந்தர மாட்டேன். அவள் எண்ணம் வெற்றி அடைவதை நான் பார்த்துக் கொண் டிருக்க முடியாது. அந்தச் சொத்துக் களுக்கு இன்னொரு வாரிசை அவள் உண்டாக்க ஏற்பாடுகள் செய்யறா. இது ரொம்ப நாட்களா திட்டமிட்டு நடக்கிற செயல். அதுக்கு யார் உடந்தையாக வும், உறுதுணையாகவும் இருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும்.''

''அப்பா! விஷயங்கள் ரொம்பத் தூரத்துக்குப் பரவிப் போயிருக்கும் போல இருக்கு. இனிமே நீ எது செய் தாலும் நிச்சயமாக மாட்டிக் கொள் வாய். வீணான இந்த எண்ணங்களை யெல்லாம் விட்டுவிட்டு, உனக்கு என்ன வேணும், அம்மாகிட்டேயிருந்து என்ன எதிர்பார்க்கிறாய் என்பதைப் பளிச்சென்று சொல்லிவிடு.... காலம் காலமாக அள்ளிக் கொடுத்த அம்மா உனக்குத் தேவையானதைத் தாராள மாகத் தருவாள்.....''

''அவளிடம் போய் நான் கேட்பதா? அவளிடம் எனக்குத் தேவையானதைக் கேட்டு வாங்கிக் கொள்ள வேண்டிய காலமெல்லாம் தாண்டிப் போயாகி விட்டது. அதற்கு அவசியமுமில்லை.''

''உன்னுடைய பொறாமை நெஞ்சத் தைத் திருத்தவே முடியாது. அம்மா வின் மேல் வைத்திருக்கிற சினத் துக்குக் காரணம் நான் சொல்லட் டுமா? வெறும் பொறாமையின் அடிப் படையில் வந்ததுதான் அது. உன் தயவின்றி அம்மா உன்னைப் பகைத்துக் கொண்டு நல்லபடியாக வாழ்கிறார்களே, அதை உன்னால் தாங்க முடியவில்லை. உன் பொறாமையும், ஆத்திரமும் கொழுந்துவிட்டு எரிவதற்கு இது தான் காரணம்.''


''பாஸ்கர், வார்த்தைகளை அளந்து பேச வேண்டும். வீணாக என் ஆத்திரத் தைக் கிளப்பாதே.''

''இவ்வளவு ஆபத்தான சூழ்நிலையி லும் நீ உன் வஞ்சகமான திட்டங்களி லிருந்து மாறமாட்டேன் என்கிறாயே. உன் தலையெழுத்தை நீயே மாற்றி எழுதிக் கொண்டால் என்ன செய்வது! அப்பா! உனக்குத் தெரியுமா? காத்யாயினியின் நிலைமை ரொம்பக் கவலைக்கிடமாக இருக்கிறதாம். ஆஸ்பத் திரியில் மரணத்துடன் போராடிக்

இதுவும் போதாதா?

இந்தியன் ஏர்லைன்ஸில் வேலை பார்க்கும் ஓர் ஏர்ஹோஸ்டஸ் விமானப் படையில் இருக்கும் ஓர் ஏர் வைஸ் மார்ஷலைவிட அதிகமாகச் சம்பாதிக்கிறாள்.

இல்லஸ்டிரேட்டட் வீக்லி



கல்கத்தா விமான நிலையத்தில் உள்ள ஒரு போர்ட்டரை ''உங்களுக்கு 'டிப்'பாகக் கிடைக்கும் தொகை மாதத்துக்கு 300 ரூபாய் இருக்குமா?'' என்று கேட்டேன். ''அவ்வளவு குறைவாக இருந் தால் நாங்கள் ஸ்டிரைக் செய்வோம்!'' என்றார்.

ஸ்டேட்ஸ்மென் கடிதம்


தகவல்கள்: பாபு

கொண்டிருக்கிறாளாம்.'' பாஸ்கர் இலேசாகச் சிரித்தான்.

''நான் மேற்கொள்கிற இவ்வளவு ஆபத்தான திட்டங்களும் உன்பொருட் டுத்தான்டா! உனக்காகத்தான் இவ் வளவு பெரிய சிக்கல்களையெல்லாம் துணிவுடன் இழுத்துவிட்டுக் கொண்டு காரியங்களைச் செய்கிறேன். மை ஸன்... இதை நீ புரிந்து கொள்ளாமல் பேசு கிறாயே?'' என்றார் பரமேச்வரன், திடீ ரென்று குரலில் தாற்காலிகமாகக் கனிவை வரவழைத்துக்கொண்டவராக.

''என்னை முகாந்திரமாகக் கொண்டு நீங்கள் உங்கள் சொந்த நலனுக்காக இதைச் செய்கிறீர்கள்'' என்றான் பாஸ்கர். தொடர்ந்து, ''நீங்கள் செய் கிற அட்டகாசங்களுக்கெல்லாம் என்னை ஒரு கேடயம் மாதிரி நீங்கள் மனச்சாட் சிக்கு மேலே போர்த்திக் கொண்டிருக் கிறீர்கள். உண்மையில் என் மேலோ, என் வருங்காலத்தின் மேலோ உங்களுக் குத் துளிக்கூட அக்கறை கிடையாது. அக்கறை இருப்பதுபோல் நீங்கள் காட் டிக் கொள்வதெல்லாம் வெறும் வேஷம். அப்படியே என் மேல் அக்கறையிருந் தால் அம்மாவுக்கு நீங்கள் நன்றியல் லவா தெரிவித்திருக்க வேண்டும்! இப் பொழுது என்னை மீண்டும் கல்லூரியில் சேர்த்திருக்கிறாள். ஸ்கூட்டர் வாங்கித் தந்திருக்கிறாள். என்னுடைய புதிய உடைகளையெல்லாம் நீ பார்த்ததில் லையே? அங்கே வந்து பார். இரண்டு பீரோக்களில் அடங்கவில்லை! அங்கே என் அறை எவ்வளவு அழகான அறை

இது யார் கையெழுத்து?



58-ம் பக்கம் பார்க்க.

தெரியுமா? ஸ்பெஷலா 'இன்டீரியர் டெகரேடர்' ஒருத்தியை வரவழைத்து அதை அழகுபடுத்தச் சொல்லியிருக்கிறுள். ப்ராண்ட் நியூ டேப் ரிகார்டர். ரேடியோ செட்... என்ன இல்லே?''

தந்தை இவைகளைக் கேட்டுச் சந்தோஷப்படுவார் என எதிர்பார்த்து அவன் குழந்தை மனத்துடன் கூறினன். ஆனல், அவன் எதிர்பார்த்ததற்கு மாருன அவர் மனக் கிலேசங்கள்தான் அடைந்தார்.

''பாஸ்கர்! கிரமப்படி உனக்குச் சேர வேண்டியவைகளைக் கணக்கிடும்போது இவையெல்லாம் எம்மாத்திரம்? உன்னை ஏமாற்றப் பார்க்கிறுள் அவள். அவளுடைய சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்கும் தெரியுமா!''

''எவ்வளவு கோடிதான் இருக்கட்டுமே!''

''பூ... ஃபூல்... உன் மேல் அக்கறையும், அன்பும் அவளுக்கு இருப்பது உண்மையானுல், அவ்வளவு பெரிய சொத்துக்கு இன்னெரு வாரிசை அவள் தேடுவானேன்? இன்னெரு வாரிசைக் கொண்டு வர மறைமுகமாக முயல்வானேன்?''

''அப்பா...! ஒரு விஷயத்தை நீ முழுசாக மறந்துவிட்டாய். அல்லது வேண்டுமென்றே அப்படி நடிக்கிருய். சட்டப்படி நான் அவள் மகன் அல்ல: உன் மகன்தான். தெரியுமா!''

''பாஸ்கர்.....!''

''சும்மா கத்தாதே. இதற்குப் பதில் சொல். என்னமோ எனக்குச் சேரவேண்டியது, எனக்குச் சேர வேண்டியது என்று ரொம்பவும் வேதனைப்படுகிருயே? எப்படி அவை எனக்குச் சேர வேண்டியவையாகும்? நீ நினைக்கிறபடி சாந்தாவைக் கடத்திக் கொண்டு போய் விட்டால் மட்டும் அவை முழுதும் எனக்கு வந்து விடுமா? அல்லது சாந்தாவைக் கொலை செய்து விடுவதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது மட்டும் அவை நமக்கு வந்து விடுமா? என்னப்பா முட்டாள்தனமான திட்டங்களெல்லாம் வைத்துக் கொண்டு? கொஞ்சம் 'சென்ஸிபிளா'கச் சிந்தியேன். அறிவுபூர்வமாக ஏதாவது செய்ய முயற்சி செய். வீண் கௌரவமெல்லாம் வேண்டாம். அம்மாவிடம் நீ போய் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றுகூட நான் சொல்லவில்லே. சாதாரணமாக அம்மாவின் கட்டில் அருகில் மௌனமாக நின்ருலே போதும். அம்மாவின் உள்ளம் எப்படி நெகிழ்ந்து போகும் தெரியுமா?''

''நாஞ? அவள் முகத்தில் விழிப்பதா? அந்தத் துரோகியின் முகத்திலா? நோ நோ...அது நடக்கவே நடக்காது. இனி என் காரியங்களில் பின் வாங்கும் எண்ணமே எனக்குக் கிடையாது. அவளுக்கு ஒரு புதிய வாரிசு வந்து விட்டது என்பதை ரொம்ப ஆண்டுகளுக்கு முன்பே தெரிந்துகொண்டேன். குருத்திலேயே கிள்ளி எறிய வேண்டும் என்று திட்டமிட்டேன். தோல்வி கண்டேன். பிறகு அந்தக் குருத்து ஒரு நல்ல துணையுடன் தலைமறைவாகி விட்டது. காலமெல்லாம் அதைத் தேடுவதில் ஈடுபட்டுத் தோல்வி கண்டேன். பிறகு உன் உதவியால் கண்டுபிடித்தேன். காத்யாயினியின் இருக்குமிடம் தெரிந்தாலே அந்த வாரிசு இருக்கும் இடம் தெரிந்த மாதிரிதான். சாந்தா என்ற பெண்ணெருத்தி வந்திருக்கிருள் என்று நீ முதன் முதலில் சொன்னபோதே எனக்கு அந்தப் பெண்ணின்மேல் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. என்ருலும் அந்தச் சந்தேகத்தை வளர்த்துக்கொள்ளவில்லே. காரணம், என் கவனத்தைத் திசை திருப்ப மதுராம் பிகை செய்யும் சூழ்ச்சியாகக் கூட இருக்கலாம் என்று எண்ணினேன். பின்னல் சந்தேகப்பட்டுக் காத்யாயினியைச் சந்தித்து அவளிடமிருந்து விஷயம் அறிய நான் முயன்றபோது அது அவ்வளவு சுலபமானதாகப் படவில்லே. அவளைக் காயப்படுத்தாமல், தொந்தரவுபடுத்தாமல் உண்மையைப் பெற முயன்று தோல்வி கண்டேன். கொஞ்சம் பலாத்காரம் தேவைப்படத்தான் செய்தது. அது இல்லாமலே அவள் உண்மையைச் சொல்லியிருக்கலாம்....'' என்று பேசிக் கொண்டே வந்த பரமேசுவரன் திடீரென்று வெறி வந்தவர் போல் பாஸ்கரன் முன்னல் வந்து நின்ருர்.

''அவளுடைய சூழ்வலையில் நான் கைவைக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை அவளேதான் உருவாக்கிக் கொண்டாள், பாஸ்கர்!'' என்று ஒருவித பதற்றத்துடன் கூறினர். (தொடரும்)





மழையில் வந்த மனிதன்

மிருக வெறியுடன் தன்னைக் கெடுத்து விடுகிற ஒருவனைப் பழி வாங்க அவனை அவள் சுட்டுத் தள்ளுகிறாள். அந்த உடலை உடனே கடலில் கொண்டு போய்ப் போட்டும் விடுகிறாள். தன் செயலை யாரும் பார்க்கவில்லை, யாருக்கும் தெரியாது என்று நினைத்திருக்கும் போது ஒருவன் அவளிடம் வந்து அவள் கொலை செய்தபோது கூட இருந்து பார்த்தவன் போல அவளது ஒவ்வொரு செயலையும் விவரிக்கிறான். அவள் விதிர் விதிர்க்கிறாள். தான் சுட்டுக் கொன்றவனைப் போன்று கயவனே இவனும் என்று தவறாகக் கணக்குப் போட்டு அவனிடமிருந்து தப்ப என்னென்னமோ செய்கிறாள். ஆனால் ஒவ்வோர் இடத்திலும் அவனிடம் அவள் அகப்பட்டுக் கொண்டு விழிக்கிறாள். பல அல்லல்களுக்கும் ஆளாகிறாள். முடிவில் அவள் நினைத்தது போல அவன் கயவன் இல்லை என்பதை அவளும் படம் பார்ப்பவர்களும் அறியும் போது திகைப்பு அதிகமாகிறதே தவிரக் குறையவில்லை. திகில், மர்மம், பரபரப்பு இத்தனை உணர்ச்சிகளையும் கதாநாயகியான மார்லின் ஜோபர்ட் அற்புதமாக வடித்துக் காட்டுகிறார். அவர் கண்கள் பேசும் கண்கள். கடைசியில் அவளால் சந்தேகிக்கப்பட்ட கதாநாயகன் அவள் கையில் அவளுடைய ஆடையிலிருந்து பிய்ந்த பித்தானை-கொலை செய்யப் பட்டவனின் கையிலிருந்தது அது-கொடுத்து அவளை அவள் கணவனுடன் வழி அனுப்பி வைக்கும்போது அவள் முகத்தில் உண்டாகும் அந்தச் சிரிப்பு, அழுகை, பளபளக்கும் கண்கள் தெரிவிக்கும் நிம்மதி-அத்தனை உணர்ச்சிக் குவியல்களையும் எப்படித்தான் காட்டுகிறாரோ?

கதாநாயகியைத் தொடரும் சந்தேக மனிதனாக சார்லஸ் பிரான்ஸனும் பிரமாதமாக நடித்திருக்கிறார். இயல்பான நடிப்பு. ரசிகர்களை நாற்காலி முனைக்குத் தள்ளிக் கொண்டு போகும் திகில் நிறைந்த ஆங்கிலப் படம் - ரைடர் ஆன் தி ரெயின்.

நடுக்கும் குளிரில் கொட்டும் வியர்வை!

உதறும் குளிரில் எப்போது வியர்வை ஏற்படும்? பீதி உண்டாகும்போது. பீதி நிறைந்த சம்பவங்களைக் கொண்ட படம்தான் 'கோல்டு ஸ்வெட்'. அழகாக இருப்பவர்கள்தான் கதாநாயகர்கள் ஆக வேண்டும் என்ற நியதியைத் தகர்த்தெறிந்து வருகிறார்கள் சில மேனாட்டுத் திரைப்படத் தயாரிப்பாளர்கள். பல படங்களில் வில்லனாக அறிமுகமான சார்லஸ் பிரான்ஸன் இப்போது கதாநாயகனாக வருகிறார். அவை மர்மப் படங்களாக இருப்பதால் அவர் தோற்றத்துக்கு ஏற்றதாகவும் இருக்கிறது.



கார் ஓட்டுவதில் வல்லவனான ஜோ என்பவன் போலீஸாரிடமிருந்து தப்பி விடுகிறான். அமெரிக்காவுக்குப் போய்த் திருமணம் செய்து கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வருகிறான். அவனது நிம்மதி இவனுடன் கடத்தல் வேலை செய்து தண்டனை பெற்றவர்கள் சிறையிலிருந்து விடுதலையாகி வெளி வரும்வரைதான். தங்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்துவிட்டுத் தான் மட்டும் தப்பிச் சுக வாழ்வு வாழும் அவனைப் பழி வாங்க வருகிறார்கள் அவர்கள். இதிலிருந்துதான் படத்தில் பயங்கரமும் திகிலும் வளர்கின்றன. ஒவ்வொரு காட்சியும் நெஞ்சத் துடிப்பை அதிகமாக்குவதாக உள்ளது. இந்தப் படத்தில் கார் ஓட்டும் காட்சிகளைக் காமிரா அபாரமாகப் படமாக்கியுள்ளது.

காமிரா பொய் பேசாது; ஆனால் மிகைப்படுத்திக் காட்டும் ஆற்றல் அதற்கு உண்டு. அந்த ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தி ரசிகர்களை மகிழ்விக்கிறது இந்தப் படம்.

-கௌசிகன்

Prestige

PREETT

பத்து லட்சத்துக்கும் அதிகமான குடும்பத் தலைவிகள் உபயோகிப்பது பிரஸ்டீஜ்—இந்தியாவில் அதிகம் விற்பனையாகும் பிரஷர் குக்கர்

காரணம் என்ன?

அதிகக் கொள்ளளவு:

பிரஸ்டீஜ் மூடி வெளிப்புறம் பொருந்துவதால் அதிக உணவு சமைக்க நிறைய இடம் கிடைக்கிறது. உள் அடுக்குகள் பெரியவை. காரணம் பிரஸ்டீஜின் கொள்ளளவு வேறு வகை குக்கர்களை விட 1/3 பங்கு அதிகம்.

அதி வேகம்:

பிரஸ்டீஜில் உபயோகிக்கப்படும் சிறப்பான அலுமினியக் கலப்பு உலோகம், சீராகவும் விரைவாகவும் சூடு பரவ உதவுகிறது. அதனால் நேரமும் எரிபொருளும் மிச்சம்.


அதிக பாதுகாப்பானது:

மூடுவதற்கு இரட்டிப்பு வசதியுள்ள மூடி. மூன்று கட்டங்களில் அமைந்துள்ள பிண்டியுடன் கூடிய ரப்பர் பாதுகாப்பு அடைப்பான், குக்கரை பாதுகாப்பானதாகச் செய்கிறது.

பிரஸ்டீஜ் 6 அளவுகளில் கிடைக்கிறது. வாழ்நாள் முழுவதும் உழைப்பதற்கு உறுதியளிக்கிறது.

உங்கள் பிரஸ்டீஜ் குக்கர் அதி நுட்பமானது. சிறந்த பயிற்சி பெற்ற பழுதுபார்ப்போர் தான் அதை சீராக்க முடியும். விற்பனைக்குப் பிறகும் உங்கள் பிரஸ்டீஜுக்கு விரைவாகவும் தரமாகவும் சீர்பணி புரிய, நாடெங்கும் 200க்கும் அதிகமான ஸர்விஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. உத்தரவாதமுள்ள 'ஸ்பேர்' பகுதிகளை பிரஸ்டீஜ்/ப்ரீத் பணிநிலையங்களிலிருந்தும், பிரபல விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே வாங்குங்கள்.





Prestige

PREETT

டிடி. (பிரைவேட்) லிமிடெட், பெங்களூர் 560016

SAA TTP 1008A

கே. ஆர். விஜயா, பிரமீளா இருவரும் ஒரு படத்தில் சேர்ந்து நடிக்கிறார்கள் என்றால், இருவரும் ஒரே நபரைக் காதலித்து ஒருவர் இன்னொருவருக்காகக் காதலனை விட்டுக் கொடுத்து விடுவார்கள் என்று உறுதி செய்து கொள்ளலாம். அநேகமாக விட்டுக் கொடுப்பவர் பிரமீளாவாகத்தான் இருப்பார் என்றும் நம்பலாம். தேவயானின் "மல்லிகைப் பூ" விலும் இதே கதைதான். ஆனால் காதல் ஏற்பட்ட விதமும், கல்யாணம் நடந்த விதமும் தான் சற்றுப் புதுமையானவை.

படிக்காத வண்டிக்காரனுக்குப் பெண் கொடுக்க எந்தப் பணக்காரன் தான் சம்மதிப்பான்! பெண்ணைப் பெற்றவனைத் தன் மகளின் காதலுக்குக் குறுக்கே நிற்கும் கொடியவனாகக் காட்டுவது திரையுலக மரபுதான் என்றாலும் இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாயில்லையே!

மாணிக்கத்துக்குக் கௌரியின் நட்பு வலியில் கிடைத்து எளிதில் வளர்ந்து, கட்டாயமாகக் கல்யாணம் செய்து கொள்ளும்படியான சூழ்நிலையும் உருவாகி விடுகிறது.

கௌரியாக வரும் கே. ஆர். விஜயா அற்புதமாக நடித்திருக்கிறார். ரயிலில் டிக்கெட் இல்லாமல் ஏறி, மாணிக்கத்தின் அநுதாபத்தைப் பெற்றது முதல், கடைசிக் காட்சிவரையில், முகபாவங்களிலும் சிரிப்பினாலுமே பாத்திரத்துக்கு உயிரூட்டி விடுகிறார்.

பிரமீளா தங்கம். அவர் நடிப்பிலும் தங்கம் என்பதை நன்கு நிரூபித்துக் காட்டுகிறார்.

ஸ்ரீகாந்துக்கு நல்ல வாய்ப்பு, நன்றாய் நடித்திருக்கிறார். முத்துராமன் வண்டிக்கார மாணிக்கமாக வருகிறார். வண்டிக்காரனாக வந்தபோது அவர் நடிப்பில் இருந்த வேகம் தேரோட்டல் பாடகனான பிறகு இல்லை!

'சோ', மனோரமா வரும் நகைச்சுவைக் காட்சிகளைக் கண்டு நகைக்கவும் முடியவில்லை, சுவைக்கவும் முடியவில்லை! அசடு வழிகிறது!

நீண்ட பாடல்களும், 'டிஷ்யூம், டிஷ்யூம்' சண்டைகளும் நிறைய வருகின்றன. இவைகளைத் தாங்கிக் கொள்ள நீண்ட திரைக் கதையும் இருக்கிறது. ஆனால் ரசிகப் பெருமக்களின் சகிப்புத் தன்மையும் நீண்டுகொண்டு போகும் என்று எதிர்பார்க்க முடியுமா! ஸ்ரீகாந்த், கே. ஆர். விஜயா நடிக்கும் கட்டபொம்மன் தெருக்கூத்து நாடகம் விறுவிறுப்பாக ரசிக்கும்படியிருக்கிறது.

கதை, வசனம், டைரக்ஷன், தயாரிப்பு ஆகியவைகளை ஏற்றுச் சிறப்பாக நிறைவேற்றியிருப்பவர் என். எஸ். மணியம். 'சன்பென் ஸோ'டு கூடிய திரைக் கதையைக் குழப்பம் இல்லாமல் இயக்கியிருப்பது பாராட்டுக்குரியது.

மல்லிகைப் பூவின் மணம் யாரையும் எளிதிற் கிறங்க வைக்கும். இப்படத்தில் கமழும் நடிப்பாற்றலாகிய மணமும் நம்மைக் கிறங்க வைக்கிறது.

—காந்தன்

மல்லிகைப் பூ





JANUARY 11, 1974

FILMFARE

January 11, 1974

Filmfare dons a bold new look with this issue with colourful pictures of glamorous new stars and other new features.

COVER:

Youngest of the new heroes RISHI KAPOOR of "Bobby" fame teamed with the sensational new discovery PARVEEN BABI.

INSIDE:

Provocative pictures of the vivacious newcomers Komila Wirk, Zarina Wahab and other new starlets.

OTHER HIGHLIGHTS:

Ajay Sahni gives a glimpse of the interesting facts that he experienced while filming on location.

Kerala Government's plan for aiding Malayalam Cinema —our correspondent's exclusive interview with Kerala Information & Home Minister, Karunakaran.

Special coverage on Satyajit Ray's new film.



NEW FEATURES:

View From The Gallery. Brief reviews of films by readers. The best review published will be awarded a prize of Rs. 25/-

Star Quotes:

Candid viewpoints of stars on current events and problems.

Extensive news coverage of cinematically developed States like Karnataka and Kerala besides Tamil Nadu and Bengal.

[illegible] பாதை...

மாலதி புணதாம்பேகர்

நால்கடோரா பாதையின் இருபுறங்களி லும் நாகப் பழங்கள் நிறைந்த மரங்களைப் பார்த்து மல்லிகா மகிழ்ந்திருந்தாள். எனவே தனது சிநேகிதிகளை அழைத்துக் கொண்டு அவள் வெகுதூரம் நடந்து வந்திருந் தாள். அந்தப் பக்கம்தான் எங்கோ ஒரு பெரிய கட்டடம் கட்டப்பட்டுக் கொண் டிருந்தது. கட்டட வேலையில் ஈடுபட்ட வேலை யாட்கள் அங்கேயே அருகில் தமது குடிசை களைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். பெற் றோர் வேலைக்கு என்று கிளம்பிச் சென்றுவிட் டால் அதன்பின் மல்லிகா எங்கே போகிறாள், என்ன செய்கிறாள் என்று பார்ப்பதற்கு ஒரு வரும் இருக்கவில்லை. இவ்வாறு அலைவதில் தான் அவள் தனது வயதுக்கேற்ற இரண்டு மூன்று தோழிகளைத் தேடிப் பிடித்திருந் தாள். பாரோ, குட்டி, நஜமா!

நேற்று மழை பொழிந்த தன் காரணமாக வெளியே கிளம்ப முடியவில்லை. இன்று மிகவும் பளிச்சென்று வெய் யில் அடித்துக் கொண்டிருந் தது. மல்லிகா சொன்ன வாறு நாகப்பழம் கிடைக் கும் என்பதைத் தோழிகள் நம்பவில்லை. எனினும் அவர் களுக்கு ஒரு குதூகலம் ஏற் பட்டிருந்தது. வேறு எது வும் இல்லை எனினும் திறந்த வெளியில் காற்றோட நடப்ப தில் எல்லோருக்குமே ஓர் இன்பம். குட்டி, தாயாருக் குத் தெரியாமல் வீட்டி லிருந்து ஒரு சிறு கூடையை எடுத்து வந்திருந்தாள். பாரோ உப்பு, மிளகுப் பொடியின் ஒரு சிறு பொட்டலத்தைத் தனது தாவணித் தலைப்பின் நுனியில் கட்டி எடுத்து வந்திருந் தாள்.



காலையில் எட்டு மணிக்குப் பெற்றோர்கள் வேலைக்குச் சென்றவுடனேயே நால்வரும் நழுவி விட்டிருந்தார்கள். எவ்வளவு நேரம் நடந்து செல்ல வேண்டியிருந்தது என்பதை அவர்களேதான் அறிவார்கள்.

சில நாட்களுக்கு முன்புதான் மல்லிகாவின் அப்பா எல்லோரையும் பஸ்ஸில் அழைத்துச் சென்றிருந்தார். சாந்தினி சௌக்குக்குப் போவதற்கான ஏற்பாடு ஆகியிருந்தது. பஸ்ஸில் கண்டக்டருடன் பணத் தகராறு ஏற்பட்டிருந்தது. அவன் அவர்களை இறக்கி விட்டிருந்த இடம் மல்லிகாவுக்கு நினை விருந்தது. அச்சமயம் மல்லிகா அந்த மரங் களையும் அந்தப் பாதையையும் நன்கு கவனத் தில் கொண்டிருந்தாள். அன்றைய தினம் நடந்து செல்லும்பொழுது அவள் நடை வழி யில் மண்ணில் கிடந்த பழங்களைப் பொறுக் கித் தனது மடியில் போட்டுக் கொண்டிருந் தாள். அந்தப் பழங்களின் புளிப்பும் துவர்ப்புமான சுவை இன்னமும் அவள் உதட்டில் தங்கியிருந்தது.

இப்போது வழி நடந்து கொண்டிருக்கையில் அந்த மரங்கள் கண்ணில் பட்டதுமே அவள் உள்ளம் உவகையினால் பூரித்து எழுந்தது. பெருமையுடன் அவள் தன் தோழிகளிடம் சொல்லலானாள்: ''பாருங்கோடி பாருங்கோ, நன்னா பார்த்துக்குங்கோ — இல்லேன்னா வீணாக அலைக்கழிச்சேன்னு சொல்லுவீங்க.''

உடல் திறமையெல்லாம் ஒன்றுகூட்டி அந்த நான்கு பெண்களும் கற்களை வீசி அடிக்கத் தொடங்கினார்கள். சில கற்கள் குறி தவறிய போதிலும், சில குறி பிறழாது பழங்களை உதிர்த்து விட்டன. சற்றே நிமிடங்களில் நிலத்தில் பழங்கள் குவிந்துவிட்டன. நால்வரும் ஆசை தீர நாகப்பழங்களை ஒரு கை பார்த்துவிட்டார்கள்.

''பாரோ, எதுக்குடீ கூடையில் நெரப்பிக் கிட்டிருக்கே?''

''எங்க ரத்தனுக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''யாரு ரத்தன்?''

''என்னோட சின்னத் தம்பி — கிளம்பற போது, கூட வர்றேன்னு அவன் அடம் புடிச் சுக்கிட்டிருந்தான். நாகப்பழம் கொணர்ந்து தருவேங்காட்டின்னு சொல்லவும்தான் கம்மா குந்திக்கிட்டான்.''

அவர்களை அங்கிருந்து யாருமே விரட்டி அடிக்கவில்லை. வயிறோ முட்ட நிறைந்திருந் தது. இருந்தும்கூட ஆசை நிறையவில்லை.

''பாரோ, கொண்டாரத்தான் செய்தியே, இத்துனூண்டு கூடையை என்னமாக் கொணர்ந்தே? இன்னமும் பழங்களை உதிர்க்க வாணுமா?''

'' வாணுமா பின்னே! உதிர்க்கலாம் பழங்களை. நஜமாவின் மேலாடையில் நிரப்

பிக்கலாம். நிறையக் கொள்ளும். இம்மாம் பெரிய மூட்டையாகும்.'' — கைகளை அகல விரித்துக் காண்பித்தாள்.

''இல்லே, இல்லே —'' நஜுமா சட்டென்று தன் மார்பில் கை வைத்து மேலாடையை இறுக்கிப் பிடித்துக் கொண்டாள். ''மேலாடையை இங்கிருந்து கொஞ்சம்கூட நழுவவிடக் கூடாதுன்னு அம்மிஜான் சொல்லியிருக்கு.''

'' ஹாம், அம்மிஜான் என்னத்துக்கு வர்ரா இங்கிட்டு உன்னைப் பார்க்க? வீட்டுக்குத் திரும்பினதுமே பழங்களை என் வீட்டிலே கொட்டிவிடு. பின்னாலே போ, உன் தாவணியை எடுத்துக்கிட்டு வீட்டுக்கு.''

''ஆளைப் பாருடி! உன் வீட்டிலே மட்டும் கொண்டு வந்து பழங்களைக் கொட்டணுமா ? நாம் எல்லாம் கூடிப் பழங்களைச் சேர்க்கறதாம். பின்னே நீ மட்டும் ஒண்டியாகத் தின்னறதாமோ ?''

'' ஏய் — நீங்க இப்படி சண்டை போடாதீங்கடி. எனக்கு ஜம்னு ஒண்ணு தோணியிருக்கு.'' மல்லிகாவின் மண்டையில் எப்போதுமே புதுக் கற்பனைகள் தோன்றுவது உண்டு.

''பாரோவின் கூடையிலும், நஜுமாவின் மேலாடையிலும் எத்தனை கொள்ளுமோ, அத்தனை பழங்களை எடுத்துக்கலாம். பிறகு அந்த ஆஸ்பத்திரி கேட்டினருகே உட்கார்ந்துகிட்டு இம்மா அளவு அஞ்சு — அஞ்சு பைசாவுக்கு விப்போம்.'' பேசுகையில் கையைக் கிண்ணமாக்கி அளவு காண்பித்தாள்.

'' ஆறு. நம்மகிட்டேயிருந்து வாங்கிக்கு வாங்கடா யாராச்சும்?'' என்று பாரோ குறுக்கிட்டாள்.

'' நம்பளை யாராச்சும் பிடிச்சுக்கிட்டாங்கன்னா ! துரத்தி அடிச்சாங்கன்னா ?''

நஜுமாவின் வழக்கமான அச்சம் வெளிப்பட்டது.

''ஏய், பயந்தாங்கொள்ளிகளா — கிளம்புங்க, என்னோடெ — யாரும் ஒண்ணும் செய்ய மாட்டாங்க.''

பழங்கள் நிறைந்த கூடையையும், முடித்த மேலாடையின் மூட்டையையும் சமாளித்தவாறு நால்வரும் ஆஸ்பத்திரியின் வாசல் அருகில் வந்தார்கள். தோளின் மீதிருந்த ஆடையை விலக்கியதால் நஜுமா முன்னரே தத்தளித்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எப்படியோ இருந்தது. மேல் சட்டையின் மீது பழக்கறை வேறு பட்டிருந்தது. முன்னர் நாக மரத்தின் அடியில் மண் .தரையில் சப்பணங் கட்டி உட்கார்ந்திருந்ததனால் மல்லிகாவின் பின்புறமும் பாவாடையில் விசித்திரமான கறை படிந்திருந்தது. ஆனால் அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.

பட்டிக்காட்டானைப் போல் காணப்பட்ட ஒரு முதியவன் வெளியில் வந்து கொண்டிருந்தது தென்பட்டது. அவனுடைய கையைப் பிடித்தவண்ணம் ஒரு சிறு பையனும் வந்து கொண்டிருந்தான். மல்லிகா விரைந்து அவன் முன்னால் சென்று கேட்டாள்: ''நாகப்பழம் வேணுமா? இத்தாங்கோ அஞ்சு பைசாவுக்கு.''

அச்சிறு பையன் பழம் வேண்டும் எனக் கேட்கவே அந்தக் கிழவன் உடனேயே ஐந்து பைசாவை எடுத்துக் கொடுத்தான்.

அதன் பின்னர் ஒரு சைக்கிள்காரன் வந்தான். பின் சீட்டில் ஒரு மங்கையும் அமர்ந்



Warm regards,

Henry A. Kissinger

கிஸ்ஸிஞ்சருடையது !

நன்றி : நியூஸ் வீக். நகல் : 'பாலி'

இருந்தாள். அவள் முகத்தைத் தலைக்கு மேலிருந்து வந்த துணியினால் மூடிக் கொண்டிருந்தாள்.

"இந்தா பிடி — புளிப்பா சாப்பிட ஆசையாக இருக்கிறது என்று சொன்னாயல்லவா ? இன்னமும் வேண்டுமா ?" என்று நாலனுவுக்கு நாகப்பழம் வாங்கிக் கொடுத்தாள்.

அந்த மங்கை வெட்கத்தால் குன்றிப் போனாள். ஆனால் அந்த ஜோடியினிடம் அச் சிறுமிகளின் கவனம் இருக்கவில்லை. கையில் காசு குலுங்கியதால் ஏற்பட்ட மகிழ்ச்சி உள்ளத்தில் அடங்காததாயிற்று. இதே போல் இன்னும் நான்கைந்து பேர்கள் பழம் வாங்கிச் சென்றனர். பத்து காசுக்கும், பதினைந்து காசுக்கும் என அவர்கள் வாங்கிச் செல்லச் சிறுமிகளிடம் ஒரு ரூபாய் அளவுக்குச் சில்லறைக் காசு சேர்ந்துவிட்டது. பின்னர் வெகு நேரம் வரையில் பாதையைக் கடந்து செல்வோர் யாருமே இருக்கவில்லை. ஒருவரும் இல்லாத இடத்தில் உட்கார்ந்து சிறுமிகள் அலுத்துப் போயினர்.

"போகலாமா வீட்டுக்கு ?", நஜுமா பேச்சைத் தொடங்கினாள்.

"இவ்வளவு சீக்கிரமா ? — இன்னமும் எத்தனை பழம் மிஞ்சிக் கிடக்கு!"

"பின்னே என்ன ! எல்லாமே வித்துப் போச்சுன்னு ரொம்பப் பணம் கிடைக்கும்."

"நாம ஒன்னு செய்யலாமா ?"

"என்ன?"

"அதோ, எதிர்த்தாப்போலே இருந்து பஸ் வருது. அதோ பார் — மாடி பஸ்—அதில் ஏறிப் போகலாம் —"

"எங்கே, வீட்டுக்கா?" நஜுமா படபடப்போடு கேட்டாள்.

"இந்தப் பஸ் எங்கே போகிறதோ, எனக்குத் தெரியாது."

மல்லிகா சொல்லலானாள்: "இந்தப் பஸ்லே போனா ரொம்பத் தொலைவுக்கு அப்பாலே அங்கிட்டு ஒரு பெரிய ஸ்கூல் வரும். நிறையப் பசங்களும் புள்ளைங்களும் படிக்கிறாங்க அங்கே. அங்கே போயி நாகப்பழம் விக்கலாம். பசங்களும், புள்ளைங்களும் கண்டிப்பா வாங்குவாங்க. போன குளிரிலே நான் அத்தையோட அங்கே போயிருந்தேன். கொய்யாப் பழம் விக்க."

மல்லிகாவின் பரந்த அறிவைக் கண்டு மூவரும் வியப்படைந்தார்கள்.

மற்ற மூவரும் என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்கும் முன்னரே மல்லிகா பஸ்ஸில் சடக்கென்று ஏறிவிட்டாள். குட்டியும் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஏறினாள். அப்போது பாரோவுக்கும் நஜுமாவுக்கும்கூட பஸ்ஸில் ஏறுவதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை.

"ஏய்,· டிக்கட்டுக்குக் காசு எடு—" கண்டக்டர் சற்று கொடூரமாகவே சொன்னான்.

"ஏனய்யா, யாரைக் கேட்கிறாய் பைசா?" பஸ்ஸில் இருந்த காலேஜ் இளைஞன் ஒருவன் அதைவிடக் கொடூரமாகவே பதிலுக்குக் கேட்டான். பஸ்ஸில் கூட்டம் மிகுந்திருந்தது.

"நான் உங்களைக் கேட்கவில்லை. இந்தச் சிறு குட்டிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன்."

"சிறு குட்டிகளா ? எங்கே இருக்கிறார்கள் சிறுமிகள் ?"

"இன்னமுமா கண்ணில் படவில்லை ?"

முன்னால் இருந்த சீட்டில் காலேஜுக்குப் போகும் சில இளம் பெண்கள் உட்கார்ந்திருந்தனர். துருதுரு என்று இருந்தார்கள். இறுக்கமான உடையும், பெரும் கறுப்புக் கண்ணாடியும் அணிந்திருந்தார்கள். ஒருத்தி புடவை உடுத்தியிருந்தாள். அவள் அணிந்திருந்த சட்டை இருந்தும் இல்லாதது போல் இருந்தது.

மினி உடையில் இருந்த மீனு தலை குனிந்து ஏதோ படித்துக் கொண்டிருந்தாள். நந்திதாவின் கூர்த்தாவின் கைகள் யானையின் காதுகளைப் போல் ஆடிக் கொண்டிருந்தன. அவர்களது உடை, தோற்றம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி அந்த இளைஞர்கள் எப்போதுமே ஏதாவது விமரிசனம் செய்வதுண்டு.

"எந்தப் பெண்கள் ? கண்டக்டர் பாபு! நீ ஷர்மிளா டாகூர், சாயரா பானு, மும்தாஜ் ஆகியவர்களிடம் டிக்கெட் கேட்கிறாயா ? கொழுப்புத்தான் !" இளைஞர்கள் கண்டக்டரை ஏளனம் செய்தார்கள்.

"இதோ பாருங்கள், பிரதர்! நீங்கள் எல்லாரும் எழுதப் படிக்கத் தெரிந்தவங்க. கொஞ்சம் அடக்கமாகப் பேசுங்க — நான் இந்தப் பெண்களிடம் டிக்கட் வாங்கச் சொன்னேன்." — கண்டக்டர் அந்நால்வரையும் விரலால் சுட்டிக் காட்டினான். இளைஞர்கள் மௌனமானார்கள்.

"உம், சட்டென்று எடுங்கள் பணத்தை— சொல்லுங்கள், எங்கே போக வேண்டும்?"

"பெரிய இஸ்கூலுக்குப் பக்கத்தில்."

"எங்கே இருக்கிறது பெரிய ஸ்கூல்? எனக்குத் தெரியாது. இறங்குங்கள் கீழே."

"ஏனய்யா, பெரிய இஸ்கூல் என்றால் எங்கள் காலேஜ்தான்."

இவ்வாறு பேச்சு நடந்து கொண்டிருக்கையில் மல்லிகா காசை எண்ணிக் கொடுத்தாள். பஸ்ஸின் மேல் தளத்துக்குச் செல்லும் ஆசை அவள் மனத்தில் ஏற்பட்டது. மேலே போவதற்கான படிக்கட்டுக்கு அடியிலேயே ஓர் ஓரமாகப் பழக் கூடையையும், மேலாடையிலான மூட்டையையும் அவள் தள்ளி வைத்தாள். பின்னர் மெதுவாகக் குட்டியிடம் சொன்னாள் — "வா, மேலே போகலாம், நல்ல மஜாவாக இருக்கும்."

குட்டியினாலும் தன் ஆவலை அடக்க முடியவில்லை. பாரோவும், நஜுமாவும் உடலை ஒடுக்கிக்கொண்டு நின்று கொண்டிருந்தார்கள்.


உயிர்நூல் பாடம்
சலிப்பூட்டுகிறது
காலை முதல் இரவு வரை புதுமையுடன் தோற்றமளிப்பது எப்படி?
பவுடர் பூசியதுபோன்ற தோற்றத்தைத் தவிர்ப்பது எப்படி?
லக்மே
அல்ட்ரா-சில்க்
பேஸ் பவுடர் மற்றும் காம்பாக்ட் மேக்-அப்

நஜமா மல்லிகாவிடம் கெஞ்சாத குறையில் சொன்னாள் — ''வேண்டாம, மேலே போகாதே — எனக்குப் பயமாக இருக்கு.''

''அதில் என்ன பயம்? நீங்க ரெண்டுபேரும் இங்கேயே குந்திக்கிட்டு இருங்க. இறங்கற இடம் வந்ததும் நாங்க வந்துடறோம்'' இவ்வளவு சொல்லிக் குட்டியின் கையைப் பிடித்துக்கொண்டு பரபரவென்று மேலே சென்று விட்டாள்.

அடுத்து வந்த ஸ்டாப்பில் பஸ் நின்றபொழுது ஒரு பெண் பஸ்ஸில் ஏறினாள். அவள் நாகப்பழ நிறத்தில் இறுகிய பைஜாமாவும், பூக்களின் சித்திரம்கொண்ட அதே வண்ணக் குர்த்தாவும் அணிந்திருந்தாள். அவள் கையில் இருந்த பர்ஸும், காலில் இருந்த செருப்பும் நெற்றிப் பொட்டும், லிப்ஸ்டிக்கும் கூட நாவற்பழ நிறத்தவையாக இருந்தன. அவள் உள்ளே நுழைந்ததுமே எல்லோருமே அவளிடம் பார்வையைச் செலுத்தினர். அவளுடைய உடை கண்களைப் பறிப்பதாக இருந்தது.

''பார்த்தாயா உமேஷ், வந்து விட்டாள் உன்னுடைய ஷர்மிளா டாகுர்!''

நாவற்பழ நிற உடையிலிருந்த அஞ்சலி தனது தோழியிடம் போய் அமர்ந்தாள். சுப்ரியா, நந்திதா, ஜயஸ்ரீ ஆகியவர்கள் அமைதியுடன் உட்கார்ந்திருந்தார்கள். இளைஞர்கள் காரணமின்றி, பஸ் முழுதும் அங்கும் இங்குமாக நடந்து கொண்டிருந்தார்கள். யுவதிகளுக்கு எரிச்சல் ஏற்படும் வகையில் அவர்களைச் சீண்டுவதற்கான வழிகளை யோசிக்கலானார்கள்.

அஞ்சலியின் உடை நாவற்பழ நிறத்தில் இருப்பதைக் கவனத்தில் கொண்டதுமே உதயனின் மண்டையில் ஒரு புதிய எண்ணம் உதித்தது. அவன் நஜமாவின் கூடையிலிருந்து கை நிறையப் பழங்களை அள்ளி எடுத்துக் கொண்டு அஞ்சலிக்கு முன் சென்று ''ஏ ஜாமுன்வாலி, ஜாமுன் வாங்கிக்கொள்!'' என்று ராகம் கலந்த தொனியில் சொன்னான். கூடை கவிழ்ந்தது. சில பழங்கள் அங்கிருந்தவர்களின் காலுக்கடியில் சென்றன. மற்ற இளைஞர்களும் உதயனைப் போலவே செய்ய ஆரம்பித்தார்கள். கை நிறையப் பழங்களை எடுத்துக் கொண்டு அதே போல், 'ஓ ஜாமுன்வாலி, ஓ ஜாமுன்வாலி' என்று ராகத்துடன் பாடி பஸ்ஸில் கலவரம் செய்யலானார்கள். இடையிடையில் பழங்களை வாயில் போட்டுக் கொள்ளவும் தொடங்கினார்கள். விதைகளை அங்கேயே பஸ்ஸில் எறிந்தார்கள். இதைக் கண்ட பாரோ, நஜமா இருவரின் நாவும் வறண்டு போயிற்று. அவர்களுடைய மனம் குழம்பித் தவித்தது. மிரண்ட மான் விழி கொண்டு அங்குமிங்கும் பார்க்கலானார்கள். யாருமே அந்த இளைஞர்களை அடக்க முயலவில்லை. அவ்விரு பெண்களும் அந்த இளைஞர்களைக் கட்டுப்படுத்தும்படி கண்டக்டரிடம் வேண்டினார்கள்.

''நாகப்பழத்துக்குக் காசு கொடுங்கள் பாபுஜீ!'' பாரோ ஒரே வாக்கியத்தைப் பல முறை திருப்பித் திருப்பிச் சொன்னாள். நஜமா மிரண்டு போய் மல்லிகாவைக் கூவி அழைக்கலானாள்.

''ஏண்டா, ஜாமுன்வாலி தானே எப்படி நாகப்பழம் வாங்குவாள்? நாம்தான் அவளிடம் நாகப்பழம் கேட்க வேண்டும்.''

''அதோ பார் அவள் சட்டையில் எத்தனை பழங்கள்!''

''அப்பன்னு கேளேன், விற்கப் போகிறயா என்று — நமக்கு என்ன? இந்தப் பழங்களைக் காட்டிலும் அவள் மேல்.''

இந்தப் பேச்சைக் கேட்டதும் சிரிப்பின் ஒலி சங்கொலியென முழங்கியது. அஞ்சலி சினத்தால் சிவந்தாள். பாரோவும் நஜமாவும் அந்த இளைஞர்களின் சட்டைக் கைகளை இழுத்த வண்ணம், ''காசைக் கொடுங்க, காசைக் கொடுங்க'' என்று அலறலானார்கள்.

ஒவ்வொரு ஸ்டாப்பிலும் கூட்டம் அதிகரித்துக் கொண்டே வந்தது. குட்டியும் மல்லிகாவும் மேல் தளத்திலேயே இருந்தார்கள். அவர்கள் இருவருக்கும் கீழே நடந்ததைப் பற்றி ஒன்றும் தெரியாது.

கடைசியாகக் காலேஜ் ஸ்டாப் வந்தது. இறங்குவோரின் நெருக்கடி. பெண்கள் இறங்கும்போது இளைஞர்கள் மீண்டும் அவர்கள் மீது உராய்தலும், இடித்தலும், உந்துதலுமாகச் செய்து கொண்டு அவர்களுக்கு வழிவிட்டுக் கொண்டிருந்தார்கள். பழத்துக்குப் பணம் கொடுக்க வேண்டிய எண்ணம் ஒருவருக்குமே ஏற்படவில்லை.

காலேஜ் கேட்டில் நுழைந்து விரைந்து உள்ளே செல்லும் சுப்ரியாவைப் பார்த்து உதயன் அவள் பின்னால் ஓடவே செய்தான். பஸ்ஸிலிருந்து இறங்கியதும் இனந்தோறும்



இருவரும் காலேஜ் கேட்டுக்கு வெளியில் நெடுநேரம் பேசுவதும், பின்னர் சேர்ந்து ஜோடியாக உள்ளே போவதும் வழக்கம். ஆனால் இன்று அவளுக்கு என்னதான் ஆகிவிட்டது? இப்படிப் பேசாமல் ஏன் முன்னால் விரைந்து போகிறாள்? உதயனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. தனது தோழர்களைப் பிரிந்து அவளை நெருங்கினான்.

''சுப்ரியா!'' என்று குழந்தைக் குரலில் அவன் அவளை அழைத்தான். அப்போதும் அவள் நிற்கவில்லை. இன்னமும் விரைந்து மேலே தொடர்ந்து போகலானாள்.

''போ — என் பார்வையிலிருந்து விலகிப் போய்விடு — பஸ்ஸில் இன்று எவ்வளவு பொல்லாத்தனத்துடன் நடந்து கொண்டீர்கள் நீங்கள் எல்லோரும். அந்தச் சிறுமிகள் பாவம்! அவர்களுடைய பழங்களைப் பிடுங்கி எடுத்துக் கொண்டீர்கள். அவர்களுக்கு வஞ்சனை செய்தீர்கள்.''

''அதில் என்ன போச்சு, நான் சொல்கிறேன், கேள். வெறும் வேடிக்கைக்காக அவ்வாறு செய்தோம்.''

''வேடிக்கை என்பதைப் பற்றிய உங்கள் கருத்து இதுதானா? ஏழைகளை ஏமாற்றுவதும், அந்த ஏமாற்றும் திறமையில் வேடிக்கையை அநுபவிப்பதும்தானா உங்கள் ஆண்மை!''

''ஸாரி! அந்த மகேந்திரன் இருக்கிறானல்லவா? அவன் சேர்க்கையில் சில சமயம் இப்படி ஆகிவிடுகிறது. இன்று கொஞ்சம் அதிகமாகவே கலாட்டா செய்து விட்டோம் இல்லையா?''

''போதும் நிறுத்துங்கள்! அழுது கொண்டிருந்த அந்தச் சிறுமிகளின் முன்னால் ஓரிரு ரூபாய் நோட்டுக்களைத் தூக்கி எறிந்திருந்தால்கூட நான் உங்களை மன்னித்திருப்பேன். ஆனால் அவர்கள் அழுகையைக் கண்டும்கூட எப்படி உங்களுக்கு இரக்கமே ஏற்படவில்லை?''

''ஸாரி—''

''நானும் 'ஸாரி' சொல்கிறேன். இன்றிலிருந்து வேறுபட்டுப் பிரிந்த பாதைகளில் செல்வதுதான் நல்லது. ஒருவரையொருவர் மறந்துவிடலாம்.'

''அதைவிட இந்த நாகப்பழக் கதையையே மறந்து விடலாம்.''

''இல்லை. அது என்னால் முடியாத காரியம். நீங்கள் போகலாம்.''

அவள் குரலிலிருந்த நடுக்கமும் மறைந்து அதில் இப்போது அவளுடைய மன உறுதி வெளிப்பட்டது. குரலிலிருந்த உறுதி, முகத்தில் தோன்றிய வறட்சி — இவ்விரண்டினாலும் உதயனுக்குக் கன்னத்தில் அறைந்தாற்போல் ஆயிற்று. புரிந்து கொள்ள வேண்டியதை அவன் புரிந்து கொண்டு விட்டிருந்தான். அவள் சில அடிகளை தள்ளி உட்கார்ந்திருந்தாலும், அவனுக்கும் அவளுக்கும் இடையே இருந்த இடைவெளி என்றுமே குறைய முடியாத அளவுக்கு மிகப் பெரியதாக இருந்தது.

(ஸ்ரீமதி சுதா நரவணே அவர்களின்
மராட்டியக் கதை)



கோலம் இடும் கை

பூவாளூர் சுந்தரராமன்

ஆராவமுதுக்கு இந்தக் கார்த்திகைக்கு ஐம்பத்தைந்து வயது முடிகிறது. இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் வேலையில் இருந்து ஓய்வு பெறப் போகிறார். ஆனால் மனுஷன் பெரிய சவடால் பேர்வழி; தலையில் ஒரு மயிர் நரைக்காதிருந்ததற்கு ஏற்றபடி தினம் தவறாமல் முக க்ஷவரம் செய்து கொண்டதனால் அவரைப் பார்த்தவர் எவரும் நாற்பது வயதுக்கும் குறைவாகவே மதிப்புப் போட்டார்கள். இத்துடன் தும்பைப் பூப் போல் வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறிக்கும் மில் வேஷ்டி பஞ்ச கச்சம்; அரைக் கை பனியன்; நாலு முழத் துண்டு. நெற்றியில் ஒற்றைக் கோடு திருமண்; முகத்தில் எப்போதும் தவழும் புன்னகை. சிரிக்கச் சிரிக்க வேடிக்கைப் பேச்சு! அவர் இருக்கும் இடத்தில் எப்போதும் ஒரு கலகலப்பும் மகிழ்ச்சியும் பொங்கி வழியும்.

ஏறக்குறைய ஒரு வருஷத்துக்கு முன்னால் அவர் குடியிருந்த காலனியில் எதிர் வீடு ஆறு மாத காலமாகப் பூட்டிக் கிடந்தது. அதைத் தில்லியில் இருக்கும் எவரோ வாங்கி விட்டார்கள் என்று வதந்தி உலாவிற்று. வேறு சிலர் 'ரெண்ட் கண்ட்ரோலருக்குப் போயிருக்கிறது!' என்று கிசுகிசுத்தார்கள். இந்த நிலையில் ஒரு நாள் மாலை அந்த வீட்டின் முன் ஒரு லாரி வந்து நின்றது. இரண்டு மூன்று ஆட்கள் பரபரப்புடன் இறங்கி லாரியில் இருந்த சாமான்களை அந்த வீட்டில் நிரப்பிவிட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு போனார்கள். மேலும் ஒரு வாரம் வீடு பூட்டியே கிடந்தது. திடீரென்று ஒரு நாள் மாலை வீட்டில் ஆள் நடமாட்டம் தென்பட்டது. இரவில் வீட்டில் விளக்கு எரிய ஆரம்பித்தது.

மறு நாள் காலையில் அந்த வீட்டு வாசலில் நீர் தெளிக்கப்பட்டு வெகு அழகாகக் கோலம் போடப்பட்டிருந்தது. அந்தக் கோலம் வரையப்பட்டிருந்த விதமும், அந்த ரேகைகள் ஓடியிருந்த லாகவமும் அவரையும் அறியாமல் அவர் சபாஷ் என்று கூறும்படி யிருந்தது.

யார் அவ்வளவு ஒயிலாக, 'பளிக்கை'யாக அந்தக் கோலத்தைப் போட்டிருப்பார்கள் என்பதில் ஆராவமுதின் மூளை ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது. நிச்சயமாக வேலைக்காரி போட்டிருக்க முடியாது! அவ்வளவு அழகாக, கோணல் மாணல் இல்லாதபடி சமாத்காரமாக நிறுத்தி எந்த வேலைக்காரி போட்டிருப்பாள்?

ஆராவமுதுக்குப் புரியவில்லை. மறுநாள் பொழுது புலர்ந்தும் புலராததுமாக இருக்கும் மனத்தை மயக்கும் வேளை; வேலைக்காரி வாசலில் தண்ணீர் தெளித்த கையுடன் பதினெட்டு இருபது வயது இருக்கும் ஒரு பெண் கோல மாவை எடுத்துக் கொண்டு வெளியே வந்ததை ஆராவமுது பார்த்தார். அவர் கண்கள் நிலைக் குத்தி நின்று விட்டன. எங்கிருந்து இந்த அப்ஸரஸ் தோன்றினாள்? கண்களை உள்ளங் கைகளால் தேய்த்து விட்டுக் கொண்டு பார்த்தார். அந்தப் பெண்ணின் அழகும், ஒயிலும், சாயலும் அவரை ஒரே மயக்கத்தில் ஆழ்த்தி விட்டன. பருமன் என்று சொல்ல முடியாத உயரம்; செந்தாழம்பு நிறம்; கடைசல் பிடித்த செப்புச் சிலை அவள்! குனிந்து குனிந்து கோலம் போடும்போது தலைப் பின்னல் நிலத்தைத் தொட்டு முத்தமிட. அவள் உடம்பின் அழகுக் குவியல்கள், நெளிவு சுளிவுகள் அவள் தேகத்தின் வாளிப்பைக் காட்டின. கண் மூடிக் கண் திறப்பதற்குள் அந்த வாசலில் ஒரு ஜீவனையே உயிர்ப்பித்து விட்டாள், கோலம் என்னும் பெயரால். ஆராவமுதுக்குத் தம் நிலைவு வர வெகு நேரம் ஆயிற்று!

அவ்வளவு அழகாகக் கோலம் போடும் அந்தப் பெண்ணின் பெயர் ஹேமா என்றும் பெற்றோருக்கு அவள் ஒரே மகள் என்றும், அவள் தகப்பனார் 'கஸ்டம்ஸ்' அலுவலகத்தில் வேலை பார்க்கிறார் என்றும் ஆராவமுது மறுநாளே விசாரித்து அறிந்து கொண்டு விட்டார். அதற்குப் பிறகு ஒரு நாளாவது ஹேமா கோலம் போடுவதை அவர் காணத் தவறியதேயில்லை. அவள் வரையும் ஒவ்வொரு புதிய கோலமும் ஹேமாவின் அழகுணர்ச்சியை மட்டுமின்றி அவள் உள்ளத்தில் தேங்கிக் கிடக்கும் இன்பக் கனவுகளைப் படம் பிடித்துக் காட்டுவது போல் அவர் கண்களுக்குப் புலனாயிற்று. ஒவ்வொரு சமயம் ஹேமா வரையும் கோலம் அழகா, கோலத்தை வரையும் ஹேமா அழகா என்று இரண்டையும் மாறி மாறிப் பார்த்துக் குழம்புவார். அவள் வரையும் கோலம் போலவே அவள் இருக்கும் இடத்தில் திடீரென்று ஒரு தெய்வீகக் களை மண்டலம் கட்டுவதைப் போல் பிரமை அவருக்கு ஏற்பட்டது!


அதற்குப் பிறகு ஹேமா அவள் வீட்டு வாசலில் நிற்கும்போதெல்லாம் ஆ ரா வ மு து மலர்ந்த முகத்துடன் அவளுடன் ஏதாவது சாக்கு வைத்துக் கொண்டு பேச்சுக் கொடுப்பார். அவள் தெருவில் வந்து, காய்கறிக்காரனையோ, பூக்காரியையோ கூப்பிட்டால் தன் வீட்டுத் திண்ணையில் 'எப்படா' என்று காத்துக் கொண்டிருப்பவர் போல் ஆராவமுதும் சேர்ந்து உரக்கக் குரல் கொடுத்துக் கூப்பிடுவார். காய்கறிக்காரன் அருகில் வந்ததும் 'என்னப்பா செவிடா நீ? அந்தப் பொண்ணு எத்தனை தடவை உன்னைக் கூப்பிடும்?' என்று ஹேமாவைப் பார்த்துக் கொண்டே கேட்பார்.

பூக்காரி ஹேமாவிடம் அதிக விலை கூறினால் 'என்ன அம்மே! ஊருக்கு அவங்க புதுசுன்னு விலை சொல்றியா? நியாயமா விலை சொல்லிச் சரியா முழம் போட்டு அளந்து கொடு!' என்று அதட்டுவார்.

ஹேமாவைத் தபால் நிலையத்திலோ, கடைத் தெருவிலோ, எங்கு பார்த்தாலும் ஆராவமுது முகத்தில் புன்சிரிப்புத் தவழ, 'என்னம்மா, எங்கே வந்தே?' என்று மிகுந்த பரிவுடன் கேட்பார். அவள் பதில் சொல்வதற்குள் அவரே முந்திக்கொண்டு 'வெயிலில் இவ்வளவு தூரம் ஏம்மா வந்தே? வேறு யாராவது வந்து வாங்கக் கூடாதோ?' என்று ஆதங்கத்துடன் கேட்பார். எல்லாவற்றுக்கும் அவளிடமிருந்து நாணம் கலந்த ஒரு புன்சிரிப்புத்தான் மறுமொழியாக மலரும்!

ஹேமா வீட்டார் அந்தக் காலனிக்கு வந்து இரண்டு மூன்று மாதங்களுக்குள் ஆராவமுது ஹேமாவுடன் சிரிக்கச் சிரிக்கப் பேச ஆரம்பித்து விட்டார். ஒன்றிரண்டு பேச்சு வார்த்தைகளில் ஆரம்பித்த இந்த உரையாடல் நாளடைவில் வளர்ந்து பத்து நிமிஷங்கள் இருபது நிமிஷங்கள் என்று நீடிக்கத் தொடங்கிற்று. தன்மீது அவருக்கு அலாதியான ஒரு பரிவும் பற்றும் உள்ளது அவர் பேச்சில் தொனிப்பதை ஹேமா முதலில் உணரவில்லை. என்றாலும் பிறகு...பிறகு அதை அறியத்தான் செய்தாள். அவர் மனத்தில் எதையோ, எந்த எண்ணத்தையோ, ஆசையையோ மறைத்துக் கொண்டுதான் தன்னிடம் இத்தனை பரிவுடன் பேசுகிறார் என்று நினைக்க ஆரம்பித்தாள். தான் எது செய்தாலும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதும், தன்னிடம் வலுவில் பேசுவதற்கு எங்கு வாய்ப்புக் கிட்டும் என்று எதிர்பார்த்து நிற்பதும் அவள் உள்ளத்தில் நாளடைவில் அவரிடம் ஓர் எரிச்சலையும் வெறுப்பையும் — ஏன் ஓர் அச்சத்தையும்கூட— வளர்த்து வந்தது. ஆனால், பாவம்! ஆராவமுதுக்கு அது தெரியாது!

அன்று வாசலில் ஏதோ விற்பதை அழைக்கும்படி அவள் தாயார் ஹேமாவிடம் சொல்ல ''உக்கும்...நீ போய்க் கூப்பிடம்மா! எனக்



குத் தெருப் பக்கம் தலைகாட்டவே பிடிக்க வில்லை'' என்றாள் சிறிது கடுப்புடன்.

தாயாருக்கு மகள் கூறுவது விளங்கவில்லை. ''ஏண்டி, உனக்கு என்ன வந்தது?''

''நல்ல விடாகப் பார்த்து வந்தோம்!... எப்பப் பார்த்தாலும் எதிர் வீட்டு மாமா என்னை....'' ஹேமா முடிக்கவில்லை.

தாயாருக்குத் தூக்கிவாரிப் போட்டது. விபரீதமான எண்ணங்கள் உள்ளத்தில் குவி யத் தொடங்கின.

''என்னடீ சொல்லறே? பார்த்தால் அவர் ரொம்ப நல்லவர் போல...உபகாரி போலத் தோன்றுகிறாரே! எல்லாம் வெளி வேஷம் தானா?'' என்று கூறிவிட்டுத் தானே வியா பாரம் செய்ய வெளியில் வந்தாள்.

ஹேமாவின் வருகைக்காகக் காத்திருந்த ஆராவமுதுக்கு அது பெரும் ஏமாற்றமாக இருந்தாலும் வெளியில் காட்டிக்கொள்ளா மல் அவள் தாயாருடன் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார். அவர் பேசிக்கொண்டிருக்கும் போதே அவள், ''எனக்கு உள்ளே வேலை இடக்கு'' என்று வெடுக்கென்று கூறிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டாள்.

அதையும் தவறாக நினைக்கவில்லை ஆரா வமுது!

அடுத்த வாரம்; ஒரு நாள் மாலை ஹேமா தெருவுக்குப் புறப்படுவதற்கும் ஆராவமுது தம் வேலையாக வெளியே கிளம்பினதுக்கும் சரியாக இருந்தது. தன் மகளைத் துரத்திக் கொண்டுதான் ஆராவமுது போகிறார் என்று ஹேமாவின் தாயாருக்குச் சந்தேகம் தோன்றி விட்டது. அவள் சந்தேகப்பட்டதைப்போல் விளக்கு வைக்கும் நேரமாகியும் ஹேமா வீடு திரும்பவில்லை. நேரம் ஆக ஆக அவ ளுக்கு மனத்தில் இன்னதென்று விவரிக்க முடியாத திகில் பற்றிக் கொண்டு விட்டது. உடம்பு பதறிற்று.

எட்டரை மணி சுமாருக்கு ஹேமா பர பரப்புடன் வீட்டுக்குள் நுழைந்தாள். உடனே அவள் தாயார் அவளைக் கட்டி அணைத்துக் கொண்டு, ''ஏண்டி இவ்வளவு நேரம்? எனக்கு ஒரே பயமாகப் போய்விட்டது! போலீசுக்குக் கூடப் போன் பண்ணலாமா என்று பார்த்தால், உங்கப்பா இன்னும் ஆபிசி லிருந்தே வந்தபாடில்லை!..'' என்று கூறினாள்.

''இன்னிக்கு என் தலை தப்பினது தம் பிரான் புண்ணியம் அம்மா!''

''ஏன்... ஏன்...?'' தாயாருக்குப் பட படப்பில் பேச்சே வரவில்லை.

''எல்லாம் இந்த எதிர் வீட்டுக்கார ரால்தான்...''

''என்ன நடந்தது? அவர் உன் பின்னா லேயே துரத்திண்டு வந்தாரே!''

''அது எனக்குத் தெரியாது; நான் பார்க்க வும் இல்லே. 'பார்க்' பக்கமாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்தபோது திடீரென்று இவர் என் முன் வந்து நின்றார்! பல்லைப் பல்லைக் காட்டினார்; 'தக்கே பிக்கே'ன்னு என்னமோ என்னைப் பத்திப் பேச ஆரம்பிச்சார். அந்த வேளையில் ரோட்டில் ஆள் நடமாட்டம்கூட அதிகமில்லே. அவரிடமிருந்து எப்படித் தப் பித்துக் கொண்டு போகப் போகிறோம் என்று நான் நினைத்துக் கொண்டேயிருக்கும்போது ஒரு பழைய மாடல் கார் வந்து நின்றது. அதிலிருந்து ரெண்டு மூணு பேர் — முகத்தைப் பார்த்தாலே ரௌடிகள் போல இருக்கு — இறங்கி இவரிடம் வந்தார்கள். அதில் ஒரு வன் இவரைச் சாடையாகக் கூப்பிட்டு 'உங் களை ஃபாலோ பண்ணிக்கிட்டேதான் வரோம். இப்ப நல்ல சான்ஸ்... உம்னு நீங்க சொல்ல வேண்டியதுதான்; 'கபக்'னு காரியம் முடிஞ்சு போவும்!' என்று மெதுவாகக் கூறினான்.

''எனக்கா ஒரே திகிலாப் போய்விட்டது. கைகால் ஓடலை; என்ன என்னமோ நினைக்க ஆரம்பிச்சுட்டேன். நான் இனிமேல் உயி ரோட, மானத்தோட உன் முகத்தில் விழிக்கப் போகிறேனா என்று நினைத்தபோது அழுகை கூட வந்து விட்டது. என் கதி இன்னிக்கு என்ன ஆகப் போகிறதோ என்ற திகிலுடன் எதிர்ச்சரகில் இருந்த ஒரு வீட்டின் மாடிப் பக்கம் திரும்பினேன். என்ன ஆச்சரியம்! திருச்சியில் என்னோடே கல்லூரியில் படித்த மஞ்சுளா அங்கே நின்னுண்டு இருந்ததைப் பார்த்தேன். அவ்வளவுதான். 'மஞ்சு... மஞ்சு...'ன்னு கத்திண்டே ஓட்டமாக அவள் வீட்டுக்குள் புகுந்து கொண்டேன். இத்தனை நேரம் அங்கேதான் இருந்தேனம்மா!'' என்று ஹேமா கூறி முடித்தாள்.

''இதைச் சும்மா விடக் கூடாது! அவர் வீட்டுக்கே போய்ச் சண்டை போட்டுவிட்டு வருகிறேன்!'' என்று ஹேமாவின் தாயார் கிளம்பினாள்.

ஹேமா தன் தாயாரின் கையைப் பிடித்து இழுத்து ''நீ ஒன்றும் அவர் வீட்டுக்குப் போக வேண்டாம், அம்மா! அப்பா வரட்டும், அவ ரிடம் சொல்லி ஏதாவது வழி பண்ணச் சொல்லலாம்!'' என்று கூறி நிறுத்தினாள்.

அன்றிரவு ஹேமாவின் தகப்பனார் வந்த தும் நடந்தவற்றை யெல்லாம் தாயும் மகளு மாகச் சொன்னார்கள். அவருக்கு அவர்கள் கூறுவது முதலில் ஒன்றுமே விளங்கவில்லை. ஆச்சரியமாக இருந்ததே ஒழிய, கோபமோ, ஆத்திரமோ ஏற்படவில்லை.

''நீங்கள் சொல்வதிலிருந்து அவர்மீது நாம் என்ன குற்றம் சாட்ட முடியும், ஹேமா? உன்னோடு பேசினது தப்பா? வழியில் அகஸ் மாத்தா உன்னைச் சந்தித்தது தப்பா? எனக்கு ஒண்ணுமே விளங்கலையே!'' என்றார்.

''உங்க சமாசாரம் எனக்குத் தெரி யாதா? கட்டிண்ட பெண்டாட்டியையே யாராவது ஒருத்தன் வந்து தூக்கிண்டு போனாலும் 'அசமஞ்சம்' போலச் சும்மா பார்த்திண்டே நிப்பேள்! என் தலையெழுத்து'' என்று வாசலுக்குப் போனாள் அவர் மனைவி.

எதிர் வீட்டுத் திண்ணையில் ஆராவமுது உட்கார்ந்திருந்தார் — பாக்கை மென்ற வண் ணம், வெற்றிலையின் நரம்பைக் கிழித்துவிட் டுச் சுண்ணாம்பு தடவிக்கொண்டே.

ஹேமாவின் தாயாருக்கு அவரைக் கண்ட தும் ஒரு வெறி வந்தாற்போல், ''மனுஷ னைப் பாரு, மனுஷனை!... பெரிய பக்திமான் போல நடிப்பும், பேச்சும்! வயசு ஆயிடுத்து குட்டிச்சுவருக்கு ஆறுப்போல, என்ன பிர யோசனம்? இப்படிப் பெண்ணாசை பிடிச்சு அலைய வேண்டாம்! மானம் கெட்ட ஜன்மம்! உறவு முறையா வைச்சிருக்கு? எப்பப் பார்த் தாலும் பேச்சும், சிரிப்பும்!...'' என்று கத்தி

விட்டு வாசற் கதவைத் தடால் என்று சாத்திக்கொண்டு உள்ளே வந்தான்.

முதலில் ஆராவமுதுக்குத் தலையும் புரியவில்லை; காலும் புரியவில்லை. அவன் தம்மைப் பார்த்துப் பார்த்துக் கையை ஆட்டிக் கொண்டு பேசினதால் தம்மைக் குறிப்பிட்டுத்தான் பேசுகிறான் என்று தெரிந்து கொண்டார். சிறிது சிறிதாக விடியற்காலையில் சூரியனின் ஒளி பரவி வருவது போல, தாம் ஹேமாவிடம் ஏதோ தகாத முறையில் நடந்து கொண்டு விட்டதாகத் தம்மீது குற்றம் சாட்டுகிறான் என்பது புலனாயிற்று. அவர் முகம் கறுத்து விட்டது. அவரால் தலைதூக்க முடிய வில்லை. ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே வீட்டுக்குள் போய்விட்டார்.

அதற்குப் பிறகு ஆராவமுது திண்ணையில் உட்காரவில்லை. பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஹேமாவின் குடும்பத்தினர் அந்த வீட்டையே காலி செய்து கொண்டு போய் விட்டனர் என்பதை அறிந்ததும்தான் திண்ணையில் வந்து உட்கார்ந்தார். எதிர் வீடு பூட்டிக் கிடந்ததையும், வாசலில் அழகுக் கோலம் காணப்படாததையும் காணும் போதெல்லாம் அவர் இதயம் துடிதுடித்தது. பெருமூச்சு வெடித்த வண்ணம் இருந்தது.

அதற்குப் பிறகு ஆராவமுதுக்கு அந்தக் காலனியே களை இழந்தது போலத் தென்பட்டது. சென்ற ஆறேழு மாதங்களாக லட்சுமி கடாட்சம் கொஞ்சிக் கொண்டிருந்த எதிர் வீட்டைப் பார்த்தபோதெல்லாம் அவர் அடிவயிற்றையே கலக்கிற்று. மொட்டும் மலருமாகப் பூத்துக் கப்பும் கிளையுமாக இருந்த செடியின் கிளைகளை யெல்லாம் வெட்டி மொட்டையாக்கி விட்டதைப்போல் அவர் மனம் துடித்தது. அந்த வீட்டைப் பார்த்துக்கொண்டே இனி அங்கு குடியிருக்கத் தம்மால் முடியாது என்ற நிலைக்கு வந்ததும் அவரும் வேறு வீடு பார்த்துக் கொண்டு குடி பெயர்ந்தார். புதிய இடத்தில் நல்ல வேளையாக, தம் வீட்டுக்கு எதிரே வீடுகளே இல்லாமல் கோவிலின் மதிற்சுவர் கம்பீரமாக நின்றதைப் பார்த்ததும் அவர் உள்ளத்தில் ஒரு திருப்தி நிலவிற்று.

மறுநாள் காலை வெளியே வந்த அவர் கண்களில் முதலில் தென்பட்டது அடுத்த வீட்டுக் கோலம்தான்! அதைப் பார்த்ததும் அவருக்குத் திக்கென்றது. அதே பழைய கோலம்! அதே வளைவுகள், அதே அச்சு! அவரைக் கண்டு அந்தக் கோலம் சிரிப்பது போலத் தோன்றியது அவருக்கு.

அடுத்த சிறிது நேரத்துக்குள் ஹேமாவின் குடும்பத்தார்தான் அந்த வீட்டில் குடியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்டார். விதியின் விளையாட்டை எண்ணிக் கொண்டே ரேழித் திண்ணையில் போய் அவர் உட்கார்ந்து கொண்டார்.

இனி ஆராவமுது திண்ணைப் பக்கம் தலை காட்ட முடியாது. எந்த அழகு அழகான கோலங்களைக் கண்டு மோகித்தாரோ அதே கோலங்கள் இப்போது கனவிலும் நனவிலும் வந்து அவரைப் பயமுறுத்தின.

இப்போது அவர் தினந்தோறும் முகக்ஷவரம் செய்துகொள்வதில்லை. சலவை ஆடைகளை அணிவதில்லை! துளிர் வெற்றிலையை நிதானமாகப் போட்டுக் கொண்டு ரசிப்பதில்லை.

அவர் சுபாவத்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்ட அவர் மனைவி பங்கஜம் மிகவும் பயந்து போய்விட்டாள். அவருக்கு ஏதோ மன வருத்தம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைத்தாள். ஒருவேளை, அடுத்த வருஷம் 'ரிடையர்' ஆகப் போகிறோமே என்ற ஏக்கத்தில் அப்படி இருக்கிறாரோ என்ற நினைப்புடன் "ரிடையர் ஆனா என்னவாம்? விச்ராந்தியா இருபத்தி நாலு மணி நேரமும் பெருமாளைச் சேவிச்சுண்டு இருங்களேன்! ஏன் கலங்கறேள்? ரகுதான் கைநிறைய சம்பாதிக்கிறானே, உங்களுக்கு என்ன குறைச்சல்?" என்று ஆறுதல் சொன்னாள்.

ஆராவமுது 'உம்...' என்று ஒரு பெருமூச்சு விட்டார்.

"ரகுவுக்கு இந்தத் தையிலேயே ஒரு கல்யாணத்தைச் செய்து வைத்து விட்டால்..."

அதற்கும் ஆராவமுது ஒரு பெருமூச்சுத்தான் விட்டார். கண்ணை மூடிக் கொண்டார். வாய் திறக்கவில்லை.

அடுத்த வாரமே அவரைப் பார்க்க அவர் மகன் ரகு இரண்டு மாத லீவு எடுத்துக் கொண்டு 'பறந்து' வந்தான். டாக்டர் வருவதும் போவதுமாக வீடு அமர்க்களப்பட்டது.

அடுத்த வீட்டில் யாரோ புதிதாக ஓர் இளைஞன் வந்திருக்கிறான் என்பதை ஹேமாதான் முதலில் பார்த்தாள். அடிக்கடி பார்க்கத் தோன்றிற்று அவளுக்கு; அவனைப் போல் அவ்வளவு அழகான ஒரு வாலிபனைத் தான் பார்த்ததாக அவளுக்கு நினைவே வரவில்லை. அவளுக்கு அவனைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றுகூடத் தோன்றிற்று. அவனுடைய களையான முகமும், கருட்டை மயிரும், கூர்மையான மூக்கும், அகன்ற புருவமும் குட்டி போட்ட பூனை போல் அவனுடைய சுறுசுறுப்பும் அவள் தூக்கத்தில் கூட வந்து அவள் மனக் கண் முன்னால் நடமாடின.

அடுத்த நாள் ஹேமா, தன் தாயாரிடம் "அம்மா! யாரோ பக்கத்து வீட்டுக்குப்

உங்கள் குடும்பத்தினரின்
உடல்நலம் ஓங்கியிருக்க
அவசியம் அளியுங்கள் மிகச்
சிறந்ததையே

அவர்களுக்கு விவா கொடுங்கள்.



விவா நூதன உணவு தொழில் நுட்பத்திறமையில் உருவானது. இதில் மற்ற ஆரோக்கிய உணவுப் பானங்களில் உள்ளதைப்போன்று தூய்மையான, முழுமை பெற்ற ஆடைப்பாலும் பார்லி மால்ட்டும் உள்ளன. ஆயினும் விவாவில் மட்டுமே கோதுமை மால்ட் அடங்கியுள்ளது.

கோதுமை மால்ட் எதற்கு?

எதற்கெனில், அதில் வளமைமிக்க கார்போஹைட்ரேட், புரதங்கள், விடமின்கள் மற்றும் கனிஜ சத்துக்கள் எளிதில் சீரணிக்கும் வகையில் சேர்க்கப்பட்டுள்ளன.

கோதுமை மால்ட் கலந்திருப்பதால் விவா அதிக அளவு ஊட்டச்சத்து உள்ளதாய், பூரணமான இன்சுவையோடு, வளமிக்க பொன்னிறம் கொண்டு, உடனடியாகக் கரையும் தன்மையோடு விளங்குகிறது.

ஆகவே, உங்கள் அன்றாட உணவிலுள்ள பற்றாக்குறைகளை ஈடுசெய்ய சரியான, போதுமான ஊட்டச் சத்து அளிக்கவேண்டுமென்றால் அதற்கு விவா போல வேறு எதுவும் சிறந்ததல்ல

மிகச் சிறந்ததையே தேர்ந்தெடுக்க இதோ அரியதொரு வாய்ப்பு.

விவாவையே தேர்ந்தெடுங்கள்.

ASP/JIL-V-IA/73 TAM

இந்தியாவில் தயாரிப்போர்,
ஜக்ஜித் இண்டஸ்ரீஸ் லிட்.

விவா

உற்சாகமான ஆரோக்கிய வளர்ச்சிக்கு தினமும் விவா.

புதுசா வந்திருக்கானே, நீ பார்த்தாயா?'' என்று கேட்டாள்.

''இல்லையே, என்ன விசேஷம்?''

''விசேஷம் ஒண்ணுமில்லே.. சும்மாத்தான் கேட்டேன்!'' என்று கள்ளச் சிரிப்பு சிரித்துக் கொண்டே மழுப்பி விட்டாள்.

அன்று மாலையே ஹேமாவின் தாயார் ரகுவைப் பார்த்துவிட்டாள். 'இவ்வளவு அழகான பிள்ளையாண்டான் நம்ம பக்கத்து வீட்டிலேயே இருக்கிறானே' என்று ஆச்சரியப் பட்டாள். ஹேமாவுக்கு இப்படி ஒரு பையன் மணமகனாக வாய்க்க வேண்டுமே என்று பெருமாளை நினைத்துக் கொண்டாள். அப்போது தான் ஹேமாவின் கேள்வியும், சென்ற இரண்டு நாட்களாக ஏதாவது சாக்கில் வாசலில் அடிக்கடி அவள் நிற்பதன் அர்த்தமும் அவளுக்குப் புரிந்தன.

மறுநாள் வெள்ளிக் கிழமை. ஒரு தட்டில் தாம்பூலத்தை எடுத்துக்கொண்டு தாயும் மகளுமாகப் பக்கத்து வீட்டுக்குச் சென்றனர்.

கூடத்தில் சாய்வு நாற்காலியில் ஆராவமுது சாய்ந்தாற்போல் உட்கார்ந்து கொண்டிருந்ததைக் கண்டதும் இருவரும் 'ஷாக்' அடித்ததைப் போல நின்று விட்டார்கள். மேலே அடியெடுத்து வைக்கக் கால் வரவில்லை. இருவர் முகத்திலும் கலவரமும் ஏமாற்றமும் எதிரொலித்து நின்றன.

'' வாங்கோ, வாங்கோ!... ஹேமா, வாம்மா! உட்காரு! ஏதடா, புதிதாகக் குடிவந்த இடத்திலும் இந்தக் கிழவன் துரத்திக்கொண்டு வந்திருக்கிறானே என்று ஆச்சரியமா இருக்கா? பயப்படாதே'' என்று கூறிவிட்டு, சமையற்கட்டுப் பக்கம் திரும்பி, ''பங்கஜம்... பங்கஜம், இதோ பார், இங்கு யார் வந்திருக்கான்னு!...'' என்று தம் மனைவியை அழைத்தார்.

பங்கஜம் விரைந்து வந்து, ''வாருங்கோ! ஹேமா... வா, உட்காரு!'' என்று உபசரித்தாள்.

''வெள்ளிக் கிழமை.... தாம்பூலம் கொடுக்க வந்தேன்...'' என்று கூறிக் கொண்டே வெற்றிலை பாக்குத் தட்டை நீட்டினாள் ஹேமாவின் தாயார். அந்தச் சூழ்நிலையில் ஒரு நிமிஷம் கழிவது ஒரு யுகமாகத் தோன்றியது. எதையோ நினைக்கப் போக அது எப்படி எப்படியோ சுழன்று வட்டமிட்டிருக்கிறதே என்று தவித்தாள்.

அதே சமயத்தில் வெளியிலிருந்து உள்ளே வந்த ரகு, ''அம்மா! ஹார்லிக்ஸ் ஒரு கடையிலும் கிடைக்கவில்லே. இது தெரிந்திருந்தால் பம்பாயிலிருந்து வர்றபோது இரண்டு பாட்டில் வாங்கி வந்திருப்பேன்'' என்று கூறவும், ஹேமாவும், அவள் தாயாரும் அவன் பக்கம் திரும்பினர்.

''இவன் என் பிள்ளை. பம்பாயில் ஒரு பெரிய கம்பெனியில் மானேஜராக இருக்கான்....!''

'' இன்னும் கல்யாணம் ஆகவில்லையாக்கும்....?''

''இந்தத் தை மாதத்துக்குள்ளே முடிக்கணும்னு நினைச்சோம். நாலைஞ்சு ஜாதகங்கள் வேறு வந்திருக்கு... அதற்குள்ளே இவருக்கு இப்படி வந்துடுத்து...''



ரேடார் மூக்குக் கண்ணாடிகள்!

புது விதமான 'ரேடார்' மூக்குக் கண்ணாடி அந்தகர்களுக்கு வழியைத் தெரிந்து கொண்டு முன்னேறும் முறையில் தயாரிக்கப்பட்டு வருகிறது. பிரிட்டனில் உள்ள புனித டன்ஸ்டன் தொழிலகம் உருவாக்கி வரும் இந்த நவீன கண்ணாடிக்கான யோசனையை எடுத்துச் சொன்னவர் பிரிட்டிஷ் பேராசிரியர் லெஸ்லே கே.

வௌவால் பறக்கும்போது கையாளும் யுக்தியை சோனார் எதிரொலிப்புத் தத்துவத்தை- பின்பற்றியே இந்த மூக்குக் கண்ணாடி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மூக்குக் கண்ணாடி 'சிக்னல்' ஒலி அலைகளை எழுப்பி, தடைகளிலிருந்து கிடைக்கும் எதிரொலியைக் கிரகித்துக் கொண்டு இதை அணிந்திருப்பவரை எச்சரிக்கிறது. ஏதாவது ஒரு பொருள் வலது பக்கம் இருந்தால் அந்தகர் வலது காதில் எதிரொலியை உணர்வார். இப்படிப் பழகிவிட்டால் முட்டுக்கட்டைகளைத் தவிர்த்து நடப்பது எளிதாகி விடும்.

''நான் வீட்டுக்குப் போறேனம்மா! அப்பாவுக்கு ஆபீசுக்கு நேரமாயிடுத்து!'' என்று ஹேமா ரகுவைப் பார்த்துக் கொண்டே மெதுவாக நழுவினாள்.

ஹேமாவின் தாயார் தயங்கிக் கொண்டே ''ஹேமாவின் ஜாதகத்தையும் தரேன்... பாருங்கோ...'' என்றாள்.

''மன்னிச்சுடுங்கோ! ஹேமாவின் ஜாதகம் வேண்டாம்! அதைப் பார்க்க எனக்கு யோக்கியதையுமில்லே; அதிர்ஷ்டமுமில்லே!'' என்றார் ஆராவமுது.

ஹேமாவின் தாயாருக்கு முகம் கன்றி விட்டது. கண்களில் நீர் பளபளத்தது.

''என்னை மன்னிச்சு... பழையதை யெல்லாம் மறந்துடுங்கோ!''


''எப்படியம்மா மறக்க முடியும்? அந்தக் கோலத்தை என்றைக்குப் பார்த்தேனோ அன்றைக்கே ஹேமாவை என் வீட்டில் எப்போதும் கோலம் போடும்படி செய்ய வேண்டும் என்று 'பிளான்' போட்டேன்; அதற்குள்....''

''உங்க 'பிளான்' தவறவே யில்லே! இரண்டு குடும்பங்களும் எதிரும் புதிருமாக இருக்கக் கூடாதுன்னுதான் பக்கம் பக்கமாக்கொண்டு வந்து பெருமாள் சேர்த்து விட்டார்! நமக்குள்ளே ஜாதகம் பார்க்க வேண்டியதேயில்லே! முகூர்த்தத்துக்குத்தான் நாள் பார்க்க வேண்டும்!'' என்று கூறிவிட்டுச் சிரித்தாள் ஹேமாவின் தாய். அடுத்த நிமிஷம் ஹேமா கையில் ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலை எடுத்துக் கொண்டு வந்து ஆராவமுது முன்னால் வைத்தாள்!

சிறுதொழில் முனைவர்களே, கவனியுங்கள்!

டிசம்பர் முதல் தேதி நினைவில் இருக்கட்டும்
சிறுதொழில் அமைப்புகள் பற்றிய

தேசியக் கணக்கெடுப்பு துவங்கும் தேதி



கணக்கெடுப்பவர்களிடம், சரியான, முழுமையான விவரங்களைத் தெரிவிக்கவும்.
கணக்கெடுப்பினால் வேலை வாய்ப்பு, கடனுதவி, மூலப்பொருள்கள் முதலியவற்றுக்காக சரிவர திட்டமிட முடியும். உங்களுக்குத் தக்க வசதிகள் உறுதியாகக் கிடைக்கவும் வகை செய்ய முடியும்.



அபிவிருத்திக் கமிஷனர் சிறுதொழில்கள்

தாம்பூலம்

நல்ல பல நாடகங்களை அரங்கேற்றி நல்ல பெயருடன் விளங்கும் சாந்திநிகேதன் நாடகக் குழுவினரின் ''தாம்பூலம்'' பொன் விழாவுக்கு அனைவரையும் தாம்பூலம் வைத்து அழைக்கிறது! இந்த நாடகத்தின் சிறப்பு நடிக, நடிகையர்களின் ஒத்துழைப்பும், டைரக்டர் டி. எஸ். சேஷாத்திரி அவர்களின் சிரத்தையும்தான்.


திடுக்கிடும் சம்பவமோ, அதிர்ச்சி தரும் கொலையோ, கற்பழிக்கும் கண்ணராவியோ பெற்றோருக்குத் தெரியாமல் காதலனோடு வெளியேறும் வேதனையோ—எதுவும் இல்லை ''தாம்பூலத்தில்''. ஆனால் நாம் உபயோகிக்கும் தாம்பூலத்தில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகிய மூன்று பொருள்கள் இன்றியமையாதவையாயிருந்து இன்சுவை ஊட்டுவதுபோல்—பாத்திரப் படைப்பு, நடிப்பாற்றல், சிறப்பான வசனம் ஆகிய மூன்றும் நாடகத்துக்குச் சுவையூட்டுகின்றன.


ஹெட்கான்ஸ்டபிளின் மகள் வள்ளியின் பாத்திரம் சற்றுப் புதுமையானது. ஒரு பக்காத் திருடனிடம் மனத்தைப் பறி கொடுத்து, அவனால் ரகசியமாகத் தாலியும் கட்டப்பட்டு விடுகிறாள். (ஊரறியப் பிறகு அவன் தாலி கட்டுவான் என்ற எண்ணத்தில் இதை ஏற்க நேர்ந்ததாம்!) நாடக சஸ்பென்ஸுக்காக வலியப் புனையப்பட்ட சம்பவமாகத்தான் இதைக் கொள்ள வேண்டியிருக்கிறது! வள்ளியாக நடித்தவர் விஜய சந்திரிகா. துடுக்குக்காரியாக வந்து பட்பட்டென்று பேசித் திகைக்க வைக்கும் இவரால், ரகசியத் தாலி விஷயத்தை வெளியிட முடியாமல் விம்மி வெடித்துக் கண்ணீர் உகுத்து ரசிகர்களைக் கண் கலங்க வைக்கவும் முடிகிறதே! சபாஷ், விஜய சந்திரிகா !.

குழந்தைவேல் ஆச்சாரியின் தங்கை — வள்ளியின் தோழி, தங்கமாகத் தோன்றுபவர் பி. ஆர். பிரேமா. காதலிக்காமல் திடீர்க் கல்யாணம் நடந்து விடுகிறது தங்கத்துக்கு. அழகிய பெண் பாத்திரம் மேடைக்குத் தேவை தானே!

டி. கே. எஸ். சந்திரன், குழந்தைவேல் ஆச்சாரி. உருக்கமாக நடிக்கிறார். அருணாசல ஆச்சாரி, பொறுமை பிடித்த பாத்திரம். ராஜுவேலு ஒரு தனிப் பாணியைக் கையாள்கிறார். கலகக்கார அம்பலமாக வந்த ஏ. என். கண்ணன் ஒரு நல்ல நடிகர். பெரிய எவர்சில்வர் பாத்திரங்கள் பளபளப்பாக, அழகாக அடுக்கி வைத்திருப்பது போல் இந்நாடகத்திலும் பல்வேறு பாத்திரங்கள் வந்தும் ஓர் இணைப்பான தொடர்பு இல்லை. (சிந்தாமணி என்ற பைத்தியக்காரப் பாத்திரத்தையும், மூக்கையன் என்ற கான்ஸ்டபிளையும், குமரேசனையும் உதாரணமாகக் கூறலாம்.)

கதை, வசன ஆசிரியர் கற்பூரம் சிங்கார வேலன் மொத்தமாகப் பாராட்டுக்குரியவர். **— காந்தன்**





Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

